Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினமுரசு
THINAMURASU

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 14 ஞாயிற்றுக்கிழமை (29.12.2013) பக்கங்கள் 20 ஓசை - 089

Tilko Jaffna City Hotel
TILKO
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3210)

08



வெளியேற்றம்

13



கிராக்கி

# இலங்கையின் சர்வதேச தொடர்புகள் தீர்க்கமான போராட்டம் ௬௦ நாட்களில்

## கூறுகிறார் தயான் ஜயதிலக

(கொழும்பு)

ஜெனிவாவில் இன்னும் 60 நாட்களில் அதாவது எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பமாகப் போவது இலங்கையின் சர்வதேச தொடர்புகள் சம்பந்தமான தீர்க்கமான போராட்டம் என முன்னாள் இராஜதந்திரியான தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச வாக்கு வங்கியை இழந்த நாடாக இந்த போராட்டத்திற்குள் நுழையும் இலங்கை மிகவும் பாரதூரமான சிரமங்களை எதிர்நோக்க வாய்ப்புள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர்க்குற்றங்கள் தொடர்பில் இலங்கை தேசிய ரீதியிலான விசாரணைகளை ஆரம்பிக்காவிட்டால், சர்வதேச விசாரணை ஒன்றை தொடங்குவதற்கு முன்னிலையை எடுத்து செயற்பட போவதாக பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் வெளியிட்ட கருத்து மிகவும் பாரதூரமான எச்சரிக்கையாகும் என்பதே பலரது கருத்தாகும்.

டேவிட் கமரூன் பற்றி நாம் எதனைக் கூறினாலும் அவர் பிரித்தானியப் பிரதமர்.

பிரித்தானியப் பிரதமர் என்பவர் சில நாடுகளில் உள்ள பிரதமர்களை போன்று தமது அதிகாரிகளை கையெழுத்திடும் கடிதங்கள் பற்றிய அறியாத பிரதமர்களைப் போன்ற பிரதமரல்ல.

டேவிட் கமரூன் கொழும்பிலும் பிரித்தானிய நாடாளு மன்றத்திலுமே இலங்கை சம்பந்தமான இந்த இராஜதந்திர அச்சுறுத்தலை விடுத்தார். இது கேலியான விடயமல்ல. மார்ச் மாதத்திற்குள் மறைந்து போய்விடும் அச்சுறுத்தலும் அல்ல.

இராஜதந்திர ரீதியில் பிரித்தானிய இலங்கைக்கு விடுத்துள்ள முதல் சவால் இதுவல்ல. இதற்கு முன்னர் பிரித்தானிய

(19) பக்கம் பார்க்க...

### இலங்கை தொடர்பான 'சனல் 4' காணொலி போலி

#### தகவல், தொழில் நுட்ப முகவர் நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பான சனல்-4 தொலைக்காட்சியின் காணொலிகள் போலியானவை என அதனை நன்கு ஆராய்ந்த நிபுணர்கள் தெரிவித்துள்ளதாக இலங்கை தகவல் மற்றும் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் டபிள்யூ. ஹேபசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

(19) பக்கம் பார்க்க...

# சர்வதேச இலாபத்தை கருதி செயற்படுகிறது கூட்டமைப்பு

## அரசு கடும் விசனம்

(லண்டன்)

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த கோரிக்கையை சர்வதேச இலாபங்களைக் கணக்கிலெடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித் திருப்பதாக அரசாங்கம் விசனம் தெரிவித்துள்ளது.

ஆளும்கட்சியின் தலைமைக் கொறடா அமைச்சர் தினேஸ் குணவர்தன பி.பி.சி.யிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாடாளுமன்றத் தெரிவுக்குழு அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்தைப் பற்றி மட்டுமே ஆராயும் நோக்கம் கொண்டது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கருதுவது சிறுபிள்ளைத் தனமானது.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி வாக்குறுதி அளித்திருந்த சந்தர்ப்பத்தில், அந்த வாக்குறுதி நிறை வேற்றப்படாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறி, வந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுமாதிரி நடந்துகொள்ளும் முதலாவது சந்தர்ப்பம் அல்ல. ஜனாதிபதி, வடக்கு மாகாண சபையின் தேர்தலை நடத்தி தனது அரசாங்கத்துக்கே சாதக

(19) பக்கம் பார்க்க...

## புதிய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும்

### அமைச்சர் வாசு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் புதிய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் 14 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு புதிய நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே அவர்

(19) பக்கம் பார்க்க...

## அரசுக்கு ஏற்பட்டுள்ள அபாயநிலை; மூடிமறைக்கிறார் அமைச்சர் பீரிஸ்

### குற்றஞ்சாட்டுகிறது ஐ.தே.க.

சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசுக்கு எதிராக ஏற்பட்டுள்ள அபாய நிலைமையை அமைச்சரவைக்கும் நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்தாமல் அவற்றை வெளிவிவகார அமைச்சர் மூடி மறைக்கின்றார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எதிர்வரும் மார்ச்சில் ஜெனிவாத் தொடரில் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கை இலங்கை அரசுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும் என அக் கட்சியின் தலைமைத்துவ சபை உறுப்பினரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல சுட்டிக் காட்டினார். ஜெனிவாத் தொடரில் இலங்கை அரசுக்கு எதிராக ஏற்படும் சவால்கள் மற்

(19) பக்கம் பார்க்க...

## மன்னார் மனிதப் புதைகுழியில் நேற்றும் மனித எச்சங்கள் மீட்பு



மன்னார், திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழி நேற்றைய தினம் மீண்டும் தோண்டப்பட்டது.

மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் மற்றும் அனுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல்.வைத்திய ரெட்ண ஆகியோர் முன்னிலையில் குறித்த மனிதப் புதைகுழி தோண்டப்பட்டது.

மன்னார் நீதவானின் உத்தரவிற்கமைவாக நேற்றுக் காலை 8.30 மணிக்கு குறித்த மனிதப் புதைகுழி தோண்டும் நடவடிக்கை ஆரம்பமாகியது.

இதன்போது, மண்டையோடு மற்றும் மனித எச்சங்கள் சிலவும் புதிதாக தோண்டப்பட்ட பகுதியில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டன.

இந்த மனிதப் புதை குழி தோண்டும் போது உடற்கூற்று நிபுணர் ஆர்.எம்.பி.ராஜகருணா, அரச பகுப்பாய்வு திணைக்கள அதிகாரி பி.யு.மடவல, தொல்பொருள் திணைக்கள அதிகாரி

(19) பக்கம் பார்க்க...

### பட்ஜெட் தோல்வி எதிரொலி

## காரைதீவு பிரதேசசபையின் தவிசாளர் பதவி விலகினார்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் செல்லையா இராசையா தனது தவிசாளர் பதவியில் இருந்து நேற்றைய தினம் இராஜினாமா செய்துள்ளார்.

இது தொடர்பான இராஜினாமா கடிதம் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் உப தலைவருமான பொன்.செல்வ

(19) பக்கம் பார்க்க...

## பொது வேட்பாளராக சந்திரிகா? கவனம் செலுத்துகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநயக்க குமாரதுங்கவை எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளராக நியமிப்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி கவனம் செலுத்தி வருவதாக சிலோன்ருடே தகவல் வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக, சந்திரிகாவைக் களமிறக்கும் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்

(19) பக்கம் பார்க்க...

# மூன்று பாரிய காசோலை மோசடி; சந்தேகநபர்களைத் தேடி வலைவிரிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் மூன்று பாரிய காசோலை மோசடிச் சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைத்திருப்பதாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமலசேன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

கடந்த 19 ஆம் திகதி குருநகர் பகுதியில் நடைபெற்ற காசோலை மோசடிச் சம்பவத்தில் வர்த்தக நோக்கத்திற்காக நான்கு இலட்சம் ரூபா காசோலை மோசடி செய்யபபட்ட சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. இந்தச் சம்பவத்தின் முறைபபாட்டுக்காரர் மடம் வீதியைச் சேர்ந்தவர் இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்.நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ்.கே.கே.எஸ். வீதிப்பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் இரண்டு இலட்சத்து 85 ஆயிரம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. இந்த மோசடிச் சம்பவமும் வியாபார நோக்கத்திற்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், இந்தச் சம்பவம் தொடர்பாகவும் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் கே.கே.எஸ். பொலிஸ் பிரிவில் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற மற்றுமொரு காசோலை மோசடிச் சம்பவத்தில் இரண்டு இலட்சத்து 39 ஆயிரத்து 850 ரூபா மோசடி ஒன்று பதிவாகியிருப்பதாகவும் இந்தச் சம்பவத்தின் முறைப்பாட்டுக்காரர் கரவெட்டியைச் சேர்ந்தவர் எனவும் வியாபார நோக்கத்தோடு இந்த மோசடி இடம்பெற்றிருப்பதாகவும் குறித்த மோசடிச் சம்பவங்கள் தொடர்புடையவர்கள் பொலிஸாரினால் தேடப்பட்டிருப்பதாவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## தூக்கில் தொங்கிய நிலையில் இளம் தாயின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை பொம்மை வெளிப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட தாயொருவரின் சடலம் நேற்று அதிகாலை யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

அராலிவீதி ,வசந்தபுரம், நாவாந்துறையைச் சேர்ந்த சுயந்தன் விஜிதா (வயது 24) என்ற இளம் தாயின் சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும தெரியவருவதாவது. குறித்த இளந்தாய் கடந்த 11 நாட்களுக்கு முன்னர் சத்திரசிகிச்சை மூலமாக ஆண்குழந்தை ஒன்றைப் பிரசவித்திருந்த நிலையில் உடல் நலம் குன்றிய நிலையில் காணப்பட்டதாகவும். இவ்வாறு உடல் உபாதை காரணமாக நேற்று அதிகாலை சுமார் 2.15 மணியளவில் தூக்கு மாட்டிக் கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தாயின் சடலம் அதிகாலை 3.20 மணியளவில் யாழ்போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதாகவும் இந்தச் சம்பவம் குறித்து யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (பா)

## கைதடியில் விபத்து; ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஏ9 வீதியில் கைதடிச் சந்திக்கருகாமையில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைதடியில் தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கருகில் கன்டர் ரக வாகனமும் ஆட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஆட்டோவின் சாரதியான நுணாவிலைச் சேர்ந்த மெக்கானிக் சிறீஸ்காந்தராசா என்பவரே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (90)

## பற்றைக்காடாக மாறிவரும் வேம்பிராய் இந்து மயானம்

(சாவகச்சேரி)

வேம்பிராய் இந்துமயானம் பற்றைக்காடாகவும் கழிவுகள் கொட்டும் இடமாகவும் மாறிவருவதாக இம்மயானத்தை பாவனை செய்யும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சம்புபுல் மிகவும் மோசமாக வளர்ந்து பற்றைக் காடாக வளர்ந்துள்ளதுடன் பன்றிகள் குடிகொள்ளும் இடமாக மாறியுள்ளது. தகனக்கிரியை நடைபெறும் இடம் தவிர ஏனைய இடத்திற்கும் கிணற்றடிக்கும் செல்லமுடியாது பற்றையாக இருப்பதால் கிரியைகள் மேற்கொள்வதில் பெரும் சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றது.

இந்த மயானம் குறித்து உரிய சபைகள், அதிகாரிகள் கவனம் எடுத்து துப்புரவு செய்து வழங்குவதுடன் இப்பகுதிகளில் கழிவுகளைக் கொட்டுவோர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (இ)



அண்மையில் காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தான மகரஜோதிப் பெருவிழாவில் மகரஜோதி பதினெட்டாம் படிப்பூசையும் வெகு விமர்சையாக நடைபெற்றதைக் காணலாம். (50)

## வர்த்தக நிலையங்கள் உடைத்து கிளிநொச்சி நகரில் திருட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் வர்த்தக நிலையங்களை உடைத்து திருடப்படும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நேற்று இரவு கனகபுரம் வீதியிலுள்ள அச்சகம் ஒன்று கூரை பிரிக்கப்பட்டு பணம் மற்றும் கமரா என்பன திருடப்பட்டுள்ளன.

இதேபோல் கடந்த வாரத்தில் இப்பகுதியில் நகைக்கடை ஒன்றும் திருடர்களால் உடைக்கப்பட்டுள்ளது. இதுதவிர அழகு சாதனப் பொருட்கள் விற்கும் நிலையம் ஒன்றும் சூறையாடப்பட்டுள்ளதுடன் மூன்றிற்கும் மேற்பட்ட வீடுகளிலும் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் கடந்த வாரததில் அரங்கேறியுள்ளதாக கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில முறையிடப்பட்டுள்ளது. இத் திருட்டுச் சம்பவங்கள் குறித்து கிளிநொச்சிப் பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண் வருகின்றனர்.

## சோஆ நிறுவனத்தின் சேவைகள் அபிவிருத்தி காணும் நாச்சிக்குடா

(உதயநகர்)

“சோஆ” நிறுவனத்தின் சேவைகள் குறித்து நாச்சிக்குடா மக்கள் தமது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளனர்.

நாச்சிக்குடா கிராமத்தின் சிறார்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் வகையில் மாணவர்களுக்கான மாலை நேர இலவச வகுப்புக்களை சோஆ (ZOA) நிறுவனம் நடாத்திவருகின்றது. இதுதவிர வாழ்வாதார மேம்பாட்டுக்கென மீன்பிடி உபகரணங்கள் மற்றும் விளையாட்டு மைதானப் புனரமைப்பு வீதி அபிவிருத்தி, இறங்குதுறை அபிவிருத்தி போன்ற பல்வேறுபட்ட அபிவிருத்திச் செயற்றிட்டத்தை “சோஆ” நிறுவனம் வழங்கி வருகின்றமை தமக்கு மகிழ்வைத் தருவதாக நாச்சிக்குடா கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (09)

## மீண்டும் சேதமடைந்த கைதடிப் பாலம்

ஏ9 வீதியிலுள்ள கைதடிப் பாலம் மீண்டும் சேதமடைந்துள்ளமையால் பயணிப்போர் பயத்துடனையே செல்ல வேண்டியுள்ளது.

கடந்த இரண்டு நாட்களாக பாலத்தின் கரையோரமாக உள்ள இரும்புத் தகடுகள் சேதமடைந்து உள்நோக்கி சென்றுள்ளமையால் மோட்டார் சைக்கிள், ஆட்டோ போன்ற வாகனங்கள் கரையோரமாக பயணிக்க முடியாத அபாய நிலை தோன்றியுள்ளது. இதற்கான எச்சரிக்கை குறியீட்டோ, தடைகளோ எதுவும் அதில் வைக்கப்படாத நிலையில் விபத்துக்கள் ஏற்படவாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றது.

சைக்கிளில் சென்ற சிலர் இதில் வீழ்ந்து எழும்பிய சம்பவங்கள் கூட நேற்று இடம்பெற்றுள்ளது

பல தகடுகள் இவ்வாறு உள்ளோக்கி சென்றுள்ளமையால் கண்ணுக்கு புலப்படாத இதனுள் பலர் விழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது விடயத்தில் உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுத்து இதனைப் புனரமைக்க வேண்டும் அல்லது எச்சரிக்கை செய்யும் வகையில் தடைகளை அமைக்க வேண்டும் என இவ்வீதியில் பயணிப்போர் சுட்டிக்காட்டுகின்றனர். (இ)

## மகரஜோதி பெருவிழா

(சாவகச்சேரி)

கல்வயல் கரிஹரபுத்திர ஐயனார் ஆலய மகரஜோதிப் பெருவிழா சிறப்பாக இடம்பெற்று வருகிறது. தினமும் அபிஷேகம் இடம்பெறுவதுடன் மாலை 18 ஆம் படி பூசை, பஜனை என்பன இடம்பெறுகின்றன.

ஆலய தர்மகர்த்தா சு.சிவானந்தன் ஐயா தலைமையில் இப்பெருவிழா இடம்பெற்றுவருகிறது. (இ)


நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 217 | திகதி 2013.12.27

வெற்றி இலக்கங்கள்

26 55 56 62 Y

பரிசுத் தொகை ரூபா. 14,650,140/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| [illegible] | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| [illegible] | 50,000/- | 11 | 550,000/- |
| [illegible] | 1,000/- | 210 | 210,000/- |
| [illegible] | 1,000/- | 360 | 360,000/- |
| [illegible] | 60/- | 9364 | 561,840/- |
| [illegible] | 40/- | 4946 | 197,840/- |
| [illegible] | 20/- | 122517 | 2,450,340/- |
| [illegible] | 20/- | 17566 | 351,320/- |
| [illegible] | 14,650,140/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,681,340/- |

ரூபா. 14,889,840/-

2013.12.31ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3176)

# தென்னிலங்கை வியாபாரிகளுக்கு

# பிரத்தியேக இடத்தை வழங்கவும்

## நெல்லியடி வர்த்தக சங்கம் கோரிக்கை

(கரணவாய்)

நெல்லியடி பட்டினப் பகுதியில் பண்டிகைக் காலங்களில் வருகைதரும் தென் பகுதி வியாபாரிகளின் வியாபார நடவடிக்கைகளால் பட்டினப்பகுதியில் வியாபாரம் செய்யும் உள்ளூர் வியா- பாரிகளின் வியாபாரம் பாதிக்கப்படுவதாகவும் இதனை தடுக்கும் வகையில் தென்னிலங்கை வியாபாரிகளுக்கு பிரத்தியேகமாக இடம் ஒதுக்கிக் கொடுக்குமாறு கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபையிடம் நெல்லியடி வர்த்தக சங்கம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

வர்த்தக சங்கம் விடுத்துள்ள வேண்டுகோளில், புதுவருடம் தைப்பொங்கல் ஆகிய பண்டிகைகள் வரவுள்ள நிலையில் இப்பண்டிகைக் காலங்களில் நெல்லியடி பட்டினப் பகுதியில் வியாபார நடவடிக்கைகள் அதிகளவில் இடம் பெற்று வருவது வழமையாகும்.

நெல்லியடி வர்த்தக சங்கத்துக்குட்பட்ட வியாபாரிகள் தரமான பொருட்களை கொள்வனவு செய்து வியாபாரம் செய்து வரும் நிலையில் திடீரென வரும் தென்னிலங்கை வியாபாரிகள் தரம் குறைந்த பொருட்களை கொண்டு வந்து மலிவு விலையில் விற்பனை செய்கின்றனர்.

இதனால் மக்களும் அவர்களிடமேயே பொருட்களை வாங்கும் நிலை காணப்படுகிறது. இதனால் நிரந்தரமாக வியாபாரம் செய்யும் உள்ளூர் வியாபாரிகள் பாரிய பின்னடைவை எதிர்நோக்குகின்றனர்.

முன்னைய பண்டிகைக் காலங்களிலும் இவ்வாறான பின்னடைவை வியாபாரிகள் எதிர்நோக்கியுள்ளனர். எனவே இனிவரும் பண்டிகைக்காலங்களில் உள்ளூர் வியாபாரிகளை பாதிக்காத வகையில் தென்னிலங்கை வியாபாரிகளுக்கு வேறு இடத்தை ஒதுக்கி கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு வர்த்தக சங்கம் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபை நிர்வாகத்திடம் கேட்டுக்கொள்கிறது. (18)

# 10 ஆயிரம் ரூபா சேமிப்புக்கு

# பலவெற்றி வாய்ப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியில் ஒரு மாத சேமிப்பு அல்லது சிறுவர் சேமிப்பு அல்லது நடைமுறைக்கணக்கில் 10 ஆயிரம் ரூபாவை மீதியாக பேணும் வாடிக்கையாளர்களுக்குப் பெறுமதியான சீட்டிழுப்புக்கள் கிடைக்கவுள்ளன. இதன் படி மாதாந்த சீட்டிழுப்பு, மில்லியன் வெற்றியாளர் சீட்டிழுப்பு, கார் சீட்டிழுப்பு, வருடஇறுதி மாபெரும் சீட்டிழுப்பு போன்ற பல வெற்றி வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

தகுதிபெறும் சகல கணக்கு வைப்பாளர்களும் தமது கணக்கு மீதி ஒவ்வொரு மடங்கிற்கும் ஒரு மேலதிக வாய்ப்பு உண்டு. உரிய கணக்கு மீதி பேணப்படும் காலம் ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு மேலதிக வாய்ப்பு என்பவற்றிற்கு அமைய பல வெற்றி வாய்ப்புக்களை பெறமுடியும். வாடிக்கையாளர் வங்கியில் குறித்த குறைந்த பட்ச கணக்கு மீதியை வைத்து வெற்றி வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளுமாறு வங்கியினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (85)

# ஆயுர்வேத சிகிச்சைநிலையம்

# இன்று திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் அமைந்துள்ள இராம கிருஷ்ண மிஷனில் இலவச ஆயுர்வேத சிகிச்சை நிலையம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி சியாமா துரைரட்ணம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நிலையத்தை திறந்து வைக்கவுள்ளார்.


கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தாவின் சிறப்புப் பஜனையும் இடம்பெறவுள்ளது.

மேலும் இந்நிகழ்வில் கணவனைப் பிரிந்து வாழும் பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் முகமாக தையல் இயந்திரமும் வழங்கப்படவுள்ளது.

ஆயுர்வேத சிகிச்சை நிலையம் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 3 மணியிலிருந்து 5 மணி வரை இயங்குமென்று இராம கிருஷ்ண மிஷன் இணைப்பாளர் எஸ்.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

# நெடுங்கேணி பிரதேசசெயலகத்தின்

# 2014இற்கான அபிவிருத்திக் கூட்டம்



(நெடுங்கேணி)

வவுனியா வடக்கில் நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் 2014ஆம் ஆண்டுக்கான அபிவிருத்திக்கூட்டம் இடம்பெற்றது.

நெடுங்கேணி பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் பிரதேசசெயலாளர் க.பரந்தாமன் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் முன்பள்ளி, விவசாயம், மின்சாரம், கால்நடை, பாடசாலை சுகாதாரம், வீதிப்புனரமைப்புக்கள் போன்ற விடயங்கள் கிராம அபிவிருத்தி சங்கங்கள் மாதர் அபிவிருத்தி சங்கங்கள் விளையாட்டு கழகங்கள், ஆலய பரிபாலன சபைகள் ஆகிய அமைப்புகளிடமிருந்து அபிவிருத்திகள் தொடர்பான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இதன்போது வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய அதிகாரி ப.சத்தியலிங்கம். மாகாணசபை உறுப்பினர்களான. ஜி.ரி.லிங்கநாதன் ஆர்.இந்திரராஜா எம்.தியாகராசா. ஜெயதிலக ஆகியோரும் கலந்து கொண்டனர். (40)

# விசிலடிச்சான் குஞ்சுகள் அல்லது சும்மா கிட சவமே....




இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வுப் பொதியை வைத்துக்கொண்டு அதை ஏற்குமாறு கெஞ்சிக் கொண்டிருந்தார் சந்திரிகா.

விடுதலைப்புலிகள் அதை ஏற்கவில்லை.

ஆனால், அப்போது அதை ஏனைய தமிழ்க்கட்சிகள் ஏற்கத் தயாராக இருந்தன.

அந்தத் தீர்வுப்பொதியை உருவாக்குவதற்கு 'அதனுள்ளே உள்ளுடனை வைப்பதற்கு' துணைசெய்தவர் நீலன் திருச்செல்வம்.

நீலன் திருச்செல்வம் அப்பொழுது தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கியஸ்தர். இப்பொழுது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் சுமந்திரன் இருப்பதைப்போல அப்போது நீலன் இருந்தார்.

நல்லா இங்கிலிஸ் கதைச்சு, பிறத்தியார் நாலு பேருடன் பேசிப்பறைந்து பழகிய ஆள் என்ற படியால் இந்த இனப்பிரச்சினை என்ற சவத்தை எப்படியாவது அடக்கம் செய்ய வேணும். இதை இப்பிடியே நாற விடமுடியாது என்று சிந்திச்சு ஒரு பொதியை உருவாக்கினார் நீலன். நீலன் களைத்துப்போனபோதெல்லாம், அவருக்குக் கோப்பி ஊத்தியும் பிளேன்ரீ போட்டுக் கொடுத்தும் உற்சாகப்படுத்தினார் சம்பந்தன். ஆனால் நீலன் நினைத்த மாதிரியோ சம்பந்தன் விரும்பிய மாதிரியோ காரியங்கள் நடக்கவில்லை.

இறுதியில் நீலனுக்கே சவஅடக்கம் நடந்தது. சம்பந்தனுக்கு துரோகிப்பட்டம் கிடைத்தது. போதாக்குறைக்கு தேசத்துரோகி என்ற பட்டம் சூட்டப்பட்டு, கொலைப்பட்டியலில் சேர்க்கப்பட்டார்.

எல்லாவற்றுக்குமாக சந்திரிகா அழுதுதீர்த்தார்.

அந்தத் தீர்வுப்பொதியைப் பற்றி கிளிநொச்சியில் தொடங்கி லண்டன் வரையிலும் அன்ரன் பாலசிங்கம் நக்கலடித்தார்.

அன்ரன் பாலசிங்கத்தின் நக்கலுக்கும் நையாண்டிக்குமாக உலகத்தமிழர்கள் விசிலடித்தும் கைதட்டியும் தங்களின் பேராதரவைத் தெரிவித்தார்கள்.

எல்லாவற்றுக்குமான விளைவாக இறுதியில் தமிழர்களே சவக்கணக்கை எழுத வேண்டியதாயிற்று. சவங்களை அடக்கம் செய்து தமிழர்கள் களைத்தார்கள். இறுதியில் அடக்கம் செய்ய முடியாத அளவுக்கு தமிழ்ச் சவங்கள் பெருகிக்கிடந்தன.

சந்திரிகாவின் தீர்வுப்பொதியை ஏனைய கட்சிகள் அத்தனையும் ஏற்றபோதும் புலிகள் மறுத்ததால் அதை தீர்வாக்க முடியவில்லை.

இப்பொழுது இன்னொரு தீர்வுப் பெட்டகத்தை மகிந்த ராஜபக்ஷ வைத்திருக்கிறார்.

இதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தமிழ்த்தேசிய விடுதலை முன்னணியும் எதிர்க்கின்றன.

தமிழரின் எதிர்காலத்தை நோக்குவதில், அவர்களுடைய நலனைப்பற்றிச் சிந்திப்பதில் இந்த இரண்டு கட்சிகளும் ஒன்றுதான். ஒன்று மோதகம் என்றால் மற்றது கொழுக்கட்டை.

மகிந்த ராஜபக்ஷ ஒன்றும் புத்தபிரானோ மாட்டின் லூதர் கிங்கோ (யூனியர்) அல்ல.

ஏன் சந்திரிகா கூட அன்னை தெரேசாவோ ஆங்ஸாங் சுஜியோ அல்ல.

இவர்கள் எல்லாம் அதிகாரவர்க்கத்தின் பிரதிநிதிகள்.

இனவாத சக்திகளின் மூலம் அரசியற் தலைமைத்துவத்துக்கு வந்தவர்கள்.

ஆனாலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தங்களால் முடிந்த வழி–முறைகளைக் கண்டு பிடித்து அதைச் சிபார்சு செய்தவர்கள்.

இந்தத் தீர்வுத்திட்டங்களில் ஏராளம் பொத்தல்களும்-உழுத்தல்களும் உண்டு. ஆனால், தமிழர்கள் தங்களின் அரசியற் பயணத்தைத் தொடங்கிய இடம் எப்படி இருந்தது? இன்று வந்தடைந்திருக்கின்ற இடம் எப்படி இருக்கிறது? எனப் பார்க்க வேண்டும்.

இதைப் பார்த்தால், இந்த நிலைமைக்கு என்ன காரணம் என்று பார்த்தால், இன்னும் கால விரயமோ சேதநிலையோ ஏற்படாது.

என்னதான் செய்தாலும் அயலானே நமக்கு உதவி என்ற நிலை மட்டுமல்ல – என்ற உண்மையே இலங்கையின் யதார்த்தம்.

இதை மறந்து இன்னும் கற்பனைக்குதிரையில் சவாரி செய்ய விரும்பினால், மேலும் மேலும் மேலும் சவப்பெட்டிகளையே தமிழர்கள் பெற வேண்டியிருக்கும். சவ அடக்கங்களையும் சவக்கணக்குகளையுமே தமிழர்கள் செய்து கொண்டிருக்க வேண்டும்.

அன்று புலிகள் விட்ட தவறை இன்று தமிழ்க்கூட்டமைப்புச் செய்கிறது.

அப்போது அடித்த விசிலைப்போலவே இப்போதும் கொஞ்ச விசிலடிச்சான் குஞ்சுகள் இருக்கின்றன. என்ன செய்வது?

*ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களேயொழிய தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை. - ஆபிரகாம் லிங்கன்.*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பொய்மைகளின் அடிச்சுவட்டில்....

தமிழ்மக்களின் பெரும்பான்மை பலத்தைப் பெற்றுவைத்திருப்பவர்களின் அரசியல்திட்டம் என்ன, அது நடைமுறையாவதற்கு அவர்கள் சொல்லும் வழிமுறைகள் என்ன, இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு உரிய வழிகளில்தான் தமிழ்த்தரப்பின் செயற்பாடுகள் நடந்து வருகின்றனவா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம், வரும் மார்ச்சில் நடைபெறப் போகும் ஜெனீவா மாநாட்டின் பின்னராவது பதில்களை அறிந்து கொள்வதற்கு தமிழ் மக்கள் முயல வேண்டும். சமூகம் பற்றிய சிந்தனையும், சமூகத்தின் மீதான அக்கறையும் உள்ளவர்கள், மாறாமல் ஒரேபோன்று தொடரும் இந்த அபத்தசூழலை விசாரிக்க முன்வர வேண்டும்.

இலங்கை அரசாங்கத் தரப்பினர் மாறவேண்டும்; அதுவரை இங்கு எதுவும் மாறாது என்று சொல்லிவிட்டு வெளிநாட்டினர்க்கு காத்திருப்பதுதான் தமிழ்த் தரப்பிடம் உள்ள ஒரேயொரு அரசியல் வழிமுறையா?

இலங்கையரசும் சர்வதேச நாடுகளும் அங்கும் இங்குமாக பந்தெறிந்து விளையாடிக் கொண்டிருப்பதை இன்னும் பல வருடங்களுக்கு, அவலங்களைச் சுமந்தபடி பார்த்துக் கொண்டிருப்பது தான் தமிழ்மக்களின் விதியா? வேறு வழி எதுவும் இல்லையா?

ஆக்கபூர்வமான எந்த விளைவுகளுக்கும் முயற்சிக்காமலே, சும்மா அரசை எதிர்த்துப் பேசிக் கொண்டிருப்பதிலும், தற்போதைய அரசுக்குச் சங்கடங்கள் நேரும்போது அவ்வப்போது மகிழ்ந்து கொண்டிருப்பதிலும் வருடங்களைச் செலவிட்டுக் கொண்டே வரும் சமூகம் தன் சரிவிலிருந்து மீள முடியுமா?

இந்த மகிழ்ச்சியும் திருப்தியும் வெற்று ஆவேசமும் அரசியல் கதிரைகளைப் பிடிப்பதற்கு உதவலாம்; பத்திரிகை–இணையத்தள வியாபாரத்திற்கு உதவலாம்; புலம்பெயர்ந்த மக்களிடம் பணம் சேகரிப்பதற்கு உதவலாம்; அரச அதிகாரத்தை எதிர்த்துக் கொண்டிருக்கும் முற்போக்காளர் என்கிற முகத்தைக் காட்ட உதவலாம்.... வருத்தமுற்றுச் சீவிக்கும் மக்களை வாழவைக்க உதவுமா?

அல்லது உதவுகிறதா என்பதை சிந்தனை சக்தியுள்ளவர்கள் தயைகூர்ந்து யோசிக்க வேண்டும். தங்கள் மௌனம் கலைத்துப் பேசவேண்டும்.

நாங்கள் வீம்புக்கு அழியும் பழங்குடிச் சமூகமாகவே எங்கள் சிந்தனையை வைத்துக் கொண்டிருக்கிறோம் என்ற குற்றச்சாட்டை, நம்மில் யாராவது தர்க்கரீதியாக மறுத்துப் பேச முடிந்தால் உண்மையிலேயே சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம்.

எங்களுக்கு வெளியே எதிரிகளைச் சொல்லி அழித்தபடியும் அழிந்து கொண்டுமிருந்த நாம் இப்போதேனும் விவேகமற்ற ஆவேசங்களை விட்டுவிட்டு நிதானமடைய வேண்டும். நம்முடைய பெருமளவு துன்பங்களுக்குக் காரணம் நாங்கள்தான் என்பதைச் சரிவர உணர்ந்து கொள்ளாத வரை நாம் மீட்சி பெறப்போவதில்லை.

குறிப்பாக, எழுதியும் பேசியும் ஆவேசமூட்டியும் சிதைவுகளைக் கொண்டாடும் ஒரு விவேகமற்ற எழுச்சியைப் போஷித்து நம் சமூகத்தின் இன்றைய இந்த நிலைமையை ஏற்படுத்தியவர்கள், தங்கள் தவறுகளைச் சொல்லி சுயவிமர்சனம் செய்து கொள்ளாமல், மக்களைத் தொடர்ந்தும் ஆவேசப்பயணத்தில் இழுத்துச் சென்றுகொண்டிருப்பதுதான் மாபெரும் துரோகமாகும் என்பதை அறிய வேண்டும்.

மாயப் புளுகத்தில் ஆழ்த்தி நம்மைப் படுகுழியில் இறக்கும் ஆவேசச் சிந்தனைகளை நாம் இப்போதாவது இனங் கண்டு கொள்ள வேண்டும். நம் சமூகத்தின் சிந்தனையும் நினைப்புகளும் நடவடிக்கைகளும் எப்படி இருந்தன, இப்போதும் எப்படி அவை தொடர்கின்றன என்பது பற்றிய ஒரு கறாரான விமர்சனப் பார்வையை இப்போதேனும் நாம் மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் பொய்மை ஆவேசங்களிலேயே நாம் மறுபடியும் சிக்கிச் சீரழிந்து கொண்டிருக்க நேரிடும்.

- ஆசிரியர்.

# சிறுபான்மை மக்களையும் அரசே பாதுகாக்க வேண்டும்

## முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுபான்மை மக்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு என முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த முப்பது வருட கால கொடிய யுத்தத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகள், பாதிக்கப்பட்டவர்கள், சொத்து சேதங்கள் தொடர்பில் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் கணக்கெடுப்பில் எவ்விதமான திருப்தியுமில்லை.

இவை தொடர்பில் மக்கள் அதிகளவிலான முறைப்பாடுகளை முன் வைத்துள்ளனர். யுத்தப் பாதிப்புக்கள் தொடர்பில கணக்கெடுப்பொன்று அவசியமானதே. அதை அரசாங்கம் கட்டாயமாக செய்ய வேண்டும். ஆனால் தற்போது புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் கணக்கெடுப்பில் எவ்விதமான வெளிப்படையான தன்மைகளுமில்லை.

கணக்கெடுப்பு தொடர்பில் கொடுக்கப்படும் பத்திரத்தினை புள்ளி விபரவியல் திணைக்கள அதிகாரிகளே நிரப்புவதாகவும் பொது மக்களின் உண்மை விபரங்களை கருத்தில் கொள்வதில்லை எனவும் அதிக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதேபோல் இவ் புள்ளிவிபரவியல் கணக்கெடுப்பினை எவரது தனிப்பட்ட தேவைகளுக்காகவோ அல்லது சர்வதேசத்தின் அழுத்தங்களை சமாளிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்றதா என்ற சந்தேகமும் எமக்குள்ளது.

எவ்வித உண்மைத் தன்மைகளுமில்லாத ஒரு செயற்பாடுகளுக்கு ஆதரவு தெரிவித்து மக்களை ஏமாற்ற நாம் விரும்பவில்லை. இவ் மூடு மந்திரத்தின் பின்னணியினை அரசாங்கம் உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும். இல்லையேல் வேறு வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படக்கூடும்.

மேலும் அரசாங்கத்தில் இருக்கும் ஒரு சில பௌத்த பேரினவாதிகளின் செயற்பாடுகளின் காரணத்தினாலேயே சிறுபான்மை மக்கள் விரக்தியடைந்துள்ளனர். சிறுபான்மை மக்களையும் சேர்த்து பாதுகாக்க வேண்டுமென்பதன் காரணத்தினாலேயே மக்கள் அரசாங்கத்தினை தெரிவு செய்கின்றனர். ஆனால் அதைப் புரிந்து கொள்ளாத அரசாங்கத்தினர் தொடர்ந்தும் சிறுபான்மை மக்களை துன்புறுத்தி வருகின்றனர்.

நாட்டில் சிங்கள மக்களின் மனதில் பிரிவினைவாதமோ சிறுபான்மை மக்கள் மீதான தனிப்பட்ட விரோதங்களோ இல்லை. நாட்டில் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழவே விரும்புகின்றனர். ஆனால் ஒரு சில பெருத்த தலைமைகளின் அரசியல் இலாபத்தின் காரணமாகவே நாட்டில் பிரிவினை வாதத்தினை தூண்டி நாட்டில் குழப்பகரமான சூழலினை ஏற்படுத்துகின்றனர்.

சிங்களவர்களை அடக்கி சிறுபான்மையினர் ஆட்சி நடத்த முடியாது என்பதனை தெரிந்து கொண்டும் தமிழர்களையும் முஸ்லிம்களையும் நோகடிப்பதானது மனித உரிமை மீறல்களாகவே கருதப்பட வேண்டும் என்றார்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன் உற்புத்தி அதிகரிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டம் தேசிய மீன் உற்பத்தியில் 9 வீதம் பங்களிப்புச் செய்துள்ளதுடன், கடந்த வருடத்தினை விடவும் மாவட்ட மீன் உற்பத்தி 10 வீதத்தால் அதிகரித்துள்ளதாக மட்டக்களப்பு கடற்றொழில் நீரியல் வள உதவிப் பணிப்பாளர் ரீ.ஜோர்ஜ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த வருடத்தின் ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் மாதாந்தம் சராசரியாக 4ஆயிரம் மெட்ரிக்தொன் மீன்கள் பிடிபட்டுள்ளன. இதுவரை 45ஆயிரம் மெட்ரிக்தொன் மீன் உற்பத்தி மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 23672 மீன்பிடிக் குடும்பங்களைச் சேர்ந்த 25159 பேர் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இந்த மீன்பிடியாளர்களால் 86372 பேர் நேரடிப் பயனாளர்களாக உள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில், 1223 வெளியிணை இயந்திரப்படகுகள், 360 ஆழ்கடல் இயந்திரப் படகுளும், 70 ஒரு நாள் இயந்திரப்படகுகளும் அடங்கலாக 1693 இயந்திரப்படகுகள் மீன்பிடியில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது என்றார்.

# மாட்டிறைச்சிக் கடைகளை மூடுவதற்கு தீர்மானம்

ஹரிஸ்பத்துவ பிரதேச சபை பிரிவிற்குட்பட்ட மாட்டிறைச்சிக் கடைகளுக்கு 2014ஆம் ஆண்டில் அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதை நிறுத்துவதற்கு கடந்த 27ஆம் திகதி இடம்பெற்ற பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இப்பிரேரணையை முன் வைத்து உரையாற்றிய தனுஷ்க மல்வெள, “ஹாரிஸ்பத்துவ பிரதேச சபைப் பிரிவு சிங்கள பௌத்த மக்கள் அதிகம் வாழும் பிரதேசமாகும். இங்கு மாட்டிறைச்சிக் கடைகள் இருப்பது பௌத்த மதத்தை அவமதிப்பதாக மக்கள் கருதுகின்றனர்.

எனவே 2014ஆம் ஆண்டிலிருந்து மாட்டிறைச்சிக் கடைகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிறுத்துமாறு வேண்டுகின்றேன்’ என்றார்.

இதனை வழிமொழிந்த பிரதேச சபை உறுப்பினர் சஞ்சீவ குருந்துவத்த, கடந்த காலத்தில் எமது பிரதேச சபை எல்லைக்குள் மாடுகள் அறுப்பதை தடை செய்தாலும் சட்ட விரோதமான முறையில் பல பகுதிகளிலிருந்தும் மாடுகள் அறுக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்படுகின்றன என்றார்.


அத்துடன், மாடுகள் அறுப்பதை நாங்கள் தடை செய்ததற்கு அர்த்தம் இல்லாமல் போய் உள்ளது. எனவே இந்த பிரேரணையின்படி மாட்டிறைச்சிக் கடைகளையும் மூடிவிடுவது சிறந்ததாகும் எனத் தெரிவித்தார்.

# கற்குளம் கிராமத்தில் காட்டு யானைகள் அட்டகாசம்

வவுனியா, கற்குளம் பகுதியில் காட்டு யானைகளின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுவதால் தாங்கள் தற்போது அச்சத்துடன் வாழ்ந்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, கற்குளம் பகுதியில் கிராமத்துக்குள் காட்டு யானைகள் புகுந்து மக்களின் அன்றாட வாழ்வுக்கு பெரும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வருவதுடன் பெருமளவான பயன தரு மரங்களையும் பயிர்களையும் அழித்து வருகின்றன. கடந்த காலங்களில் குறித்த பகுதியில் எந்த விதமான காட்டு விலங்குகளோ அல்லது யானைகளின் தொல்லைகளோ இன்றி தாங்கள் வாழ்ந்து வந்ததுடன் பயிர்செய்கையிலும் ஈடுபட்டு வந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், காட்டுயானைகளை கட்டுப்படுத்தி தமது பயிர்களையும் பயன்தரு மரங்களையும் பாதுகாக்க உதவ வேண்டுமென உரிய அதிகாரிகளிடம் அப்பகுதி மக்கள கோரிக்கை விடுத்துள்ளனர்.



# நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு கூட்டமைப்பு எப்படிச் செல்வது?

**நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றுவதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் தீர்மானித்திருக்கின்றது. டிசம்பர் 24ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக சுமந்திரன் ஊடகங்களுக்கு அறிவித்தார். இது புதிய தீர்மானமல்ல. நீண்ட காலமாக இதையே சொல்லி வருகின்றார்கள். தெரிவுக் குழுவில் பங்கு பற்றாதிருப்பதற்குப் பல காரணங்களைக் கூறும் கூட்டமைப்பு அதில் பங்கு பற்றுவதன் மூலம் தமிழ் மக்களுக்கு ஏதாவது தீமை ஏற்படுமா என்பது பற்றி எதுவும் சொல்வதில்லை. அவர்களால் எதுவும் சொல்ல முடியாது.**

■ சங்கர சிவன்

தெரிவுக் குழுவில் கூட்டமைப்பு பங்குபற்றுவதன் மூலம் தமிழ் மக்கள் இழக்கப்போவது எதுவுமில்லை. சில நன்மைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டேயொழிய ஒரு தீமையும் ஏற்படப் போவதில்லை. இனப்பிரச்சினையின் தீர்வுக்காகவும், அரசியலமைப்பில் மாற்றம் செய்வது தொடர்பாகவும் முன்வைக்கப்படும் ஆலோசனைகளே தெரிவுக் குழுவின் பிரதான பேசுபொருளாக இருக்கப் போகின்றன. தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இரண்டு காரணங்களுக்காக இதில் பங்குபற்ற வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கின்றார்கள். தமிழ் மக்களின் சார்பாக மேற்படி விடயங்கள் தொடர்பான ஆலோசனைகளை முன்வைப்பது ஒரு காரணம். தமிழ் மக்களுக்குப் பாதகமான ஆலோசனைகளை யாராவது முன்வைத்தால் அந்த இடத்திலேயே அவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது மற்றைய காரணம்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கூட்டமைப்பினர் கூறுவது போலப் பேரினவாதிகள் மாத்திரம் அங்கம் வகிக்கவில்லை. பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக ஆதரிப்பவர்களும் அதனிலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்களை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர்களும் கூடத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கின்றார்கள். கூட்டமைப்பு தெரிவுக் குழுவுக்கு வரவேண்டும் என்று அவ்வாறானோர் பகிரங்கமாக அழைப்பு விடுத்திருக்கின்றார்கள். கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் பங்கு பற்றி யதார்த்தத்துக்கு அமைவாக ஆலோசனைகளை முன்வைக்கும் பட்சத்தில் அவற்றுக்கு அங்கீகாரம் கிடைக்கும் நிலையும் ஏற்படலாம். அது சாத்தியமாகாத போதிலும் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் நட்பு சக்திகள் அவ்வாலோசனைகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பர். அதே வேளை, கூட்டமைப்பு முன்வைக்கும் யதார்த்தபூர்வ ஆலோசனைகள் பேரினவாதப் பிரசாரத்துக்குப் பதிலடியாக அமையும். இவையிரண்டும் அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கக் கூடியன. இது இனப் பிரச்சினைக்கான தீர்வைப் பொறுத்த வரையில் சாதகமான ஒரு வளர்ச்சிப் போக்காகும். தமிழ் மக்களுக்குப் பாதகமான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டால் யாழ்ப்பாண மேடைகளில் ஏறி நின்று முழங்குவதால் ஒரு பலனும் இல்லை. உரிய இடத்தில் அவற்றுக்குப் பதிலளிப்பதே சரியான அணுகுமுறை.

தெரிவுக் குழுவை நிராகரிப்பதற்குக் கூட்டமைப்புத் தலைவர்கள் சில நொண்டிக் காரணங்களைக் கூறுகின்ற போதிலும் உண்மையான காரணம் வேறு. தெரிவுக் குழுவினால் எந்த நன்மையும் இல்லை, பேரினவாதிகள் பெரும்பான்மையாக இருப்பதால் பாதகமான முடிவை எடுப்பார்கள், உலக நாடுகளுக்குக் காட்டுவதற்காகவே அரசாங்கம் தெரிவுக் குழுவை அமைத்துள்ளது என்பன கூட்டமைப்பினர் கூறும் பிரதான காரணங்கள்.

**கூட்டமைப்பு உறவு பேணும் புலம்பெயர் அமைப்புகள் என்றோ ஒரு நாள் இலங்கையில் தனிநாடு அமைக்க முடியும் என்று கனவு காண்கின்றன. அந்தக் கனவின் அடிப்படையில் கூட்டமைப்புக்குப் பிரதானமான ஒரு கட்டளையை இட்டிருக்கின்றன. அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகுவதற்கு இடமளிக்கக் கூடாது என்பதே அக்கட்டளை. இந்த நிலையில் எப்படிக் கூட்டமைப்பு தெரிவுக் குழுவுக்குச் செல்ல முடியும்?**

தெரிவுக் குழுவினால் ஒரு பலனும் இல்லை என்று அதில் பங்குபற்றாமல் எப்படிக் கூறுவது? அரசாங்கத் தரப்பினர் கூடுதலாக இருப்பதால் கூட்டமைப்பினர் அவ்வாறு கூறுகின்றார்களென்றால் நாடாளுமன்றத்தின் நிலையும் அதுதானே. அங்கேயும் அரசாங்கத் தரப்பினரே பெரும்பான்மை. நாடாளுமன்றத்தின் மூலம் எதைச் சாதிக்க முடியும் என்று அதைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள்? தெரிவுக் குழுவை நிராகரிப்பவர்கள் அதே காரணத்துக்காக நாடாளுமன்றத்தையும் நிராகரிக்கலாமே. தெரிவுக் குழுவை நிராகரிப்பதால் இவர்கள் இழக்கப்போவது எதுவுமில்லை. ஆனால், நாடாளுமன்றத்தை நிராகரிப்பதால் ஏகப்பட்ட வசதி வாய்ப்புகளை இழந்துவிடுவார்களல்லவா. தெரிவுக் குழுவினால் எந்த நன்மையும் இல்லை என்பது அப்பட்டமான கற்பனைக் காரணம்.

தெரிவுக் குழு எந்த முடிவை எடுத்தாலும் அது நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் பெற வேண்டும். அரசியலமைப்பில் திருத்தம் செய்யும் முடிவு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற வேண்டும். இறுதி முடிவு நாடாளுமன்றத்திடமே உள்ளது. எனவே, பேரினவாதிகள் பெரும்பான்மையாக இருப்பதால் பாதகமான முடிவு வந்துவிடும் எனக் கூறுவது தவறாக மக்களை வழி நடாத்தும் பொய்க்காரணம்.

**தெரிவுக் குழுவினால் ஒரு பலனும் இல்லை என்று அதில் பங்குபற்றாமல் எப்படிக் கூறுவது? அரசாங்கத் தரப்பினர் கூடுதலாக இருப்பதால் கூட்டமைப்பினர் அவ்வாறு கூறுகின்றார்களென்றால் நாடாளுமன்றத்தின் நிலையும் அதுதானே. அங்கேயும் அரசாங்கத் தரப்பினரே பெரும்பான்மை. நாடாளுமன்றத்தின் மூலம் எதைச் சாதிக்க முடியும் என்று அதைக் கட்டிப்பித்துக் கொண்டிருக்கின்றார்கள்?**

உலக நாடுகளை ஏமாற்றுவதற்காக அரசாங்கம் தெரிவுக் குழுவை நியமித்ததென்றால் கூட்டமைப்புத் தலைவர்கள் அதே தெரிவுக் குழுவைப் பயன்படுத்தி அதை உலக நாடுகளுக்கு அம்பலப்படுத்தலாமே. அரசாங்கம் உலக நாடுகளை ஏமாற்றுகின்றதோ இல்லையோ கூட்டமைப்புத் தலைவர்கள் உலக நாடுகள் பற்றிப் பேசிப் பேசியே தமிழ் மக்களை ஏமாற்றுகின்றார்கள் என்பது மட்டும் நிச்சயம். உலக நாடுகள் ஏதோ வெட்டிக்கிழிக்கப் போகின்றன என்று பல வருடங்களாகச் சொல்கின்றார்கள். ஆனால், எதுவும் நடக்கவில்லை. நடப்பதற்கான அறிகுறியும் இல்லை.

அரசியல் தீர்வு தொடர்பாகவும், அரசியலமைப்புத்திருத்தம் பற்றியும் நடைமுறைச் சாத்தியமான ஆலோசனைகளை முன்வைக்க வேண்டிய இடமே தெரிவுக்குழு. அங்கு வெறுங்கையுடன் போய் இராணுவம் வெளியேற வேண்டும் என்றும் ஆளுநரை மாற்ற வேண்டும் என்றும் கூறுவது அபத்தமாக இருக்கும். அது ஆரோக்கியமான ஆலோசனைகளை முன்வைக்க வேண்டிய இடம். இன்று வரை அப்படியான ஆலோசனைகள் எதுவும் கூட்டமைப்பிடம் இல்லை. கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்களுக்கே இவ்விடயத்தில் கூட்டமைப்பின் நிலைப்பாடுஎன்னவென்பது தெரியாது. இந்தநிலையில் தெரிவுக் குழுவுக்குப் போய் செய்வதற்கு எதுவுமில்லை என்பதாலேயே இவர்கள் தெரிவுக்குழுவை நிராகரிக்கின்றார்கள். அரசியல் தீர்வுக்கும் அரசியலமைப்புத் திருத்தத்துக்கும் நடைமுறைச் சாத்தியமான ஆலோசனைகளை இவர்களால் ஏன் தயாரிக்க முடியாது என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் அரசியல் தலைமை என்ற அந்தஸ்தை மெய்நடப்பில் எப்போதோ இழந்துவிட்டது. இன்று பெயரளவிலேயே தலைமை என்று உரிமை கோருகின்றார்கள். இனப்பிரச்சினைக்கு நியாயமானதும், நடைமுறைச் சாத்தியமானதுமான ஒரு தீர்வை முன்வைத்து அதன் அடிப்படையில் மக்களை அணிதிரட்டிப் போராடுவதற்குப் பதிலாகச் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூறி மக்களை ஏமாற்றுவதற்கு எப்போது ஆரம்பித்தார்களோ அப்போதே தலைமை அந்தஸ்தை இழந்துவிட்டார்கள். இப்போது இவர்கள் யதார்த்தத்துக்கு ஒவ்வாத தனிநாட்டு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் புலம்பெயர் அமைப்புகளின் பிரதிநிதிகளாகவே செயற்படுகின்றார்கள். இப்புலம் பெயர் அமைப்புகள் இவர்களுக்கு நிதி வசதிகளை மாத்திரமன்றி அரசியல் ஆணையையும் வழங்குகின்றன. இந்த ஆணையைப் புறக்கணிக்கும் நிலையில் இன்று கூட்டமைப்பு இல்லை. அதனால்தான் "நாங்கள் எதிர்பார்க்கும் தீர்வை அரசாங்கம் முன்வைக்கும்வரை புலம்பெயர் சமூகத்தின் கோரிக்கைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நிராகரிக்க முடியாது" என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

கூட்டமைப்பு உறவு பேணும் புலம்பெயர் அமைப்புகள் என்றோ ஒருநாள் இலங்கையில் தனிநாடு அமைக்க முடியும் என்று கனவு காண்கின்றன. அந்தக் கனவின் அடிப்படையில் கூட்டமைப்புக்குப் பிரதானமான ஒரு கட்டளையை இட்டிருக்கின்றன. அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகுவதற்கு இடமளிக்கக் கூடாது என்பதே அக்கட்டளை. அரசியல் தீர்வுக்கும் அரசியலமைப்புத் திருத்தத்துக்கும் தேவையான ஆலோசனைகளை முன்வைக்கஇயலாத அளவுக்கு இக்கட்டளைகூட்டமைப்பின் கைகளைக் கட்டி வைத்திருக்கின்றது. அந்த நிலையில் எப்படிக் கூட்டமைப்பு தெரிவுக் குழுவுக்குச் செல்ல முடியும்?

மக்களுக்குப் பதிலளிக்கும் கடப்பாட்டிலிருந்து விலகிப் புலம்பெயர் அமைப்புகளுக்குப் பதிலளிக்கும் கடப்பாட்டைக் கொண்டிருப்பவர்களின் வழிகாட்டலில் தமிழ் மக்களுக்கு ஒருபோதும் விமோசனம் இல்லை. ●

# இராணுவக் கட்டமைப்பில் மாற்றம்

# 6 மேஜர் ஜெனரல்கள் இடமாற்றம்

## இராணுவத் தலைமையக நிர்வாக நிறைவேற்று அதிகாரியாக ஹத்துருசிங்க

(கொழும்பு)

யாழ். மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க உட்பட ஆறு மேஜர் ஜெனரல் தரமுடைய அதிகாரிகளுக்கு ஜனவரி 1 ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. அண்மைக்காலத்தில் இலங்கை இராணுவத்தில் நடந்த பாரிய, உள்ளக இடமாற்றங்களாக இவை இடம்பெற்றுள்ளன.

யாழ். மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதியாக செயற்பட்டுவரும் மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, இராணுவ தலைமையகத்தின் நிர்வாக நிறைவேற்று அதிகாரியாக இடமாற்றப்பட்டுள்ளார். கிளிநொச்சி மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியாக செயற்பட்டுவரும் மேஜர் ஜெனரல் உதய பெரேரா, யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியாகவும், நிர்வாக நிறைவேற்று அதிகாரி மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ், முல்லைத்தீவு மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியாகவும், மேஜர் ஜெனரல் எல்.பி.ஆர்.மார்க், ஆயுதப் படைப்பிரிவின் பிரதம தளபதியாகவும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

இதேவேளை, இராணுவ செயலாளராக செயற்பட்டுவரும் மேஜர் ஜெனரல் எஸ்.ரணசிங்க, கிளிநொச்சி மாவட்ட கட்டளைத் தளபதியாகவும், இராணுவ செயலாளராக மேஜர் ஜெனரல் டி.ஏ.கருணாசேகரவும் இடமாறறப்பட்டுள்ளனர். அதேசமயம் பிரிகேடியர் தரமுடைய ஐந்து இராணுவ அதிகாரிகளுக்கும் அடுத்த வருடத்திலிருந்து இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

இராணுவ தலைமையகத்தின் இராணுவ உதவி நிதிக்கு பொறுப்பான மேஜர் ஜெனரல் சி.கே.ராஜபக்ஷ, எதிர்வரும் ஜனவரி 19 ஆம் திகதி முதல் வடக்கின் முன்னோக்கிய பராமரிப்பு பிரிவின் கட்டளை அதிகாரியாக பதவிமாற்றம் பெறவுள்ளார்.

தற்சமயம் வடக்கின் முன்னோக்கிய பராமரிப்பு பிரிவின் கட்டளை அதிகாரியான பிரிகேடியர் ஏ.வி.ரூபசிங்க, இராணுவ தலைமையகத்தின் இராணுவ உதவி நிதிக்கு பொறுப்பான இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியின் முன்னோக்கய பராமரிப்பு பிரிவின் கடடளை அதிகாரியாக பிரிகேடியர் டபிள்யூ.காரியவசமும், இராணுவ தலைமையக தொழிற்பாடுகளின் இயக்குநராக பிரிகேடியர் முதன்னயகேவும், இராணுவ மரபுப் பிரிவின் இயக்குநராக பிரிகேடியர் வி.ஏ.சுதசிங்கவும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

# ரயில் தீ விபத்து ; தப்பமுயன்ற மூவர் பலி

(கொழும்பு)

ரயிலில் தீ விபத்து ஏற்பட்டவேளை தப்பிக்க முயன்றவர்களில் மூவர் பலியாகியுள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர். மாத்தறையிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த ரயிலின் இயந்திரத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

வியாங்கொடையில் வைத்தே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீ விபத்து ஏற்பட்ட வேளையில் அந்த ரயிலிலிருந்து பாய்ந்து தப்பிக்க முயன்றவர்களில், கொழும்பை நோக்கி பயணித்த ரயிலில் மோதுண்டு மூவர் பலியானதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

இவ்விபத்தில் பலியானவர்கள் வரக்காபொலை, மெதவிய பகுதியைச் சேர்ந்த தம்பதியரும் இலங்கை வான்படையைச் சேர்ந்த ஒருவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆயுதங்கள் மீட்பு

புலிகளினால் மறைத்து வைகப்பட்டிருந்த ஆயுதங்களை தாம் மீட்டுள்ளதாக திம்புலாகல பொலிஸார் தெரிவித்தனர்.

திம்புலாகல சோரிவில கனிஷ்ட வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள காட்டுப் பகுதியில் இருந்து இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் இந்தப் பகுதியில் விடுதலைப் புலிகளின் முகாம்கள் இருந்ததாகவும் அவற்றில் இருநத ஆயுதங்களாக இவை இருக்கலாம் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தேர்தல் ஆணையாளர் கலந்துரையாடல்

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே கலந்துன்ரயாடல் ஒன்று எதிர்வரும் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் வழங் கிய தகவலின்படி 2013 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டி யல் தொடர்பில், ஆணையாளர் அரசியல் கட்சிகளின் பிரதிநி திகளுக்கு விளக்கமளிக்கவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் 3 இலட்சம் வாக்காளர்கள் புதிய வாக்காளர் பெயர் பட்டியலில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

உத்தேச மேற்கு மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்கள் 2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியலுக்கு அமைய இடம்பெறவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூன்று வருட காலமாக "கள்ளநோட்டு" அச்சடித்தவர் கைது



மூன்று வருட காலமாக கள்ள நோட்டுக்களை அச்சிட்டு விநியோகித்து வந்ததாகக் கூறப்படும் 29 வயது இளைஞரொருவர் 5000 ரூபா, 1000 ரூபா 500 ரூபா கள்ள நோட்டுக்கள் 184 உடன் தெற்கு களுத்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த இளைஞர் இதற்கு முன்னர் கள்ள நோட்டுக்களுடன் மன்னார் பிரதேசத்தில் வைத்து இரகசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவரென தெற்கு களுத துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை நகருக்கு வந்த நபரொருவர் கடந்த வியாழக் கிழமை மாலை 500 ரூபா நோட்டொன்றைக் கொடுத்து தயிர் முட்டிகள் இரண்டைக் கொள்வனவு செய்துள்ளார்.

வர்த்தகர் 500 ரூபா கள்ள நோட்டு என்பதை அறிந்து கொண்டு அந்த நபரைப் பிடிக்க முயற்சித்தபோது அந்த நபர் மோட்டார் சைக்கிளில் ஏறி தப்பிச் சென்றுள்ளர்.

வர்த்தகர் இது குறித்து களுத்துறை பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கியை அடுத்து பொலிஸார் விரட்டிச் சென்று அந்த நபரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை சோதனையிட்டபோது அவர் காற்சட்டைப் பையிலிருந்து 136 ஐந்நூறு ரூபா கள்ள நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபரை விசாரணைக் குட்படுத்தியபோது வாத்துவ, வெல்லகொட பிரதேசத்திலுள்ள அவரது வீட்டிலிருந்து மேலும் 40 ஐந்நூறு ரூபா கள்ள நோட்டுக்களும் இரண்டு 5000 ரூபா கள்ள நோட்டுக்களும் ஐந்து 1000 ரூபா கள்ள நோட்டுக்களும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரை களுத்து நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர செய்துள்ளது.

# கத்திக்குத்தில் பலி

(கொழும்பு)

இரத்தினபுரி - கஹவத்த பொலிஸ் பிரிவில் வெளத்துர பிரதேசத்தில் உள்ள கொழுந்து மடுவத்திற்கு அருகில் ஒருவர் கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் 07.30 மணியளவில் கருப்பையா செல்வராஜ் (33 வயது) என்பவரே குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

வெள்ளத்துர பகுதியில் உள்ள இருவருக்கும் கொலை செய்யப்பட்டவருக்கும் இடையில் நீண்டநாட்களாக முரண்பாடு காணப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகத்தின் பேரில் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் இன்று பெல்மடுல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

# பரிசோதனைக்காக மண்டையோடுகளை சீனாவுக்கு அனுப்புவதற்கு எதிர்ப்பு

மத்திய மாகாணத்தில் மாத்தளை நகரில் மருத்துவமனைக் கட்டடமொன்றுக்கான அத்திவாரம் தோண்டும்போது ஓராண்டுக்கு முன்னர் கிடைத்த மனித எலும்புகளை மேலதிக பரிசோதனைக்காக சீனாவுக்கு அனுப்பும் அரசின் திட்டத்துக்கு காணாமற் போனவர்களின் உறவினர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்த மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகளுடன் தொடர்புடைய, காணாமற போனோரின் உறவினர்கள் தமது எதிர்ப்பை எழுத்துமூலமாக நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கவுள்ளதாக அவர்கள் சார்பில் வாதிடும் சட்டத்தரணியான நாமல ராஜபக்ஷ பி.பி.சி.யிடம் தெரிவித்தார்.

சீனா, இலங்கை அரசாங்கத்துடன் நெருங்கிய உறவைப் பேணுவதனால் அதன் பரிசோதனை முடிவுகளில் நம்பகத்தன்மை இல்லை என்று அவர் கூறினார்.

மாததளை புதைகுழி விவகாரத்தில் அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளுக்குத் தொடர்பு இருப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் வெளியாகியிருந்தன.

சீனாவில் நடாத்தப்படும் இரசாயன பரிசோதனை மூலம் நீதி கிடைக்காது என்று காணாமற்போனவர்களின் உறவினர்கள் கருதுவதாக சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சீனா தவிர்ந்த ஜனநாயக மரபுகளைப் பேணுகின்ற வேறொரு நாட்டில் இந்தப் பரிசோதனைகளை மேற் கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

மாத்தளை மனிதப் புதைகுழியில் இருந்து 154 மனித மண்டையோடுகள் கண்டெடுக்கப்பட்டன.

1988-89 காலப்பகுதிகளில் ஜே.வி.பி கிளர்ச்சி ஒடுக்கப்பட்டபோது காணாமற்போனவர்களின் உடல்கள் இங்கு புதைக்கப்பட்டிருக்கலாம் என்று அவர்களின் உறவினர்கள் கூறுகின்றனர்.

# ரஷ்ய பெண்ணுக்கு திருமண ஆசைகாட்டி மோசடி செய்தவருக்கு 14 வருட சிறை

இலங்கை வந்திருந்த ரஷ்ய பெண் பிரஜை ஒருவரை திருமணம் செய்வதாகக் கூறி 35600 அமெரிக்க டொலர் பணமோசடியில் ஈடுபட்ட நபர் ஒருவருக்கு 14 வருட சிறைத்தண்டனை மற்றும் 60,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் பேருவளை பிரதேசத்தில் கடந்த 2011ஆம் ஆண்டு இடம்பெற்றுள்ளது. அளுத்கம பிரதேசத்தைச் சேர்ந்த லக்மால் அபேகுணவர்தன என்பவருக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இந்நபர் குறித்த பெண்ணின் பெயரில் படகு ஒன்றை வாங்கி வியாபாரம் ஆரம்பிப்பதாக கூறி பண மோசடி செய்துள்ளார். களுத்துறை மேல் நீதிமன்ற நீதிபதி ஸகமபல் திலகரட்ன இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

# தமிழ் - முஸ்லிம் உறவில்; முறுகலை தீர்க்க நடவடிக்கை

(கொழும்பு)

கல்முனை இஸ்லாமாபாத் பகுதி தமிழர் பிரச்சினைகளை தீர்க்க கல்முனை முதல்வர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கல்முனை இஸ்லாமாபாத் முஸலிம் பிரதேசத்தை அண்மித்துள்ள தமிழ் பகுதியில் நிலவி வருகின்ற பிரச்சினைகள் குறித்து கல்முனை மாநகர முதல்வர் சட்டத்தரணி எம்.நிசாம் காரியப்பர் அவர்களின் கவனத்திறகு கொண்டு வரப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான விசேட சந்திப்பொன்று, கல்முனை மாநகர சபை முதல்வர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கல்முனை பௌத்த விகாராதிபதி ரன்முத்துகல சங்கரட்ன தேரர் தலைமையில் இந்து கோவில் தர்மகத்தாக்கள் மற்றும் கிறிஸ்தவ போதகர் உள்ளிட்ட தமிழ் பிரமுகர்கள் பலர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.


இதன்போது இஸ்லாமாபாத் பிரதேசத்தை அண்மித்துள்ள தமிழ் பகுதியில் நிலவி வருகின்ற பிரச்சினைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டு- சில தீர்மானங்களும் எட்டப்பட்டன.

குறிப்பாக இஸ்லாமாபாத் வீட்டுத் திட்ட பகுதியில் இருந்து வெளியிடப்படுகின்ற கழிவுகளால் தமிழ் பகுதி மக்கள் நீண்ட காலமாக எதிர்கொண்டு வருகின்ற அசௌகரியங்களை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு மாநகர ஆணையாளர் மற்றும் பொறியியலாளர் போன்றோருடன் பிரத்தியேகமாக ஆலோசித்து நடவடிக்கை எடுப்பதாக முதல்வர் உறுதியளித்தார்.

அத்துடன் இங்கு முன்வைக்கப்பட்ட ஏனைய சில கோரிக்கைகள் குறித்து, தான் சாதகமாகப் பரிசீலிப்பதாகவும் காலப்போக்கில் அவற்றை ஒவ்வொன்றாக நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் முதல்வர் தெரிவித்தார்.

முதல்வரின் இந்த அறிவிப்பை வரவேற்றுப் பாராட்டிய தமிழ் பிரமுகர்கள், தாம் உங்களை நம்புவதாகவும் நீங்கள் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்கள் அனைத்துக்கும் தாம் பக்கபலமாக இருப்போம் எனவும் குறிப்பிட்டனர்.

# அனர்த்த முகாமைத்துவ நிலையம் கட்டமைப்புடன் செயற்படவேண்டும்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிகள் பாராட்டத் தக்கன. மீள்குடியேற்றத்தின் பின்பு இந்த மாவட்டத்தில் இயற்கையால் மக்களுக்கு அனர்த்தங்கள் ஏற்பட்ட போதெல்லாம் உடனடியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான அனைத்து மாற்று ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்ற ஒரு சிறந்த கட்டமைப்பினைக் கொண்டு செயற்படுகின்றமை வரவேற்கதக்கது என ஈ.பி.டி.பி.யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்டசெயலகத்தில் தேசிய அனர்த்த பாதுகாப்புத்தின நிகழ்வின் போது கிளிநொச்சி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு 750 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் தெரிவு செய்யப்பட்ட 972 பயனாளிகளில் முதற் கட்டமாக 32 பயனாளிகளுக்கு காசோலை வழங்கும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது உலகின் கால நிலையில் பாரியளவில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் உலகிலுள்ள பல்வேறு நாடுகளிலும் மக்கள் ஏதோ ஒரு வகையில் பாதிப்புக்களை சந்தித்து வருகின்றனர் எங்களுடைய பிரதேசத்திலும் காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக விவசாயத்துறை பெரும் பாதிப்பினை சந்தித்துள்ளது. இனிவரும் காலங்களில் இயற்கையின் மாற்றங்களுக்கு ஏற்ப மக்களும் தங்கள் தங்கள் வாழ்க்கை முறைகளையும் மாற்றிக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் காலநிலை மாற்றங்களை கருத்தில் எடுத்து அரசு அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு அடுத்தாண்டு வரவு செலவு திட்டத்திலும் அதிக நிதியினை ஒதுக்கீடு செய்திருக்கிறது.

கடந்த காலத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களின் போது எங்களுடைய மாவ்ட்டம் குறிப்பாக கண்டாவளை பிரதேச செயலக பிரிவு இலங்கையில் அதிகளவு நிதியினை பெற்றுள்ளது. இதனைவிட உருத்திரபுரம் பிரதேசத்திலும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதியில் வெள்ள பாதுகாப்பு பணிகள் இடம்பெற்றிருக்கின்றன.

மேலும் பல பணிகளை மேற்கொள்ளவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மேலதிக அரச அதிபர் ஸ்ரீநிவாசன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதிப்பணிப்பாளர் சுகுனதாஸ், பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக்கற்கைகள் வணிகபீடத்தின் மனிதவள முகாமைத்துவம் - டிப்ளோமாக்கற்கை நெறிக்கான பரீட்சைகள் எதிர் வரும் ஜனவரிமாதம் 11,12,18,19 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, விண்ணப்பங்களை இதுவரை கையளிக்காதவர்கள் கற்கைநெறி இணைப்பாளருடன் அலுவலக நேரத்தில் நேரடியாகத் தொடர்பு கொண்டு அதற்கான நடவடிக்கைகளை ஜனவரி மாதம் 03ஆம் திகதிக்கு முன்னதாக மேற்கொள்ளும்படி மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இப்பரீட்சைக்குரிய நேர அட்ட வணையினை பீடாதிபதி அலுவலகத்தில் பார்வையிடலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (85)

## புதியநிர்வாகத்தெரிவு

(கரணவாய்)

கரவெட்டி இராஜகிராமத்தில் உள்ள வெருண்டி மயானத்தினை கண்காணிப்பதற்கு அமைப்பொன்று அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் தலைவராக த.மோகன், செயலாளராக ந.நகுலேஸ்வரன், பொருளாளராக வை.ஸ்டீபன்திலக், ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக 10 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அமைப்பு தெரிவு செய்யப்பட்டதை அடுத்து இம்மயானத்தினை துப்புரவு செய்யும் பொருட்டு சிரமதானப்பணிகள் முதற்கட்ட பணியாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. (18)

## எண் ஜோதிடப்படி 2014 உங்களுக்கு எப்படி?

### பிறந்த திகதிகள் 9-18-27

2014ஆம் ஆண்டில் சர்ப்பக்கிரகமான கேது தீமைப்பலாபலன்களை குறையச் செய்து நீங்கள் தொடுகின்ற முயற்சிகளில் மனம் குளிரும் வண்ணம் நன்மைப் பலன்களையே குவித்துக் கொள்ளப்போகின்றார். மலைபோல் வருகின்ற சோதனை வேதனைகள் யாவும் ஈற்றில் சாதனையாக மாறக்காரணம் நீங்கள் 9ஆம் எண் குறிக்கும் செவ்வாயின் ஆதிக்கராக இருப்பதே. ஏப்ரல் மாதம் வரை செயல்களில் மந்தப்போக்கு ஏற்படினும் பின்னர் அதிர்ஷ்ட அலைவீசத்தொடங்கும். இழுபட்ட பயணம், திருமணம் என்பன இனிதே நிறைவேறும். மனை, வாகனம் சொத்து விவகாரங்களில் இருந்து வந்த தடைகள் நீங்கிவிடும். மறைமுக எதிரிகள் வீண் விவகாரங்களில் மனதைச் செலுத்த வேண்டாம்.

தத்துப்புத்திர யோகமும், இரண்டாந்தாரமும் ஏற்படலாம். பாதுகாப்புக் குறைபாட்டினால் திருடர் தொல்லை தரலாம். இயன்றவரை பிறருக்கு உதவுவதை இந்த ஆண்டில் கைவிடுங்கள். விஷ ஜந்துக்களில் கவனம் எடுங்கள். அசாதாரண வேகம் விபத்தில் முடியலாம். தொழில் நிமிர்த்தம் இடப்பிரிவு தோன்றும். "பேஸ்புக் மூலம்" அவமானச் செய்தியை கேட்க நேரிடலாம். கண் மற்றும் நீரிழிவுநோயில் கவனமெடுங்கள்.

அதிர்ஷ்டசாலியாக வருவதற்கு 9,18,27,5,14,23ஆம் திகதிகளில் புதிய முயற்சிகளை ஆரம்பிக்கலாம். இயன்றவரை 02,11,20,29ஆம் திகதிகளை தவிர்த்து விடுங்கள். போர்புரியும் தெய்வங்களான முருகன் மற்றும் இஷ்ட தெய்வங்களை வணங்கி வரவும். ஆபரணங்களில் உடலின் தோலுடன் முட்டும் வண்ணம் பவள இரத்தினக்கல்லை அணியவும், விவாக எழுத்து மற்றும் திருமண நாளை கூட்டெண் 4,5,8 வருந்தினங்களில் மேற்கொள்ள வேண்டாம். சிவப்பு நிற ஆடைகள் அணியவும்.

(முற்றும்)

ஜோதிர் வித்யாரத்னா
வி.ஏ.சிவராசா



கரவெட்டி கரணவாய் ஜே/350 கிராமசேவையாளர் பிரிவில் வாழ் வெழுச்சித் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு தென்னங் கன்றுகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. (18)

## வரணிப்பகுதியில் தொடரும் திருட்டுக்கள்

(வரணி)

வரணிப்பிரதேசத்தில் தற்போது திருட்டுக்கள் அதிகரித்துள்ளதால் மக்கள் பயப்பீதியில் வாழ்வதைக் காணமுடிகிறது.

வீடுகள் வர்த்தக நிலையங்கள் என்று தொடர்ந்து திருட்டுக்கள் வழமையாக நடைபெறும் அதேவேளை கடந்தவாரம் வரணிப் பிரபல வர்த்தகர் ஒருவர் தனது வர்த்தக நிலையத்தைப் மூடிவிட்டு இரவு எட்டு மணியளவில் வீடு திரும்பிய வேளை திருடர்களின் தாக்குதலுக்கு உட்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (150)

## முரசின் இன்றைய பலன்

(29.12.2013 ஞாயிற்றுக்கிழமை)



விஜய வருஷம் மார்கழி மாதம் 14 ஆம் திகதி.
மரணயோகம்/துவாதசி. விசாக நட்சத்திரம் பி.ப. 03.39 வரை.
பின் அனுவும்.
இராகுகாலம 04.58 - 06.28 வரை. சுபநேரம 09.28 - 10.08 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** தொலைந்த ஆவணம் நடமாடும் சேவை மூலம் பெற்றமை வரப்பிரசாதம், முகப்புத்தகத்தைப் பயன் படுத்துவதால் கல்வி வாழ்க்கைபாதிக்கப்படுவது கண்டு பெற்றோர் விசனம்.

**ரிஷபம்** யுத்தகாலப்பாதிப்புக்கள் பதிய கிராமசேவை அலுவலரை சந்தித்தல், நீதிமன்ற நடவழக்கைகளுக்கு இடையூறு விள்ளவித்தமையினால் தண்டனைபெறல்.

**மிதுனம்** எடுக்கும் முயற்சிகளில் ஏற்படும் தடைகளை சமயோசிதபுத்தியினால் தகர்த்தெறிவீர்கள், தேவையற்ற பொழுது போக்குகளைத் தவிர்ப்பது நன்மைதரும்.

**கடகம்** கவனக் குறைவினால் பொருட்கள், பணம் என்பன திருடப்படும் நிலை ஏற்படல், உறவு விரிசலடைய முன்பு பேசித்தீர்த்ததால் முரண்பாடு விலகல்.

**சிம்மம்** பரீட்சைப் பாதிப்பினால் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு தொழில்தேட ஆரம்பம், கலைஞர்கள் வாய்ப்புக்களைத் தக்கவைப்பதினால் பின்னர் பாராட்டுக் கிடைக்கும்.

**கன்னி** நெருங்கியவர்களே எதிரிகளாக மாறினாலும் பின்னர் அரவணைப்பார்கள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்துவேறுபாடுகள் விட்டுக்கொடுப்பினால் மறைந்து விடும்.

**துலாம்** உடல் ஆரோக்கியத்தில் பாதிப்புக்கள் தோன்றி உடன்மறைந்துவிடும், அசையாத்சொத்துக்களாலும் வாகனங்களாலும் வீண் செலவுகள் ஏற்படும்.


**விருச்சிகம்** சிறுசிறு பாதிப்புக்கள் ஏற்பட்டாலும் பெரியதாக ஏற்படாது தப்பிவிடல், உணவு விடயத்தில் கவனமாக இருப்பதினால் நோயின்றி நலக்கேடுகள் வந்துசேராது.

**தனுசு** தொழிலில் போட்டிகள் அதிகரித்தாலும் எதிர் பார்த்த இலாபம் தடையின்றி வரும், புத்திரர்களால் மகிழ்ச்சிதரக்கூடிய சம்பவங்கள் உருவாகும்.

**மகரம்** மறைமுக எதிர்ப்புக்கள் விலகி உறவுக்கு கை கொடுக்க முயல்வார்கள், கொடுத்த கடன்கள் தொலைபேசிச்சம்பாஷனை மூலம் வந்து சேரும் வாய்ப்பு ஏற்படும்.

**கும்பம்** தன்னம்பிக்கை, தியாகமனப்பான்மையினால் காரிய சித்திமிளிரும், விவாக பேச்சுவார்த்தைகளில் சாதகமான முடிவு ஏற்படும்.

**மீனம்** குடும்ப வாழ்வில் நிலவிய பிரச்சினை விலகி தம்பதியரிடையே ஒற்றுமை ஏற்படும், உடல் ஆரோக்கியம் நன்றாகி பலமும் வலிமையும் தக்க வைத்தல்.



## சாதனையை நெருங்கும் ஜோன்சன்

(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலிய அணியின் இடதுகை வேகப் பந்து வீச்சாளர் 32 வயதான ஜோன்சன் இங்கிலாந்து அணிக்கெதிரான நான்காவது ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதல் இனிங்ஸில் 5 விக்கெட்டுக்களையும், இரண்டாவது இனிங்ஸில் மூன்று விக்கெட்டுக்களையும் அள்ளினார். இதையும் சேர்த்து இந்த தொடரில் அவரது ஒட்டுமொத்த விக்கெட் எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளது.

நூறு ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வரும் அவுஸ்ரேலியா-இங்கிலாந்து இடையிலான ஆஷஸ் தொடரில் இங்கிலாந்தின் பிராங் போஸ்டர் 1911-12 ஆம் ஆண்டு போட்டித்தொடரில் 32 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். ஒரு ஆஷஸ் தொடரில் இடதுகை வேகப்பந்து வீச்சாளர் ஒருவர் கைப்பற்றிய அதிகபட்ச விக்கெட்டுக்கள் இது தான். இந்தச் சாதனையை முறியடிக்க ஜோன்சனுக்கு இன்னும் இரண்டு விக்கெட்டுகள் மட்டுமே தேவை. எப்படியும் இந்த தொடரில் அவருக்கு இன்னும் ஒரு போட்டி எஞ்சி யிருப்பதால் பிராங் போஸ்டரின் சாதனையை முறி யடித்து விடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆஸிக்கு வெற்றியிலக்கு 231

(மெல்பேர்ன்)

இங்கிலாந்து அணிக்கெதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில் 231 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி அவுஸ்ரேலிய அணி ஆடி வருகின்றது.

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஐந்து போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரின் நான்காவது போட்டி அவுஸ்ரேலியாவின் மெல்பேர்னில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை அவுஸ்ரேலிய அணி தொடர்ந்தது. இக்கட்டான நிலையில் இருந்த அவுஸ்ரேலிய அணிக்கு ஹடின் பொறுப்புடன் ஆடி ஓட்டங்களைச் சேர்ந்தார். இறுதி விக்கெட்டுக்காக இந்த இணை 40 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்ற வேளை பிரிக்கப்பட்டது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஹடின் 65, நதன் லயன் 18, ரோஜர்ஸ் 61 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அண்டர்சன் நான்கு, ஸ்ரூவெர்ட் புரொட் மூன்று, ரிம் பிரெஸ்ணன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

51 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி, நதன் லயனின் சுழற்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. ஒரு முனையில் கப்டன் குக் பொறுப்புடன் ஆடியபோதும் மறுமுனையில் விக்கெட் சரியை எவராலும் நிறுத்தமுடியவில்லை. இருப்பினும் மறுமுனையில் கெவின் பீற்றர்சன் தாக்குப் பிடித்து விக்கெட் சரிவை நிறுத்தியவேளை, குக் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். தொடர்ந்து இங்கிலாந்து வீரர்களின் விக்கெட்டுக்கள் விரைவாகச் சரிக்கப்பட்டன. இறுதியில் இங்கிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் குக் 51, கெவின் பீற்றர்சன் 49 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நதன் லயன் ஐந்து, ஜோன்சன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



இந்நிலையில் 231 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் அவுஸ்ரேலிய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, விக்கெட் இழப்பின்றி 30 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் டேவிட் வோர்னர் 12, ரோஜர்ஸ் 18 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். பத்து விக்கெட்டுக்கள் கைவசமுள்ள அவுஸ்ரேலிய அணிக்கு இப்போட்டியில் வெற்றிபெற இன்னும் 201 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளது. இதேவேளை, ஐந்து போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் தொடரை அவுஸ்ரேலிய அணி 3-0 என்ற கணக்கில் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும். இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 255.

# ஆறுதல் வெற்றி பெற்றது இலங்கை

(அபுதாபி)

பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஐந்தாவது ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது. இருப்பினும், பாகிஸ்தான் அணி தொடரை வென்றது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சென்றுள்ள இலங்கை, பாகிஸ்தான் அணிகள் 5 ஒரு நாள் போட்டியில் பங்கேற்றன. தொடரை பாகிஸ்தான் அணி 3-1 என்ற கணக்கில் ஏற்கனவே கைப்பற்றி விட்டது. ஐந்தாவது மற்றும் கடைசி போட்டி அபுதாபியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி 49.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 232 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அன்வர், மொகமட் ஹபீஸ் ஆகியோர் தலா 41, கப்டன் மிஸ்பா உல் ஹக் 51 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லசித் மலிங்க நான்கு, லக்மல் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 233 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணி 49.4 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை



இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் குசல் பெரேரா, 47, டில்சான் 45, சங்கக்கார 22, சண்டிமால் ஆட்டமிழக்காது 64 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யுனைட்கான் மூன்று, சயிட் அஜ்மல் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை 3-2 என்ற கைப்பற்றியது. போட்டியின் ஆட்டநாயகனாக சண்டிமால், தொடர் நாயகனாக மொகமட் ஹபீஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# கலிஸிற்கு கல்தா



ருவென்ரி-20 உலக கோப்பை தொடருக்கான தென்னாபிரிக்காவின் உத்தேச அணியில் கலிஸ் இடம் பெறவில்லை. பங்களாதேஷில் 2014, மார்ச் 16ஆம் திகதி முதல் ஏப்ரல் 6ஆம் திகதி வரை, ருவென்ரி-20 உலக கோப்பை தொடர் நடைபெறவுள்ளது. இதற்காக 30 வீரர்கள் கொண்ட தென்னாபிரிக்க உத்தேச அணி அறிவிக்கப்பட்டது. இதில். சமீபத்தில் டெஸ்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த கலிஸ் சேர்க்கப்படவில்லை.இவர் கடந்த 2012இல்இலங்கையில் நடந்த உலக கோப்பை தொடருக்குப்பின், ருவென்ரி-20 போட்டிகள் எதிலும்பங்கேற்கவில்லை. இது குறித்து தென்னாபிரிக்க அணி செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், உலக கோப்பை ருவென்ரி-20 தொடரில் கலிஸ் இடம்பெறாததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. இவர், 50 ஓவர் உலக கோப்பை தொடரில் தான் விளையாட ஆர்வமாக உள்ளார் என்றார்.

உத்தேச அணி விபரம்: டு பிளிசர்ஸ் (கப்டன்), அம்லா, பெகார்டியன், ஹென்ரி டேவிட்ஸ், குயின்டன், டிவிலியர்ஸ், டுமினி, எல்கர், ஹென்ரிக்ஸ், இம்ரான் தாஹிர், இங்ராம், கிளைன்வெல்ட், மெக்லாரன், மில்லர், மோர்கல், கிறிஸ் மோரிஸ், ஆன்டாங், பார்னெல், ரொபின் பீற்றர்சன், பங்கிசோ, பிலாண்டர், ரோசோவ், ஸ்டைன், தியாரன், டிசாட்சொபே, டேன் விலாஸ், வில்ஜியோன், டேவிட் வியச்சி.


# நடால் வெளியேற்றம்

உலக ரென்னிஸ் சம்பியன்ஷிப் கண்காட்சிப் போட்டியின் அரையிறுதியில், ஸ்பெயினின் ரபெல் நடால், சகவீரர் டேவிட் பெரரிடம் தோல்வி அடைந்தார்.

அபுதாபியில், உலக ரென்னிஸ் சம்பியன்ஷிப் கண்காட்சிப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் நடால், ஜோகோவிச், டேவிட் பெரர், ஆன்டி முர்ரே, வாவ்ரின்கா, டிசோங்கா உள்ளிட்ட 6 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதியில் ஸ்பெயினின் ரபெல் நடால், டேவிட் பெரர் மோதினர். இதில் அபாரமாக ஆடிய டேவிட் பெரர் 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதியில், சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், பிரான்சின் ஜோ-வில்பிரைட் டிசோங்கா மோதினர். இதில் அசத்தலாக ஆடிய ஜோகோவிச் 7-6, 6-3 வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.




# பட்டத்தை தக்கவைப்பேன்

அடுத்த மாதம் நடைபெறும் அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்று பட்டத்தை தக்க வைப்பேன் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார் சேர்பியாவின் ஜோகோவிச்.

அவுஸ்ரேலிய ஓப்பன் நடைபெறுவதற்கு முன் நடைபெறும் அதிகாரப்பூர்வமான ரென்னிஸ் போட்டிகளில் அவர் பங்கேற்பது கேள்விக்குறியாக இருந்தது.

இந்நிலையில் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறுகையில், அபுதாபியில் நடைபெறும் கண்காட்சி ரென்னிஸ் போட்டியில் இந்த வாரம் விளையாடுகிறேன். இதைத் தொடர்ந்து மெல்பேர்னில் நடைபெறும் அவுஸ்ரேலிய ஓப்பனில்தான் களம் இறங்கவுள்ளேன். அவுஸ்ரேலிய ஓப்பனுக்கு போதுமான ஓய்வும், பயிற்சியும் அவசியம். அதனால், அப்போட்டிக்கு முன்பு வேறு எந்தப் போட்டியிலும் பங்கேற்க மாட்டேன் என்று தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய ஓப்பன் பட்டத்தை 2008, 2011, 2012, 2013 ஆகிய ஆண்டுகளில் ஜோகோவிச் வென்றுள்ளார். சமீபத்தில்தான் ரென்னிஸ் ஜாம்பவான் போரிஸ் பெக்கரை தனது பயிற்சியாளராக ஜோகோவிச் நியமித்துக் கொண்டார். போரிஸின் பயிற்சியில் களமிறங்கும் முதல் கிராண்ட்ஸலாம் அவுஸ்ரேலிய ஓப்பன் என்பதால் ஜோகோவிச் மீது மிகுந்த எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.



# இன்று தாச்சி இறுதி; காளியம்பாள், வள்ளுவர் பலப்பரீட்சை



தையிட்டி வள்ளுவர்



தாவடி காளியம்பாள்

(சண்டிலிப்பாய்)

இளைஞர் வெற்றிக் கிண்ண தாச்சிச் சுற்றுப் போட்டியின் இன்றைய இறுதி ஆட்டத்தில் தையிட்டி வள்ளுவர் அணியும், தாவடி காளியம்பாள் அணியும் பலப்பரீட்சை நடாத்தவுள்ளன.

வலி. தெற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின்அனுசரணையுடன் நடாத்தும் இளைஞர் வெற்றிக்கிண்ண தாச்சிச் சுற்றுப் போட்டிகள் உடுவில் உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

இப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் இன்று மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இப்போட்டியில் தாவடி காளியம்பாள் அணியும் தையிட்டி வள்ளுவர் அணியும் மோதவுள்ளன.

இறுதிப் போட்டியில் மோதும் இரு அணிகளும் பலம் மிக்கவை என்பதாலும் மிகப் பெரும் இரசிகர் படையை கொண்டிருப்பதாலும் எவ் அணி வெற்றி பெறும் என்பதை ஊகிப்பது கடினமே. வருட இறுதியில் நடைபெறவிருப்பதால் இப்போட்டி இரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இப்போட்டியை பெருமளவான இரசிகர்கள் கண்டுகளிக்கக்கூடிய வாய்ப்பு அதிகம் இருப்பதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)

## விளையாட்டுச் செய்திகள்

## ஆண்டு இறுதிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் ஆண்டு இறுதி கூட்டம் இன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலின்போது முக்கிய விடயங்கள் பல ஆராயப்படவுள்ளதாகவும், குறிப்பாக, கடற்கரை கரப்பந்தாட்டம் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்து விவாதிக்கப்படவுள்ளதாகவும், அடுத்த ஆண்டில் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட தரத்தை முன்னேற்றுவது குறித்தும் ஆராயப்படவுள்ளதாகவும் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் மனோகரன் தெரிவித்துள்ளார். எனவே, இக்கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது சமூகம் தருமாறு அவர் கேட்டுள்ளார். (93)

## மென்பந்து கிரிக்கெட் யாழ். நந்தாவில் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

மன்னார் முத்தமிழ் விளையாட்டுக் கழகம் நடாத்திய 15 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் நந்தாவில் அணி சம்பியனாகியது. இவ் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் நந்தாவில் அணியும் மன்னார் முத்தமிழ் அணியும் மோதின.

நாணயற் சுழற்சியில் வென்று முதலில் ஆடிய யாழ். நந்தாவில் அணி 15 ஓவர்கள் நிறைவில் 142 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சசிராஜ் 45, டிலான் 44, வினோத் 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் அன்ரன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 143 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மன்னார் முத்தமிழ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 33 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் ஜது 12, அன்ரன் 7 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சசிராஜ், டிலான், சுரேஷ் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் யாழ்ப்பாணம் நந்தாவில் அணி சம்பியன் பட்டத்தை வென்றது. (48)

## அராலி ஜேம்ஸ், டையமன்ஸ் முன்னேற்றம்

(சுன்னாகம்)

நியூபோறியஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டித் தொடரில் லீக் ஆட்டங்களில் அராலி ஜேம்ஸ், வதிரி டையமன்ஸ் அணிகள் வெற்றிபெற்றன.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் சுன்னாகம் நியூபோறியஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் அணிக்கு ஐந்து பேர் கொண்ட மாபெரும் கால்பந்தாட்டப் போட்டி நியூபோறியஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் இரவு இரண்டு ஆட்டங்கள் நடைபெற்றன. இதில் முதல் போட்டியில் நவிண்டில் கலைமதி அணியும், அராலி ஜேம்ஸ் அணியும் மோதவிருந்தன. இப்போட்டியில் நவிண்டில் கலைமதி அணி சமூகமளிக்காததால் அராலி ஜேம்ஸ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டன.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் வதிரி டையமன்ஸ் அணியும், இளவாலை யங்ஹென்றிஸ் அணியும் மோதின. இதில் இரு அணிகளும் மாறி மாறி பந்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. இருப்பினும் வதிரி டையமன்ஸ் அணி வீரர்கள் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்புக்களை உரிய முறையில் பயன்படுத்தி கோல்களைப் பெற்றனர். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியும் கோல்களைப் பெற்றது. இதனால் இவ்ஆட்டம் இரசிகர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இறுதியில் வதிரி டையமன்ஸ் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இப்போட்டித் தொடரில் முதல் சுற்று ஆட்டங்களே தற்போது நடைபெற்று வருவதாகவும், இவ் ஆட்டங்கள் அனைத்தும் லீக் அடிப்படையில் இடம்பெற்று வருவதாகவும், இதில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் அணிகள் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெறும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## அடுத்த வாரம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டவுள்ள பிரிவு மூன்றின் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் அடுத்த வாரம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டிகளுக்கான நிரலிடல் ஏற்கனவே, வெளியாகியதுடன், போட்டிகளில் பங்கு கொள்ளவுள்ளபாடசாலைகளுக்கு போட்டி அட்டவணை அனுப்பப்பட்டுள்ளதாகவும், க.பொ.த. சாதாரணப் பரீட்சை காரணமாக போட்டிகளை நடாத்த முடியாமல் இருந்ததாக போட்டி அமைப்பாளர்கள் தெரி வித்துள்ளனர். (எஸ்.பி.)

## விரைவில் இறுதி

(அராலி)

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி மாவத்தை விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வந்த கால்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தைத் திருநாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தை தைப் பொங்கல் தினத்தன்று நடாத்துவது சிறந்தது என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)



வதிரி டையமன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட மன்னார் பள்ளிமுனை சென். லூசியா அணியைக் காணலாம். இப்போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (48)

# இது வடக்கின் முதல்வருக்கு தேவையற்ற ஒரு துன்பம்

- சாலையூரான் -

ஆட்சி நிர்வாகத்தில் உலகத்தின் பழிச்சொல்லுக்கு ஆட்படாதிருக்க எமக்கு முன்னெச்சரிக்கை வேண்டுமென்ற ஒரு கருத்தை வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் வெளிப்படுத்தி இருக்கிறார்.

தமிழ் கூட்டமைப்பு உள்ளாட்சி சபைகளின் பட்ஜெட் தமது கட்சி உறுப்பினர்களாலேயே தோற்கடிக்கப்படும் நிலைமைகளுக்கு கவலைவெளியிட்டு உரையாற்றுகையில் இந்தக்கருத்தை அவர் முன்வைத்திருக்கிறார்.

வடக்கு முதல்வர் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்டிருந்த போதும் வடக்கின் தமிழ் சமூகம் மீதான தனது கூடுதலான அவதானிப்பை வெளியிலிருந்தே அதுவும் இனத்துவ நிலைப்பட்ட சிந்தனைகளின் வழி தமிழின் மேன்மையை அதற்கான விடுதலையை ஒரு பிரசார நோக்கில் அணுகுவதையே, அவரது சைவமும் தமிழும் கலந்த உரையை பத்திரிகைகள் கூடுதலாக வெளிப்படுத்தியிருக்கின்றன.

கூடுதலாக சட்டத்துறை மீதான தனது கற்றலின் வழி தமிழ் சமூகத்தின் மேன்மையை உலகுக்கு அறிவிக்க கிடைத்த அவருக்கான வாய்ப்பு ஒரு அரசியல் தலைமைத்துவத்தை தமிழ் மக்களின் பெயரால் அடைந்துகொள்ள அவருக்கு முடிந்திருக்கிறது.


இருந்தும் இதே தமிழ் சூழலுக்குள் முழுமையாக தன்னை புகுத்திக்கொண்டு வாழ்க்கை எதிர்கொள்ளும் சமூக நெருக்கடிகளை எதிர்கொண்ட பரிச்சயம் அவருக்கு இருக்க வாய்ப்பில்லை.

தமிழ் தேசத்திலிருந்து ஒரு உயர்நீதிமனற நீதியரசர் என்பதன் பெயரால் கூடுதலாக வடக்குக்கு வெளியே இடம் பெற்ற தமிழ் நிலைப்பட்ட சந்திப்புக்களில் தமிழையும் ஆன்மீகத்தையும் இணைத்த அவரது அனுபவம் காத்திரமானது.

ஆனால், தமிழனாக இருக்கின்ற போதும் ஏற்றத்தாழ்வு, பிரதேசம், பால், சாதி வேறுபாடுகளுக்காக அரசியலுக்கு தலைமைத்துவத்தை அனுமதிப்பதில் தமிழ் தலைமை கொண்டிருக்கும் பொறிமுறை யையும் முதல்வர் இன்னும் கற்றுத் தேறவில்லை என்பதையே அவரது கவலை வெளிப்படுத்துகிறது.

உள்ளாட்சி நிர்வாகத்தில் தமிழ் கூட்டமைப்பு உறுப்பினர்களின் குத்துவெட்டுக்களை புலப்படுத்தி நிற்கும் இந்த முரண்நிலை வெறுமனே இந்த உள்ளூராட்சி சபைகளுக்கு மட்டும் பொருந்தி நிற்கவில்லை.

மாறாக அது தமிழ் கூட்டமைப்பின் தலைவர்களுக்கிடையே நிலவும் அக நெருக்கடிகளையும் அவ்வாறே எமது தமிழ் தேசம் கொண்டிருக்கும் ஏற்றத்தாழ்வுகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றன என்பதை எமது வடக்கு முதல்வர் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.



கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் தமிழ் உருவாகியிருக்கலாம். நாமெல்லாரும் முன்தோன்றிய மூத்த குடிகளாக இருக்கலாம். ஆனால், இன்று எமது தமிழ்ச்சூழல் என்னென்ன அகமுரண்பாடுகளையெல்லாம் தன்னகத்தே கொண்டு தனது ஒட்டுமொத்த வளர்ச்சியை தானே மறுதலித்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த பட்ஜெட் தோற்கடிப்புக்கள் மிகச் சிறிய அளவிலேயே வெளிப்படுத்தி நிற்கின்றன. இதில் இன்னும் வெளிப்படுத்தப்படாதிருப்பவை ஏராளம்.

ஆக முதல்வரின் கூற்றுப்படி வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்ததற்காக தெரிவாகியிருக்கும் இந்த உள்ளாட்சி சபை உறுப்பினர்கள் ஏதோ தமிழ் தேசம் கருக்கொண்டிருக்கும் விடுதலைக்காக அவாக்கொண்டு தமிழ் தேசத்தின் மீதான அதீத அக்கறைக்காக மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் போன்று முதல்வர் ஆதங்கப்படுவதாக தெரிகிறது.

வடக்கே இந்த உள்ளூராட்சி சபைகளுக்காக போட்டியிட்ட ஏனைய கட்சிகள் போரில் பாதித்த மக்களுக்கு எதையாவது கொடுத்தேனும் வாக்குகளை கேட்க வேண்டும் என்கிற நிலைப்பாட்டை குறைந்த பட்சமாவது கொண்டிருந்தன.

ஆனால் தமது வாக்கு வேட்டைக்காக சர்வதேசத்தை சாட்சியாக்கி தமிழ் கூட்டமைப்பினர் மேற்கொண்ட பிரசாரத்தில் முகமே தெரியாத அதன் பிரதேச சபை வேட்பாளர்களுக்கு தமிழுக்கான தன்மானத்தின் பெயரால் உணர்ச்சி பொங்க வாக்குளை அள்ளி வழங்கியதன் பலன் இப்போது வடக்கு முதல்வரிடமிருந்து பிரதேச சபை உறுப்பினர்களை நோக்கி ஆறாத்துயராக வெளிப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களுக்காக முதல்வர் வெளிப்படுத்தியிருக்கும் இந்த மனத்துயரை அப்புறப்படுத்திக்கொண்டு சரியான ஒரு மனச்சமநிலையில் தமிழ் தேசத்தையும் அதற்கான அரசியலையும் நோக்குவதற்கு அவர் இன்னும் நிறைய கற்றுத் தேற வேண்டியிருக்கிறது. அதனையே அவரது துயரமும் சுட்டிநிற்கிறது.

# பூச்சியுண்ணும் தாவரம்



பூச்சி, விலங்குகளை உண்ணும் தாவரம் பற்றி பாடப்புத்தகங்களில் படித்திருக்கிறோம். அச்சுறுத்தும் வகையில் ஹொலிவுட் படங்களிலும் சில காட்சிகளை பார்த்திருக்கலாம். இங்கு படத்தில் காணப்படுவது அதே போன்று பூச்சியுண்ணும் ஒரு அபூர்வத் தாவரம்.

நெப்பந்தசேயி என்பது இதன் தாவரவியல் பெயர். இது கடல் மட்டத்தில் இருந்து 1,000 - 10,000 அடி உயரம் வரையுள்ள பகுதிகளில் வளரக்கூடியது. ஈரம்மிக்க காடுகள், சதுப்பு நிலங்கள், நீர்நிலை ஓரங்களில் நெப்பந்தசேயி 100 ஆண்டுகள் வரை வாழ்கிறது.

ஒரு அடி உயரம் முதல் 70 அடி உயரம் வரை கொடியாக மரங்களில் தொற்றி, காற்றில் சுற்றித் திரியும் மின்மினி பூச்சி முதல் குளவிகள் வரையிலான பூச்சிகளை பூஜாடி போன்ற தனது பூக்களில் சிக்க வைத்து, இது சாப்பிடுகிறது. வண்டு, நத்தை, குளவி என பூச்சிகளை மட்டுமில்லாமல், குட்டி எலியைக்கூட இந்த வகை தாவரங்கள் சாப்பிடுமாம்.

இவை அசைவத்தை விரும்பிச் சாப்பிடுவதற்குக் காரணம், உயிர் வாழ்வதற்குத் தேவையான புரதச் சத்துகள், அது வளரும் மண்ணில். குறைவாக இருப்பதுதான்.

பூக்களின் உயரம் 10 செ.மீ. முதல் 30 செ.மீ. உயரம் வரை. பூவின் கழுத்துப் பகுதியில் மூடி போன்ற இலை, குடுவையை மூடியிருக்கும். பூக்குடுவையில் மூன்றில் ஒரு பங்கு பெப்சின் என்ற திரவமும், கழுத்து விளிம்பில் நெக்டார் என்ற சுவையான தேனும் இருக்கும்..

தேன் வாசமும், பூவின் நிறமும் பட்டாம் பூச்சிகள், வண்டினங்களை கவர்ந்து இழுக்கும். ஆபத்தை உணராத பூச்சியினங்கள்,. பூவின் விளிம்பில் அமர்ந்து தேனை குடிக்கும் நொடியில், சரசரவென வழுக்கிக்கொண்டு பூவுக்குள் பெப்சின் திரவத்தில் விழும்.


ஜாடிக்குள்ளிருந்து பூச்சிகள் வெளியே வந்துவிடக்கூடாது என்பதற்காக, மெல்லிய இழை போன்ற சிறுமுடிகள் உட்புறம் சிலிர்த்தெழுந்து நிற்கும். இந்த முடிகள், பூச்சிகள் மேலே எழுந்து வராமல் தடுக்கும். பெப்சின் திரவம் பூச்சியை ஜீரணிக்கக்கூடிய சக்தியைக் கொண்டிருப்பதால், மேலே எழுந்து வருவதற்கான பூச்சிகளின் முயற்சி தோல்வியில் முடியும். கொஞ்சம் கொஞ்சமாய் திரவத்தில் கரைந்து போகும்.


அடைமழை பெய்தாலும் ஒரு சொட்டு நீர்கூட ஜாடிக்குள் விழுந்து பெப்சின் திரவம் நீர்த்துப் போகாமல் இருக்க, ஜாடி விளிம்பில் உள்ள இலை, மூடி போலச் செயற்படும்.

கிழக்கு ஆபிரிக்காவில், ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நெல்சன் மண்டேலா கைது செய்யப்பட்ட இடத்தில், ஒரு வித்தியாசமான நினைவிடத்தை கட்டி உள்ளனர். அருகில் சென்று பார்த்தால், ஏதோ குச்சிகளை நட்டு வைத்தாற்போல் இருக்கும். சற்று தள்ளி நின்று பார்த்தால், மண்டேலாவின் முகம் தெரியும். இந்த வித்தியாசமான நினைவுச் சின்னத்தை பார்க்க, நிறைய கூட்டம் வருகிறது.

நிறவெறிக்கு எதிராக போராடி, 27 ஆண்டு காலம் சிறையில் இருந்த, நெல்சன் மண்டேலா, கடந்த டிச. 6, 2013 அன்று, தன் 95வது வயதில் காலமானார். இவரது இறுதி சடங்கு, டிச. 15 ஆம் திகதி நடைபெற்றது. தங்களது மனம் கவர்ந்த தலைவருக்கு, அவரது சமாதியிலும், இதே போன்ற வித்தியாசமான நினைவுச் சின்னம் அமைப்பார்களா!

# குச்சிகளால் உருவம்!






ஆசியாவின் 3 இலட்சம் மக்களைக் காவு கொண்ட சுனாமி நிகழ்ந்து 9 ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

இந்த பேரனர்த்தம் நேர்ந்த கணங்களில் இலங்கை ஒன்றாக நின்றிருந்தது.

மனிதர்களின் இயலாமை கையறு நிலை உணர்த்தப்பட்டது.

இந்தோனேசியா -சுமத்திரா-யாவா, தாய்லாந்து, இந்தியா, இலங்கை என மனிதப்பேரவல மண்டலம் உருவானது.

மனிதர்கள் வேருடனும் வேரடி மண்ணுடனும் கடல் கொண்டு போன காட்சி அது.

இப்போது எல்லாவற்றையும் மறந்து வழமையான காரியங்களில் இறங்கியிருக்கிறோம்.

30 வருட யுத்தத்தில் இலங்கை இழந்த மக்களில்



# சினிமா மோகம் என்னும் அபத்தம்

- மாலன் -

எண்பதாண்டுகளுக்கு முன், அழகுணர்ச்சியின் (aesthetic sense) காரணமாகவோ, படைப்பூக்கத்தின் (creativity) காரணமாகவோ துவங்கியதல்ல தமிழ் சினிமா. ஆர்வக் குறுகுறுப்பின் (curiosity) காரணமாகத்தான் அது தோன்றியது. சர்ச்சை செய்வதில் ஆர்வமுடைய தமிழ் மனத்திற்குச் சாட்சி தமிழக அரசியல். வேடிக்கை பார்ப்பதில் (amusement) ஆர்வமுடைய தமிழ் மனத்தின் அடையாளம் தமிழ்சினிமா.

இன்றுவரை இந்த ஆர்வக் குறுகுறுப்பும், வேடிக்கை பார்த்தலும் (காட்டலும்)தான் நம் வெகுசன கலாசாரத்தின் உள்ளீடுகளாக இருந்து வருகின்றன. படைப்பூக்கம் என்பதையே மைய அச்சாகக் கொண்டு இயங்கி வந்த கலைகள் வணிகமயமாவது சினிமாவின் வருகையிலிருந்து துவங்குகிறது.

தமிழ் சமூகத்திற்கு சினிமாவின் பங்களிப்பு என்ன?

சமூகத்தின் பிரச்சினைகளை மிகைபட சித்தரித்து மக்களை அந்தப் பிரச்சினைகள் குறித்த யதார்த்தங்களிலிருந்து அன்னியப் படுத்தியது, அந்தப் பிரச்சினைகள் குறிந்து இருந்திருக்க வேண்டிய நியாயமான கோபங்களை மழுக்கி மலடாக்கியது, தகுதியற்றோர் குறித்த தனிமனித வழிபாடுகளுக்கு அடிகோலியது, அந்த வழிபாடுகளை அரசியலுக்கு மடைமாற்றி அரசியலை அறிவார்ந்த தளத்திலிருந்து துதிபாடலுக்கான களமாக மாற்றியது, குறுகிய காலத்தில் நிறையக் காசு பார்த்துவிடலாம் என்ற பேராசையை விதைத்து உழைப்பின் மீது சமூகத்திற்கு இருந்திருக்க வேண்டிய நம்பிக்கையைச் சிதைத்தது, கறுப்புப் பணத்தின் ஊற்றுக் கண்ணாகத் திகழ்ந்து நமது பொருளாதாரத்தை பலவீனமாக்கச் செய்தது இவைதான்.

அதிகம் பேரைச் சென்றடைந்தது என்ற கணக்கு தலைகளை மட்டும்



எண்ணும் ஜனநாயகத்திற்கு வேண்டுமானால் ஏற்புடையதாக இருக்கலாம். ஆனால் தலைக்குள் இருப்பதை எண்ணும் படைப்புலகில் அந்த விதி செல்லாக் காசு.

குறைந்த பேரைச் சென்றடையும் பத்திரிகைகளோ புத்தகங்களோ சாதித்ததைவிட சினிமாக்கள் அதிகமாக எதையும் சாதித்திடவில்லை.

சமூகத்தின் உண்மையான மேம்பாட்டிற்கு உழைத்தவர்கள் யாரும் சினிமாவைக் கொண்டாடியதில்லை.

அது ஒரு பாவகரமான தொழில்நுட்பம் ("Cinema is a sinful technology") என்றெழுதினார் காந்தி. ஐந்து தீமைகளில் ஒன்று என்றார் பெரியார். அவர்கள் சினிமாக்காரர்களாக இருந்ததில்லை. ஆனால் பத்திரிகையாளர்களாகப் பங்களித்தார்கள்.

மதம் ஒரு அபின் என்று மார்க்ஸ் சொன்னது சினிமாவிற்கும் பொருந்தும். அபின் வலியை மறக்கச் செய்யும் மருந்து மட்டுமல்ல, அடிமையாக்கும் போதைப் பொருளும் கூட.

சினிமாவைக் கலை என்று அறிவு ஜீவிகள் கூட நம்புகிறார்கள் என்பதுதான் விபரீதமான வேடிக்கை.. கலை என்பது பெரும்பாலும் ஒரு தனி மனதின் வெளிப்பாடு. கலை எந்தச் சூழலிலும் தனித்தியங்கும் சுதந்திர இயல்பு கொண்டது. கணினி இல்லாமல் கதை எழுதிவிடலாம். காகிதம் கூட இல்லாமல் கவிதை சொல்லலாம். ஒலி பெருக்கி இல்லாமல் கூட நாடகம் அரங்கேறும் அல்லது வீதிக்கு வரும். ஆர்மோனியப் பெட்டி கூட இல்லாமல் பாட முடியும். விளக்கின்றி சூரிய ஒளியில் கூட ஓவியமும் சிற்பமும் உருவாகும். ஆனால் தொழில்நுட்பம் இல்லாமல் ஒரு செ.மீ கூட திரைப்படம் தயாராகாது.

சினிமா ஒரு அறிவியலும் அல்ல. அறிவியலில் கற்பனைக்கு இடமில்லை. சினிமா அரசியலும் அல்ல. அது அதிகாரத்தின் குரலா-கவோ, அடிமைகளின் விடுதலைக் களனாகவோ செயல்படுவதில்லை. அது ஆன்மீகமும் அல்ல. அது ஓர் உள்ளொளிப் பயணத்திற்கு உங்களை இட்டுச் செல்வது இல்லை. அது ஆன்மாவோடு உரையாடல்கள் நிகழ்த்துவதில்லை. அது புலன்களைச் சீண்டிப் பார்க்கிற பொழுது போக்கு.

கூட்டிக் கழித்துப் பார்த்தால் சினிமா என்பது விற்பதற்கும் வாங்குவதற்குமான ஒரு வணிகப் பண்டம். அதன் மேல் மோகம் கொள்வதைப் போன்ற அபத்தம் வேறு ஏதுமில்லை.

# இயற்கை - உலகம் - மனிதர்

- சுகு-ஸ்ரீதரன் -

ஏழில் ஒரு பங்கினரை ஒரு கணத்தில் இழந்தோம்.

நாளை எமது நாட்டின் கரைகளை மேவி தண்ணீர் வராது என்பதற்கு ஒரு நிச்சயமும் இல்லை.

நாம் இருக்கும் வரை ஒருவரை ஒருவர் கழுத்தை திருகிக் கொண்டிருக்கப் போகிறோமா?

அல்லது இந்த புவிக் கோளைப் பற்றிய கரிசனைகளுடன் எமது மற்றைய சமூகப் பிரச்சினைகளை அணுகப் போகிறோமா?

இயற்கையின் கோரத்தாண்டவம் 60 வருட இனப்பிரச்சினை எல்லாவற்றையுமே ஒரு நொடியில் அர்த்தமிழக்கச் செய்து விடும்.

உலகத்தை நாளும் பொழுதும் நிணைக்க கொண்டிருக்கிறார்கள். கடல்களிலும் தரையிலும் இயற்கையாக இருந்த தாவரவியல் பூங்காக்கள், உயிரியல் காடுகள் அழிக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றன.

எமது தோட்ட வயல் நிலங்களை எல்லாம் கொங்கிறீற் காடாக்கி கொண்டிருக்கிறோம். எமது நிலமும் கடலும் நஞ்சாகிக் கொண்டிருக்கிறது.

இயற்கையைப் பற்றிய சூழல் பற்றிய கரிசனை இல்லாத முதலாளித்துவ உற்பத்தி உறவு முறை உலகமயமாக்கம் காபெற்ரோட்டுக்களின் விஸ்வரூபம் உலகை சக்கையாகப் பிழிந்து துவைத்தெடுத்திருக்கின்றன.

பனி உருகல், ஓசோன் படலத்தில் ஓட்டை பூமிப்பந்தின் தட்டுக்களில் ஏற்படும் விலகல்களும், உராய்தல்களும் - அடிக்கடி எழும் பூகம்பங்கள் இவை பற்றிய போதிய விழிப்புணர்ச்சி மனித குலத்தின் பாதுகாப்பு பற்றிய போதிய அளவு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்படவில்லை.

சுனாமி எமது புவிக் கோளில் ஒளிந்திருக்கும் ஈவிரக்கமற்ற ராட்சதன்.

சூழல் மனிதனின், மற்றைய ஜீவராசிகளின் இருப்புக்காகவே.

இவற்றை அழித்து உலகச் சுடுகாட்டை உருவாக்குவதாகவே இன்றைய போக்குகள் காணப்படுகின்றன.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்றவாறே சூறையாடல் நிகழ்கிறது.

தலைமுறைகளின் வாழ்வு பற்றி, அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு உணவு, காற்று, தண்ணீர் எப்படி கிடைக்கும் எப்படி இருக்கும் என்ற கவலைகள் இல்லை.

இந்த உலகில் மனிதர்கள் வாழ்வதற்கான உரிமை சர்வதேச பிரகடனமாக அமைய வேண்டும்.

அதற்கு உலகளாவிய அளவில் நடவடிக்கைகள் அவசியம்.

மனித குலம் அதன் நாகரிக மரபு, ஜீவனுள்ள மிச்ச மீதியான சூழல் பாதுகாக்கப்படவேண்டும். அது விரிவு படுத்தப்படவேண்டும்.

அரசியல் சமூக பொருளாதார - உற்பத்தி உறவு முறையை சார்ந்து தான் இதனை செயற்படுத்தமுடியும்.

கரியமில வாயுவைக் கட்டுப்படுத்துவதற்கான மாநாடுகள் நடந்துகொண்டு தான் இருக்கின்றன. ஆனால் பூமியை கரியமில வாயுமண்டலமாக்கும் செயல்கள் நாளாந்தம் தீவிரமடைகின்றன.

நாளாந்தம் எமது தெருக்களில் குவியும் வாகனங்களே எளிய சாட்சி.

பெருவாரியான மக்கள் சுரண்டப்படுபவர்களாகவும் சிறுபான்மையானோர் உலக வளங்களில் ஏக போகம் செலுத்தும் உலக ஒழுங்கு? நாடுகளின் ஒழுங்கு?

உலகின் கோடான கோடி மக்களின் பாதுகாப்பான வாழ்வு பற்றி அக்கறை செலுத்தாது, உலகளாவிய சுரண்டல் சமூக அமைப்பு புவிக் கோளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலானது.

உலகின் பெருவாரியான மக்கள் சார்ந்த சமூக ஆட்சிமுறைமையும் மனித குலத்தின் புவிக் கோளின் பாதுகாப்பும் ஒன்றோடொன்று தொடர்பு பட்டவை.

பாரிய சிறிய ஆயுதங்களை அழித்தலும் கடலும் நிலமும் நஞ்சாவதைத் தடுத்தலும் இன்று பாரிய சவால்களாக இருந்து கொண்டிருக்கின்றன.

உலகத்தின் பல்வேறு பகுதிகள் பாதுகாப்பில்லாமல் போய்க் கொண்டிருக்கும் சூழலில் உலகில்





எப்பகுதியிலும் சூழலுடன் இசைவுபட்டு வாழ்வதற்கான நிலைமைகள் ஏற்படுத்தப் படவேண்டும். பாழ்பட்டுப்போன நிலங்கள் மீண்டும் பாதுகாப்பான வாழ்வை ஸ்தாபிப்பதற்கான இடங்களாக மாற்றப்படவேண்டும் அது இன்றைய காலகட்டத்தின் தவிர்க்கமுடியாத வரலாற்றுத் தேவை.

நாடு இறைமை தொடர்பான கருதுருக்களில் மாற்றங்கள் தேவை.

உலகில் ஒருபகுதியினர் பாதுகாப்பாக வாழ்ந்து கொண்டு இன்னுமொருபகுதி மக்கள் அனர்த்தங்கள் மத்தியில் வாழ்வதை ஏற்றுக்கொள்வது மனித தார்மீக அறங்களுக்கு முரணானது.


எனவே இறையாண்மை தொடர்பான கருத்துக்களும் மறுபரிசீலனைக்குள்ளாக வேண்டும்.

யுத்த ஆக்கிரமிப்பு வகைப்பட்ட இராணுவங்கள் கலைக்கப்பட்டு மனித குலத்தின் பாதுகாப்பு தொடர்பான படையணிகளை கட்டுவதில் முழுக் கவனமும் செலுத்தப்படவேண்டும்.

சூழல் இயற்கையைப் பாதுகாப்பதற்கான விருத்தி செய்வதற்கான பேரியக்கம். குறிப்பாக மாணவர்களிலிருந்து சமூகம் முழுமைக்கும் அது அவசியப்படுகிறது.

உலகின் கோடான கோடி மக்களின் இருப்பு வாழ்விற்கு இசைவான பொருளாதார உற்பத்தி உறவுமுறை அமைய வேண்டி இருக்கிறது.

"நாம் வாழ்வதற்கான நிகழ்தகவு அச்சம் தரும் வகையில் குறைந்துள்ளது" என்று கவிஞர் சேரன், 1970களின் பிற்பகுதியில் தமிழ் சமூகத்தின் நிலை தொடர்பாக பதிவு செய்த கவிதை வரி, இப்போ புவி-மானிடத்தின் நிலைமைக்குப் பொருந்திப்போகிறது.






மயிலிட்டி ஆலயங்கள் மீதெழுந்த பக்திப்பாடல் இறுவட்டு வெளியீட்டுவிழா அண்மையில் வியாபாரிமூலை தெனியம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் நடைபெற்றது இந்நிகழ்வில் பாரம்பரிய பண்பாட்டுடன் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், தலைவர் இன்பதாஸ் உரையாற்றுவதையும், பல்கலைக்கழக விரிவுரையாளர் பொ.யோகானந்தம் இறுவட்டை வெளியீட்டு வைப்பதையும் காணலாம். (116)

# ஆசிரியர்கள் இடமாற்றம் ஏப்ரலுக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கஷ்டப் பிரதேசங்களில் 6 வருடத்திற்கு மேல் சேவையாற்றிய 152 ஆசியர்களுக்கு 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வழங்கப்பட இருந்த இடமாற்றத்தினை ஏப்ரல் மாதத்திற்கு மாற்றியுள்ளமை தொடர்பாக ஆசிரியர்கள் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

இது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ். செம்மணி வீதியில் அமைந்துள்ள வடமாகாண கல்வி திணைக்களத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில்,

“ஏற்கனவே இடமாற்றம் வழங்கப்பட்டதன் அடிப்படையில் தங்கியிருந்த வீடுகளை கைவிட்டும் பிள்ளைகளை வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றுவ தற்கு அனுமதி பெற்றுள்ளோம். இந் நிலையில்,, தற்போது வடமாகாண கல்வி அமைச்சு பொறுப பற்ற முறையில் இடமாற்றத்தை பிற்போட்டுள்ளதாக அறிவித்துள்ளது. இதனால், நாங்கள் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம். இதனால் இடமாற்றத்தினை ஜனவரி மாதத்திற்கே வழங்க வேண்டும்“ என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலனை தொடர்பு கொண்டு கேட்டபோது,

இடமாற்றங்களை வழங்குவதற்கான முடிவுகளை எதிர்வரும் திங்கட்கிழமை தெரிவிப்பதாக கூறினார்.

மேற்படி ஆசிரியர்களுக்கு வடமாகாண கல்வி அமைச்சினால் கடந்த நவம்பர் மாதம் இடமாற்றங்கள் வழங்கப்பட்டு, அதனை உறுதிப்படுத்திய கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன.

இக்கடிதங்களில் ஆசிரியர்களுக்கான பாடசாலைகளும் ஒழுங்கமைக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டு ஜனவரியில் கடமைகளை பொறுப்பேற்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (25)

# சட்டவிரோத கசிப்பு விற்பனை

(கரணவாய்)

வரணி குடம்பியன் கிராமத்தில் சட்டவிரோதமாக இடம் பெறும் கசிப்பு விற்பனை மற்றும் உற்பத்தி நடவடிக்கையால் அக் கிராமத்தில் வாழும் ஏனைய பொதுமக்கள் சிரமங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் கசிப்பு வீடுகளில் மறைத்து உற்பத்தி செய்யப்படுவதுடன் வியாபாரமும் இடம்பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இரவு வேளைகளில் பொதுமக்கள் நடமாட முடியாதுள்ளதாகவும் இது தொடர்பாக பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. (18)

# தொழிற்கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் பின்வரும் இலவச கற்கைநெறிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் யாழ். மாவட்டத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் ஆரம்பிக்கப் படவுள்ளது. இதன்படி கட்டட நிர்மாண தொழில்நுட்ப உதவியாளர் வீட்டு மின்னிணைப்பாளர் காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்) மரவேலை தொழில் நுட்பவியலாளர் (தளபாடம்) நீர்க்குழாய் பொருத்துனர் வெளியிணைப்பு இயந்திரம் திருத்துனர் அலுமினியம் பொருத்துனர் வீட்டு மின்சார உபகரண திருத்துனர் விவசாய உபகரண திருத்துனர் மின் மோட்டார் கம்பி மீள் முறுக்குனர் (வைண்ளங்) இவ்வனைத்து கற்கைநெறிகளும் தேசிய தொழிற் தகைமை (NVO) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். இக் கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம் 1ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல 12 கே. கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (தொ.பே. 021 222 7949) இல் எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன்னர் மேற் கொள் ளுமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார்.

# “சிசு” எரித்து புதைப்பு; சந்தேக நபர் ஒருவர் கைது

உரும்பிராய் பகுதியில் எரிந்த நிலையில் மீட்கப்பட்ட சிசுவின் சடலம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார் என யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமல்சேகர தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களுக்கான வாராந்த மாநாடு நேற்று முன்தினம் யாழ். பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 22ஆம் திகதி உரும்பிராய் பகுதியில் எரியூட்டப்பட்ட நிலையில் புதைக்கப்பட்ட சிசுவின் மரணம் தொடர்பில் குறித்த சிசுவை பிரசவித்தவரின் கள்ளக்காதலன் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த பெண் ஏற்கனவே திருமணமாகி கணவர் வெளிநாட்டில் உள்ளார். இந்நிலையில் வேறு ஒருவருடன் ஏற்பட்ட தொடர்பினாலேயே குழந்தையை பிரசவித்திருந்தார்.

எனவே குழந்தை பிறந்து சில மணிநேரத்திலேயே எரியூட்டப்பட்டு உரப்பையில் போட்டு வீட்டிற்கு சற்றுத்தொலைவில் புதைக்கப்பட்டிருந்தது எனவே இது குறித்து சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் விசாரணைகள் தொடர்ந்தும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# க.பொ.த. உயர்தரப்பெறுபேறு

*சாவகச்சேரி இந்துக்கல்லூரி*

**கணிதப்பிரிவு**

த.சிவதாஸ் 3ஏ.மாவட்டநிலை -3, ஆர்.கிருஷிகா 3ஏ மாவட்ட நிலை 23, ரி.தர்சிகன் 2ஏ,பி மாவட்டநிலை 29, எஸ். செந்தூர்க்குமரன் 3பி எஸ். சர்மாவிஷாகன் ஏ,2பி, வி.ராஜ்குமார் ஏ,2பி, பி.சத்தியகுகன் 3பி, பி.பரந்தாமன் 3பி, ஆர் நிதீஸ்ராம் 3பி, என்.பார்த்தீபன் 2பி,சி, என்.கேகயன் 2பி, சி., ஏ.விமலினி பி,2சி, யூ.கிருத்திகா பி.2சி, ஆர் கீர்த்தனா பி,2சி.

**உயிரியல் பிரிவு**

வை.கௌதமி ஏ,2பி மாவட்டநிலை 43, கே.டிலக்ஷனா 3பி, என்.கஜீபன் ஏ,பி,சி, எம்.கெல்கரனி 2பி,சி, பி.ஜென்சி பி,2சி, கே.அபிராமி 2பி,சி, சி.தமீரா 2பி,சி, ரி.துர்க்கா பி,2சி,

**கலைப்பிரிவு**

ரி.வின்ஷன் 3ஏ மாவட்ட நிலை 4, எஸ்.கமலதீபன் 3ஏ மாவட்டநிலை 13, எம்.சுஜிதா 2ஏ,பி, பி.நிதுர்ஷன் 2ஏ,சி, வை.நிர்ஷனா ஏ,2பி, எம்.கிருத்திகா ஏ,2பி, ஸ்ரீஇந்துஷா 3பி, எஸ்.பிரதீபா ஏ,பி,சி, எஸ்.பின்துஜன் ஏ.2பி, பி.மோகனரதி, ஏ,பி, சி, கே.வான்மதி ஏ,பி,சி, என்.யசிந்தன் ஏ,பி,சி, கே.விஜயதரன் ஏ.பி,சி, எஸ். கம்சிகா 3பி, கே.சுகிர்னா ஏ,பி,சி, எம்.லக்சிகா ஏ,2பி, எஸ்.தனிஸ்கா, 3பி, கே.நிகிந்தினி ஏ,பி,சி, எஸ்.தர்மிகா ஏ,பி,சி, வி.சொரூபினி ஏ,பி,சி, ஏ.குகதாஸன் ஏ,பி,சி.

**வர்த்தகப்பிரிவு**

ஜெ.கஜந்திகா 2ஏ,பி. மாவட்ட நிலை 39, பி.ஜெயவிகிர்தா 2ஏ,பி மாவட்ட நிலை 48, ரி.துஜீவா 2ஏ,பி, எஸ்.நிஷாந்தினி 2ஏ,பி, எஸ்.அபிவர்னா ஏ,2பி, பி.பிரதீபா 3பி, பி.அபிவர்னா 3பி, எஸ்.கஜனி 2பி,சி, பி.கார்த்தீபன் 2பி,சி, எஸ்.சஜீசன் பி,2சி, வி.சங்கீர்த்தனன் பி,2சி, எஸ்.வினோஜன் பி,2சி, பி.சதீஸ்கரன் பி,2சி.

# பட்ஜட் பார்வைக்கு

(மானிப்பாய்)

வலி. தென் மேற்கு பிரதேச சபையின் 2014ஆம் ஆண்டுக்கான பட்ஜட் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை முதல் பட்ஜட் வைக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் ஜனவரி மாதம் 1ஆம் திகதி வரை குறித்த பட்ஜட்டை மக்கள் பார்வையிடலாம்.

கடந்த காலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜட்கள் தோல்வியடைந்திருந்தாலும் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட 2014ஆம் ஆண்டுக்கான பட்ஜட் நிறைவேற்றபட்டிருந்தது. இதன் தொடர்ச்சியாக மக்களின் கருத்துக்களைப் பெறும் நோக்கில் குறித்த பட்ஜட்டானது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. (48)

# பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு நிகழ்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஒழிப்பு வாரத்தின் இறுதி நாள் நிகழ்வு கரைச்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலர் கோபால பிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் செல்வமுத்து சிறிநிவாசன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக உதவி மாவடச் செயலர் திருமதி பரமோதயன் ஜெயராணி, கிளிநொச்சி யு.என்.எச்.சி.ஆர். தலைமையதிகாரி மரின் டின் கச்டோம்கச் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் வினாடி வினா போட்டி நடைபெற்றது. அத்துடன் கலை நிகழ்வுகள்,கவிதை குறும்படம் ஆகிய நிகழ்வுகளும் இடம் பெற்றன. (90)

# சமூகங்களுக்கிடையே ஒற்றுமை முல்லைத்தீவில் விசேட செயற்பாடு




(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இளைஞர் சேவை மன்றத்தினால் இரண்டு சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமையை மேம்படுத்துவதற்கு நுவரெலியாவில் இருந்து வருகை தந்த தென்னிலங்கை சகோதர மொழிபேசும் இளைஞர்கள் ஐம்பது பேரை வரவேற்கும் நிகழ்வும் பொதுக்கூட்டமும் அண்மையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் இ.பிரதாபன். முல்லைமாவட்ட இளைஞர் சேவை பணிப்பாளர் உ.சறோசா. ஆகியோரும் கலந்து இவர்களை வரவேற்றதோடு புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள இளைஞர்களுடன் கலாசாரங்களை பின்பற்றுவதற்கும் இன ஒற்றுமையை மேம்படுத்துவதற்காகவும் ஐந்து நாட்கள் இவர்கள் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# தொழில்நுட்ப உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் இலங்கை தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் வகுப்பு இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிப்பரீட்சைக்குரிய கல்வித்தகைமைகள், தொழில்சார் தகைமைகளை கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கமுடியும்.

கல்வித்தகைமையாக சிங்களம், தமிழ், ஆங்கிலமொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் வேறு ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் க.பொ.த.(சா/த)தரப் பரீட்சையில் சித்தி . பெற்றிருத்தல் அத்துடன் பிரயோக கணிதம், தூயகணிதம், இணைந்த கணிதம் மற்றும் பௌதீகவியல் விஞ்ஞான பாடங்களில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

தொழில்சார் தகைமைகளாக மொறட்டுவப் பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹடி நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோ (சிவில்) அல்லது இலங்கை பொறியியளாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையில் முதலாவது பகுதியை (சிவில்) வெற்றிகரமாக பூரணப்படுத்தியிருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா (சிவில்) அல்லது உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்) தேசிய தொழில் பயிற்சி மற்றும் தொழில் நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா அல்லது சம்பந்தப்பட்ட தொழில்துறைக்குரிய தேசிய தொழிற்திறமை (nvq) 6 நிலையின் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் என்ற பெயரில் 500 ரூபா காசுக் கட்டளையை தபால் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைதது எதிர் வரும் ஜனவரி மாதம் 27ஆம் திகதிக்கு முன்னர் அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தி திணைக்களம் த.பெ.இலக்கம் 537, கொழும்பு -07 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.குடாநாட்டில் ரின் பாலுக்கு கிராக்கி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பால்மா வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் ரின்பாலுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது

பால்மா வகைகளுக்கு விலை அதிகரிக்கப்படலாம் என்ற செய்தியை அடுத்து அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பால்மா வகைகளுக்கு குறிப்பாக அங்கர், லக்ஸ்பிறே, நெஸ்பிறே போன்ற் வற்றிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பால்மா வகைகளைத் தேடி கடைக்குச் கடை ஏறி இறங்கும் மக்கள் தற்பொழுது ரின்பாலை வாங்குவதில் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

இதனால் வர்த்தக நிலையங்களில் ரின்பாலுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. முன்னார் ரின்பால் கேக் மற்றும் சிற்றுண்டி வகைகள் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் தற்போது தேநீருக்காக மக்கள் இதனை வாங்கிச் செல்வதை காணக்கூடியதாகவுள்ளது.

# உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் நிகழ்வு





(வேலணை)

வேலணை சுகாதாரசேவைகள் வைத்திய அதிகாரி பணிமனையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச்செல்லும் உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை வேலணை சுகாதார சேவைகள் வைத்திய அதிகாரி பணிமனையின் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வேலணை பிரதேச சபை தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வேலணை பிரதேச அமைப்பாளருமாகிய சின்னையா சிவராசா (போல்), ஊர்காவற்றுறை பங்குத்தந்தை வண.ஆம்ஸ்ரோங் வேலணை பிரதேச வைத்திய அதிகாரி ஊர்காவற்றுறை வைத்தியசாலை வைத்திய அதிகாரி புங்குடுதீவு வைத்திய அதிகாரி ஆகியோர் கலந்துசிறப்பித்தார்கள். மற்றும் வைத்திய அதிகாரிகளும் சுகாதாரசேவைகள் பணிமனை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது அத்தோடு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

# பதிவிறக்கப் பெட்டகம்

தெற்கு சூடான் சுதந்திர நாடான பொழுது, அதை வரவேற்று மகிழ்ந்து கொண்டாடிய தமிழ் தேசியவாதிகள், அல்லது தமிழ் தேசிய ஊடகங்கள், இன்று அந்த நாட்டின் நிலைமை குறித்து அக்கறை காட்டுவதில்லை. சுயநிர்ணய உரிமைக்காக, தனி நாடு கோரிப் போராடும் ஒரு தேசம், தனது இலக்கை அடைந்து விட்டாலே, அந்த நாட்டின் இனப் பிரச்சினை தீர்வுக்கு வந்து விடும் என்று அர்த்தம் இல்லை. தெற்கு சூடான், எண்ணை வளத்தை பங்கு பிரிக்கும் சர்ச்சையினால் எழுந்த, ஒரு பிராந்திய சுயநிர்ணய உரிமை சார்ந்த போராட்டம் ஆகும். அந்த நாட்டில் எல்லோரும் ஒரே இனத்தை சேர்ந்தவர்களும் அல்ல, எல்லோரும் ஒரே மொழியைப் பேசுவதுமில்லை.

தெற்கு சூடான் சுதந்திர நாடாகியதும், அந்தப் பிராந்தியத்தில் பெரும்பான்மையாக உள்ள டிங்கா இனத்தவர் கையில் அதிகாரம் வந்தது. முன்பு விடுதலை இயக்கமாக இருந்த SPLM தலைவர் சல்வா கீர் ஜனாதிபதியானார். ஆனால், அந்த இயக்கம் கூட பல்வேறு இனங்களை சேர்ந்த போராளிக் குழுக்களின் கூட்டமைப்பு தான். இரண்டாவது பெரும்பான்மையாக உள்ள நுவெர் இனத்தவரை பிரதிநிதித்துவப் படுத்திய மாச்சார் உப ஜனாதிபதி ஆனார். தற்போது அவர்கள் இருவருக்கும் இடையில் முரண்பாடு. அந்த முரண்பாடு இரண்டு இனங்களுக்கு இடையிலான அதிகாரப் போட்டியாக வெளிப்பட்டது.

பிரச்சினையை சுமுகமாக தீர்க்க முடியாமல் போனதால், நுவெர் இனத்தை சேர்ந்த படையினர் கிளர்ச்சி செய்துள்ளனர். விரைவிலேயே, தலைநகர் ஜூபாவுக்கு அடுத்த பெரிய நகரமான Bor அவர்களின் கட்டுப்பாட்டில் வந்தது. தற்போது, எண்ணை வளம் உள்ள யுனிட்டி மாகாணத்தையும் கைப்பற்றி உள்ளனர். இதற்கிடையே, அரசுக்கு எதிரான கிளர்ச்சி, இரண்டு இனங்களுக்கு இடையிலான போராக பரிணமித்துள்ளது.

தெற்கு சூடான் இராணுவத்தில் இருந்த நுவெர் வீரர்கள் அனைவரும் வெளியேற்றப் பட்டு, தற்போது அது டிங்கா இன வீரர்களின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது. இனவெறி ஊட்டப்பட்ட டிங்கா இராணுவம், கண்ணில் படும் நுவெர் மக்களை கொன்று குவித்து வருகின்றது. தலைநகர் ஜூபாவில் கூட, வீதித் தடையரண்களில் நிறுத்தப்படும் பொது மக்களின் இன அடையாளம் சோதிக்கப் படுகின்றது. நுவெர் இனத்தை சேர்ந்தவர்கள் அகப்பட்டால், எந்தக் கேள்வியும் இன்றி ஸ்தலத்திலேயே சுட்டுக் கொல்லப் படுகின்றனர்.

– கலையரசன் தா.

தேசபக்தி என்பது என்னைப் பொறுத்தவரை அனைத்து மக்களுக்குமான நல்வாழ்வு. அது ஆங்கில ஆட்சிவழியாகக் கிடைக்குமெனில் அதை தலைவணங்கி ஏற்றுக் கொள்கிறேன். – காந்தி

பொப்பியுலிசம் என்பதை வெகுமக்களியம் என்று தோராயமாக மொழி பெயர்க்கலாம். அதாவது ஒரு குறிப்பிட்ட வரலாற்று தருணத்தில் தோன்றும் ஒரு சமூக நெருக்கடியை எதிர் கொள்ள வெகுமக்கள் தங்களுக்கு தாங்களே ஏற்படுத்திக் கொள்ளும் சமூக அமைப்புகளை பொப்பியுலிசம் என்று சொல்லலாம். பொப்பியுலிசம் உடனடியாக பரவக் கூடியது. ஆழமான தத்துவ பின்புலங்களோ வரலாறு மற்றும் சமூக அசைவியக்கங்கள் குறித்த இயங்கியல் புரிதல்களோ இல்லாதது.

முதலாளித்துவம் முழு வீச்சில் செயல்படாத தேசங்கள், நிலப்பிரபுத்துவம் உதிராத தேசங்கள், நிலப்பிரபுத்துவம் போதுமான அளவு வளர்ந்து தன்னியல்பாக முதலாளித்துவம் வராமல் காலனிய உறவுகளால் முதலாளித்துவம் அறிமுகப் படுத்தப்பட்ட தேசங்கள் போன்றவற்றில் பொப்பியுலிச இயக்கங்கள் தோன்றும் என வி.ஹோரெஸ் எழுதிய 'வளர்முக நாடுகளில் பொபபியுலிசம்' (முன்னேற்றப் பதிப்பகம்) நூல் கூறுகிறது.

அடையாள அரசியல் என்றோர் சொல்லை நவ மார்க்சியர்கள் பயன்படுத்துகின்றனர். அல்தூசரிய, கிராம்சிய உரையாடல்கள் வழி பொப்பியுலிசத்தையும் அடையாள அரசியல் செயல்பாடுகளையும் இன்று புதிய வெளிச்சத்தில் பார்க்க வேண்டிய தேவை ஒன்று உள்ளது. நம்முடைய சமகால சிக்கல்களை புரிந்து கொள்ள பொப்பியுலிசம் என்ற கோட்பாட்டில் சில சாத்தியங்கள் உண்டு. மேலும் சென்ற நூற்றாண்டு சிந்தனை முறையான பொப்பியுலிசம் என்பதை இந்நூற்றாண்டுக்கு தகுந்தாற் போல வளர்த்தெடுக்க வேண்டிய தேவையும் உள்ளது. – இளங்கோ கிருஷ்ணன்

# சாதனை மாணவர்களின் உள்ளத்திலிருந்து.....

## சிவயோகநாதன் துவாரகன்

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்
கணிதப் பிரிவு -3A
மாவட்ட நிலை : 30
தேசிய நிலை: 505



கணனி, கைத்தொலைபேசி போன்ற இலத்திரனியல் சாதனங்களில் மூழ்கியிருக்காது பயனுறுதியுடன் கற்றால் வெற்றி பெறலாம்.

புலமைப்பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகளையும் க.பொ.த (சா/த) பரீட்சையில் 5ஏ,4பி பெறுபேற்றையும் பெற்றேன். எனது தந்தை அலுவலக உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார்.

நான் படிப்பில் மட்டுமல்ல புதிர்ப்போட்டிகள்,கணித விஞ்ஞானப் போட்டிகளிலும் பங்குபற்றுவேன். விடாமுயற்சியுடன் கற்றமையால் தான் நான் இப்பெறுபேற்றை பெற முடிந்தது. நான் இப்பெறுபேற்றைப் பெற்றமைக்கு காரணமான அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், சக மாணவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

## பஞ்சாட்சரமூர்த்தி கௌசிகன்

யாழ்.ஹாட்லிக் கல்லூரி
கணிதப் பிரிவு -2A .B
மாவட்ட நிலை : 42
தேசிய நிலை: 582



தொடர்ச்சியாக தவறாது விடாமுயற்சியுடன் கற்றால் நல்லபெறுபேற்றைப் பெறலாம்.

நான் முதற்தடவையாக பரீட்சைக்கு தோற்றியபோது 3பி பெறுபேற்றையே பெற்றேன்.

எனினும் எனது தந்தையும் தாயும் ஆசிரியர்களாக உள்ளனர். அவர்களின் ஊக்கமும் ஒத்துழைப்புமே நான் இரண்டாவது தடவையில் தோற்றி இப்பெறுபேற்றை பெற முடிந்தது.

நான் புலமைப்பரிசில் பரீட்சையில் 136 புள்ளிகளையும் க.பொ.த (சா/த) பரீட்சையில் 6ஏ,2பி,சி பெறுபேற்றையும் பெற்றேன்.

நான் இப்பெறுபேற்றை பெற்றதையிட்டு எனது பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் சகமாணவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

## பதுமநிதி கஜானி

வேம்படி மகளிர் கல்லூரி
வர்த்தகப்பிரிவு -3A
மாவட்ட நிலை : 04
தேசிய நிலை: 556



கல்வியில் மட்டுமல்லாது வாழ்க்கையிலும் விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் நிச்சயம் சாதிக்க முடியும்.

நான் புலமைப்பரிசில் பரீட்சையில் 151 புள்ளிகளையும் க.பொ.த (சா/த) தரத்தில் 8ஏ,பி பெறுபேற்றையும் பெற்றேன். எனது தந்தை ஓய்வுபெற்ற லிகிதர். நான் கல்வியில் மட்டுமல்ல வினாடி வினாப்போட்டிகளிலும் பங்குபற்றியுள்ளேன்.

கடின உழைப்பும் நண்பர்களின் ஒத்துழைப்பும் அதிபர் ஆசிரியர்களின் அக்கறையுமே நான் இப்பெறுபேற்றை பெற்றதற்கு காரணமாகும்.

அந்தவகையில் நான் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

## கனகநாயகம் மதுரா

வேம்படி மகளிர் கல்லூரி
வர்த்தகப் பிரிவு -3A
மாவட்ட நிலை : 10
தேசிய நிலை: 1084



ஒவ்வொருவரும் உயர் நிலையை அடையவேண்டுமாக இருந்தால் கடினமாக உழைக்கவேண்டும். அந்த வகையில் நான் அன்றே படிக்கும் விடயங்களை அன்றே படிப்பேன். வினாக்களைஅதிகளவில் செய்து பயிற்சி எடுப்பேன்.

எனக்கு தந்தை இல்லாத நிலையில் தாயின் அரவணைபபிலும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பிலுமே இப்பெறுபேற்றைப் பெற முடிந்தது.

நான் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகளையும் க.பொ.த (சா/த) பரீட்சையில் 8ஏ,பி பெறுபேற்றைப் பெற்றேன். முயற்சி இருந்தால் முடியாதது ஒன்றுமல்ல.

தொகுப்பு : கணா நாதன்

# வடக்கில் தோன்றிய சமாதானமே மாணவர்களுக்கு உச்சப் பெறுபேற்றை தந்தது

### பல்கலை மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு,கிழக்குப் பகுதியில் நிலவும் சமாதானமான சூழ்நிலை காரணமாகவே அப்பகுதி மாணவர்கள் க.பொ.த உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறக் காரணமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் அனிகா ஹிரிபுரேகம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப்பின்னர் வடக்கு,கிழக்குப் பகுதியிலுள்ள பாடசாலைகள் எவ்வித இடையூறுகளுமின்றி சுமுகமாக இடம்பெற்று வருகின்றன. இதன்படி வெளியாகிய க.பொ.த உயர்தரப்பரீட்சை முடிவுகளின் படி வடமாகாணம் 63.3 வீதத்தையும்,கிழக்கு மாகாணம் 6.1 வீதத்தையும் பெற்று முதலிடத்தில் உள்ளன. சப்ரகமுவ மாகாணம் இரண்டாவது இடத்திலுள்ளது நாட்டிற்கும்,நாட்டினது அபிவிருத்திக்கும் கல்வி என்பது முதுகெலும்பாகும்.

யுத்தம் முடிவுற்ற நிலையில் உயர்தரபரீட்சை முடிவுகள் சிறந்த முன்னேற்றத்தை காட்டுவதுடன் இது கல்விக்கான சிறந்த அடித்தளமாகும். வடக்கு மக்கள் எப்பொழுதும் கல்விக்கே முன்னுரிமை அளித்து வருபவர்கள் இதிலும் குறிப்பாக யாழ்ப்பாண மக்கள் கல்வியில் அதிக ஈடுபாடுடையவர்கள்.

எனவே யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டநிலையில் வடக்கு மாகாணம் ஏனைய மாகாணங்களை தோற்கடித்து முன்னிலை வகித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஏறாவூரில் காணாமற் போன இளைஞன் குளியாப்பிட்டியில் சடலமாக மீட்பு



காணாமற் போனதாகக் கூறப்பட்ட ஏறாவூரைச் சேர்ந்த தமது உறவினர், குளியாப்பிட்டியில் சடலமாக மீட்கப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி குளியாப்பிட்டி பொலிஸாரிடமிருந்து ஏறாவூர் பொலிஸாருக்கு ஊடாக தமக்கு தகவல் அனுப்பப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

ஏறாவூர் ஜிப்ரி தைக்கா வீதியைச் சேர்ந்த யூ.எல். சலீம் என்ற 27 வயதுடைய இளைஞனே குளியாப்பிட்டி அக்கரவத்த நூறு ஏக்கர் தோட்டம் எனும் பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் வீடுகளுக்கு மாபிள்களைப் பதிக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்தவர் என்றும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இவர நாரம்மல பகுதியிலேயே மாபிள்களைப் பதிக்கும் தொழிலில் ஈடுபட்டுவரும்போது காணாமற போயிருந்தார் என்றும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

தேடுதலில் ஈடுபட்டபோது அக்கரவத்த நூறு ஏக்கர் தோட்டம் எனும் பகுதியில் இலைகுழைகளால் மூடப்பட்ட நிலையில் சடலம் காணப்பட்டது.

தற்சமயம் சடலம் பிரேத பரிசோதனைக்காக குளியாப்பிட்டி வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

# கருத்தடை செய்த பெண்ணின் மரணத்துக்கு அபூர்வ ஒவ்வாமையே காரணம்

கல்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த பெண்மணியொருவரின் மரணத்திற்கு அபூர்வமாக ஏற்படும் ஒவ்வாமையே காரணம் என்பது பிரேத பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம் டெபோடொன் என்ற குடும்பத் திட்ட தடுப்பூசி மாத்திரம் பாவனையிலிருந்து வாசனைப் பொருட்கள் மற்றும் மருந்து பொருட்கள் அதிகார சபையால் அப்புறப்படுத்தப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

கல்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த பெண்மணி டெபொடொன் என்ற குடும்பத் திட்ட ஊசி மருந்தைப் பெற்றதைத் தொடர்ந்து உயிரிழந்துள்ளார் என்ற அடிப்படையிலேயே இந்த ஊசி மருந்து உடனடியாக பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவ்வதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஊசி மருந்து எந்தவொரு அரசாங்க ஆஸ்பத்திரியிலோ அல்லது அரசாங்க குடும்பத் திட்டக் கிளினிக்குகளிலோ வழங்கப்படுவதில்லை அந்த ஊசி மருந்து சில தனியார் கிளினிக்குகளில் வழங்கப்படுகின்றன.

இந்த ஊசி மருந்து தொடர்பாக மருந்துப் பொருட்கள் தொடர்பான தேசிய தர ஆய்வு கூடம் மேலதிக ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது. அதன் மூலம் அப்பெண்மணியின் மரணத்திற்கு இம்மருந்து காரணமாக அமைந்திருக்குமா என்பதை இப்பரிசோதனையை அடிப்படையாக வைதது முடிவுக்கு வரலாம் என்றார்.

இதேவேளை குடும்பத் திட்ட ஊசி மருந்துகளில் இதனைத் தவிர ஏனைய ஊசி மருந்துகள் வழமை போன்று வழங்கப்படும் என்றார்.

இவ்வாறான நிலையில் குறித்த பெண்மணியின் பிரேதப் பரிசோதனையில் அபூர்வமாக ஏற்படும் ஒவ்வாமையே அப்பெண மணியின் மரணத்திற்குக் கார ணம் என உறுதியாகியுள்ளது.

இந்த அபூர்வ ஒவ்வாமை இருபது இலட்சம் பேரில் ஒருவருக்கே ஏற்படக்கூடியது என உலகளாவிய மருத்துவ நிபுணர்களால் மதிப்பிடப்பட்டுள்ளது என்று வாசனைப் பொருட்கள் மற்றும் தேசிய மருந்துப் பொருள் அதிகார சபையின் பணிப்பாளர் டொக்டர் ஹேமந்த பெனரகம தெரிவித்துள்ளார்.

# கைக்குண்டுடன் விளையாட்டு; சிறுவனின் உயிரை பலியெடுத்தது

திருகோணமலை புல்மோட்டை, புடவைக்கட்டு செந்தூர் நகர பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் சிறுவன் ஒருவன் பலியாகியுள்ளான்.

மேலும் இரண்டு சிறுவர்கள் காயமடைந்துள்ளனர். விளையாடிக்கொண்டிருந்த போது தாம் கண்டெடுத்த கைக்குண்டு ஒன்றை கல் ஒன்றின் மீது வீசியபோதே அது வெடித்துள்ளது. இதன் போது 6 வயதான சிறுவன் அந்த இடத்திலேயே பலியானான்.

காயமடைந்த இருவரும் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கீழே தரப்பட்டுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைக்க கருத்து நிறைந்த சொற்கள் பெறப்படும். அவற்றுள் வித்தியாசமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

34) 1) யிகுல்　2) யிமல்　3) ருகுவி　4) ருளது

35) 1) னாமை　2) மைஆ　3) டுண்ந　4) ல்றாஇ

36) எதிரிகள் துரத்தும்போது வாலை அறுத்துவிட்டுத் தப்பி ஓடும் பிராணி எது?
　1. ஓணான்　2. எலி　3. பல்லி　4. அணில்

37) முட்டை, இறைச்சி என்பவற்றைத் தரும் பிராணி எது?
　1. கோழி　2. ஆடு　3. கிளி　4. புறா

**பொருத்தமான எழுத்தை வைத்து கீறிட்ட இடங்களை நிரப்புக.**

38) 1. வி.........யாட்டு　(லை, ளை)　2. ம..........க்காலம்　(லை, ழை)
3. ம.......ணெண்ணெய்　(ன், ண்)　4. வி...........ணப்பம்　(ண், ன்)
5. செய.........ளர்　(ளா, லா)

**எதிர்ப்பாற் சொல் தருக**

39) இடையன் ..............................

40) அழகன் ..............................

41) இளையவன் ..............................

42) பாகன் ..............................

43) வேலைக்காரி ..............................

44) **பின்வரும் சிட்டையின் வெற்றிடங்களை நிரப்புக.**

| | பொருள் விபரம் | விலை | |
|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் |
| 1. | 250g ரூபாய் 15.00 வீதம் 1kg பூடு | .................. | .................. |
| 2. | 500*ml* ரூபாய் 30.00 வீதம் 1½ *l* பால் | .................. | .................. |
| 3. | 50cm ரூபாய் 50 வீதம் 2m துணி | .................. | .................. |
| 4. | 4 சவர்க்காரக்கட்டிகள் 48.00 வீதம் 7 சவர்க்காரக்கட்டிகள் | .................. | .................. |
| | 5. மொத்தம் | .................................... | |

45) **பின்வரும் தொடரைக் கருத்திற் கொண்டு தொடர்ந்து 6 வாக்கியங்கள் எழுதுக.**
ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்கள் இடம்பெறவேண்டும்.
"எங்கள் கிராமத்தை அழித்துச்சென்ற வெள்ள அனர்த்தத்தை நினைக்கும் போது" ..................

1. ..............................................................................

2. ..............................................................................

3. ..............................................................................

4. ..............................................................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II
1.30 மணி

# கல்வி முரசு



**கீழ்வரும் உருக்களில் ஒன்று வித்தியாசமானது. வித்தியாசமான உருவின் கீழ்க் கோடிடுக.**

01) பெற்றோல் நிரப்பும் நிலையங்களில் அவதானிக்கக்கூடிய குறியீடு எது?




02) நாய் கடித்தால் முதலில் என்ன செய்யவேண்டும்?
　1) கடித்த இடத்தில் துணியினால் கட்ட வேண்டும்.
　2) கடித்த இடத்தை சவர்க்காரத்தினாலும் தூயநீரினாலும் கழுவுதல்.
　3) கடித்த இடத்தில் கைமருந்தை பூசுதல்.
　4) நோயாளியை மருத்துவமனைக்கு கொண்டு செல்லல்.

03) எதிரேயுள்ள இலட்சினை பொறிக்கப்பட்டிருக்கும் பொதி எது?
　1) சீமெந்து　2) தீப்பெட்டி　3) கண்ணாடி　4) பால்மா



04) இலங்கையில் அடிக்கடி வெள்ளப்பெருக்கு அபாயத்திற்கு உட்படும் மாவட்டம் எது?
　1) அநுராதபுரம்　2) மன்னார்　3) இரத்தினபுரி　4) மாத்தறை

05) மஞ்சள் நிற பின்னணியில் காணப்படும், வீதிச்சமிக்ஞை எதனைக் குறிக்கின்றது?



　1) பாதுகாப்பில்லாத புகையிரதக் கடவை முன்னால்
　2) பின்னால் பாதுகாப்பில்லாத புகையிரதக் கடவை உள்ளது.
　3) வீதி எதிரே மூடப்பட்டுள்ளது.
　4) படலையுடன் கூடிய புகையிரதக் கடவை முன்னால்

06)

| | | |
|---|---|---|
| க | ய் | மீ |
| வா | ண | ந |
| சு | ண் | |

அருகேயுள்ள கூட்டினுள் உள்ள எழுத்துக்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் நீர்வாழ் உயிரினம் ஒன்றின் பெயரை எழுதுக.

..............................................................................

07)

| | |
|---|---|
| N | E |
| T | P |

பெட்டியில் உள்ள எழுத்துக்களைக் கொண்டு,
1) எழுதுவதற்குப் பயன்படும் ஒரு பொருளின் பெயரை எழுதுக..............................
2) இலக்கம் ஒன்றின் பெயரை எழுதுக..............................

08) ஒரு கிலோ சீனி 38.00 ரூபாவாயின் 500 கிராம் சீனியின் விலை என்ன?

..............................................................................

09) ஐந்து ரூபா வீதம் எட்டுப் பேனாக்கள் வாங்கும் பணத்திற்கு எட்டு ரூபா வீதம் எத்தனை பேனாக்கள் வாங்கலாம்?..............................

10) ❖ பாடலில் விபரிக்கப்பட்டுள்ள பறவையைத் தெரிவு செய்க

ஒய்ந்து வாடி நின்றார்
ஒற்றைக் காலில் நின்றார்
நீந்தும் மீனைக் கண்டே
நிமிர்ந்து நின்று பார்த்தார்

01) மீன்கொத்தி 02) பருந்து 03) கொக்கு

தெருவில் சுத்தம் செய்கிறாய்
சிறந்த தொண்டன் ஆகிறாய்
வண்ணக்குயில் குஞ்சுக்கு
வளர்ப்புத் தாயும் நீ ஆனாய்

01) மைனா 02) குயில் 03) காகம்


11) ❖ வினாக்களில் தரப்பட்ட நிகழ்வுக்கு பொருத்தமான உணர்வினை தெரிந்து கீறிடுக.


கூட்டில் அடைக்கப்பட்டிருந்த கிளி என்றோ ஒரு நாள் பறந்து சென்று தன் நண்பர்களுடன் சுதந்திரமாக சுற்றித்திரிவேன் என எண்ணியது ஆனால் அது எண்ணியது போல் நடக்கவில்லை


1) அச்சம் 2) வெட்கம் 3) மகிழ்ச்சி

12) தனது வீட்டுத் தோட்டத்தில் நாட்டப்பட்டிருந்த பயிர்களை மாடு கடித்துத் தின்று கொண்டிருந்ததை கண்ட தேவன் மாட்டை அடித்து விரட்டினான்.

1) கோபம் 2) வெட்கம் 3) பயம்

13)  இந்த உருக்கோலத்தில் 29வது வரும் உரு எது


1)  2)  3) 

14)  A வட்டம் சதுர எண்களையும், B வட்டம் முக்கோண எண்களையும் குறிக்கிறது எனின் C வட்டம் குறிக்கும் எண் யாது?




1) 21 2) 25 3) 36

15) ஓவியா எப்போதும் தன்னைப் பற்றி மட்டுமே சிந்திப்பவள். பிறர் நலனைப்பற்றி அக்கறை கொள்ள மாட்டாள். ஓவியாவைக் குறிக்க உரிய சொல் எது?

1) சுயநலவாதி 2) பொதுநலவாதி 3) சந்தர்ப்பவாதி

16) 


சதுர வடிவத் தாள் ஒன்றில் நிழற்றப்பட்ட பகுதி வெட்டி எடுக்கப்பட்டு A - B , D - C புள்ளிக் கோட்டின் வழியே மடித்தால் பெறப்படும் வடிவம் எது?

1)  2)  3) 

17) சரியான கணித செய்கையை தெரிவு செய்க

1) 5+3=12-5 2) 8-2=3 x3 3) 4x6= 18+6

18) சித்ராவின் தாய் சந்திரா, சிவசேகரின் மனைவி சந்திரா, சித்ராவின் தங்கை சங்கீதா.ஆகவே சிவசேகரின் மகள் சங்கீதா என்பது

1) சரியானது 2) பிழையானது 3) கூறமுடியாது



மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

19) நான்கிற்குப் பதினாறு அமைவது போல் பத்துக்கு?

1) ஐம்பது 2) அறுபது 3) நூறு 4) இருபது

20) இலங்கை மாணவர்களுக்கு இலவசமாகக் கிடைப்பவை.

1) சீருடை 2) பாடநூல் 3) இலவசபோதனை 4) மேற்சொன்ன மூன்றும்

21) இலங்கையில் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுவது?

1) மே -1 இல் 2) பெப்ரவரி-4 இல் 3) ஒக்டோபர்-6 இல் 4) ஜனவரி - 1 இல்

22) அபாயத்தின் நிறம்?

1) சிவப்பு 2) பச்சை 3) கறுப்பு 4) மஞ்சள்

23) சமாதானப் பறவை?

1) கிளி 2) புறா 3) கழுகு 4) தீக்கோழி

24) சதுரமுகி ஒன்றுக்கு உள்ள விளிம்புகளின் எண்ணிக்கை?

1) 08 2) 06 3) 12 4) 10

25) 20 cm பக்க நீளமுடைய கம்பியினால் ஆன முக்கோணி வடிவ உரு ஒன்று நீட்டப்பட்டு சதுர வடிவ உரு ஒன்று ஆக்கப்பட்டது. அச்சதுர வடிவ உருவின் ஒரு பக்க நீளம்?

1) 05 cm 2) 15 cm 3) 60 cm 4) 80 cm

26) பென்சில் ஒன்று ரூபா 5.50, பேனா ஒன்று ரூபா 10.50 இவ்விலைப்படி பேனா, பென்சில் ஒவ்வொன்றிலும் 10 இனை வாங்கும் ஒருவர் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?

1) ரூபா 55.00 2) ரூபா 105.00 3) ரூபா 160.00 4) ரூபா 16.00

27) 3 வாரத்தை மணித்தியாலமாக மாற்றினால் விடை?

1) 3 x 7 2) 3 x 24 3) 7 x 24 4) 3 x 7 x 24

28) 15 இலும் கூடிய ஒற்றை எண் எது?


1) 16 2) 17 3) 13 4) 14

29) V + X - IX + VIII என்பதன் பெறுமானத்தை இந்து அராபிய இலக்கமாக எழுதுக.

..............................................................................

30) நீங்கள் வாழும் நாட்டின் பெயரை எழுதுக.


..............................................................................

31)  அருகேயுள்ள கூட்டினுள் வரையப்பட்டுள்ள உருவகங்களில் ஒரு உருவம் ஏனைய வற்றிலிருந்து வேறுபடுகின்றது. அதன் பெயரை எழுதுக.

..............................................................................

32) புது..........தானம் இந்த இடைவெளியில் ஓர் எழுத்தை எழுதும் போது வேறுபட்ட கருத்துடைய இரு சொற்கள் பெறப்படும். அச்சொற்களை எழுதுக.

..............................................................................

33)  அருகேயுள்ள உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக.

..............................................................................

# அரசாங்கம் தமிழ் மக்களை ஒருபோதும் ஒடுக்கவில்லை

## -பொதுபலசேனாவின் பொதுச் செயலர்-

அரசாங்கம் தமிழ் மக்களை ஒருபோதும் ஒடுக்கவில்லை. முஸ்லிம் தீவிரவாதத்தை பரப்புவதைப் போல் இந்து பிரிவினை வாதமும் தலைதூக்குகின்றது என பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

"நாட்டில் இன்று கூட்டமைப்பின் பேச்சே அதிகரித்துள்ளது. அரசாங்கத்தின் செயற்பாடுகளை விடவும் சம்பந்தன் விக்கினேஸ்வரன் ஆகியோரின் கருத்துக்களே அதிகமாக பேசப்படுகின்றது. உண்மையிலேயே இலங்கையில் ஆட்சி நடத்துவது ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவா அல்லது சம்பந்தனா என்பதில் பெரியதொரு சந்தேகமாகவே உள்ளது.


பெரும்பான்மை சிங்களவர்களின் ஆதரவு ஜனாதிபதிக்கு கிடைத்துள்ள போதும் அரசாங்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் கெஞ்சுவது ஏன் என்று தெரியவில்லை. உண்மையிலேயே சிறுபான்மை மக்களிடம் அக்கறை வைத்திருந்தால் கூட்டமைப்பினர் என்றோ அரசாங்கம் பேச்சுவார்த்தைகளுக்குச் சென்றிருப்பார்கள். தனித்தமிழ் ஈழத்தினை உருவாக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் கூட்டமைப்பினருடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி தீர்வு காண்பதை விடவும் பௌத்த அமைப்புக்களுடன் பேசி நாட்டை பலப்படுத்துவது சிறந்தது.

மேலும் இலங்கையில் இன்று ஏனைய மதத்தவரின் ஆதிக்கம் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. முஸ்லிம் தீவரவாதிகள் தமது இனத்தவரை பரப்பிக் கொண்டிருக்கின்றனர். மறுபுறம் கிறிஸ்தவர்கள் பிரிவினை சக்தியாக உருவாகி வருகின்றனர்.

இந்நிலையில் அரசாங்கம் மீண்டும் மீண்டும் நாட்டில் குழப்பத்தினை ஏற்படுத்தும் வகையில் தமிழ் தீவிரவாதத்திற்கும் வழி ஏற்படுத்திவிடக் கூடாது. நாம் ஒருபோதும் தமிழர்களை ஒடுக்கவில்லை. அரசாங்கம் தமிழர்கள் மீது அக்கறை கொண்டதனாலேயே 30வருட கால யுத்தத்தினை முடிவிற்கு கொண்டு வந்தனர். இதனை ஒவ்வொரு தமிழ் குடிமகனும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்

அதேபோல் தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் போன்ற பிரிவினைவாதிகளுக்கு இடம் கொடுத்தால் மீண்டும் ஒரு முறை நாட்டில் குழப்பகரமான போர் சூழல் உருவாகும் என்பதனை ஜனாதிபதி மறந்துவிடக் கூடாது" என்றார்.

# தங்கம் கடத்தியவர்கள் கைது



இந்தியாவிற்கு தங்கம் கடத்திச் சென்ற ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து மதுரைக்கு கடத்திச் செல்லப்பட்ட 1,189 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதன் பெறுமதி இலங்கை ரூபாவில் 7 மில்லியன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்கத்தை விமானத்தில் கடத்திச் சென்ற இரண்டு பெண்கள் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

1,189 கிராம் தங்கத்தை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, கொழும்பில் இருந்து சென்னைக்கு கடத்திச் செல்லப்பட்ட 1.6 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தங்கத்தை விமானத்தில் கடத்திச் சென்ற ஷாஜகான், விக்னேஷ் உள்ளிட்ட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 1.6 கிலோ தங்கத்தை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

# முறையான உணவுப் பழக்கவழக்கம்; மக்களுக்கு தெளிவூட்ட ஏற்பாடு

முறையான உணவுப் பழக்கவழக்கங்கள் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்த அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தொற்று நோயல்லாத நோய்களைக் கட்டுப்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினர் டாக்டர் நலின் டி ஹேரத் தெரிவித்துள்ளார்.

தொற்று நோயல்லாத நோய்களின் தன்மை அதிகரித்துச் செல்வதை கடந்த காலப்பகுதியில் அவதானிக்க முடிந்துள்ளது.

மக்களின் உணவுப் பழக்கவழக்கங்களில் மாற்றம் மற்றும் கொள்வனவு செய்கின்ற உணவுகளில் நச்சுப்பதார்த்தங்கள் அடங்கியுள்ளமை போன்ற காரணிகளே இந்த நிலைமைக்கு காரணமாக அமைந்துள்ளன.

இதனடிப்படையில் மக்களின் முறையான உணவுப் பழக்க வழக்கங்கள் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்கான இணையத்தளம் ஒன்றை ஆரம்பிக்க அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் திட்டமிட்டுள்ளது.

பாரம்பரிய பயிர்களை உணவாகக் கொள்வதே உடல் நலனுக்கு மிகவும் சிறந்ததாக அமையும் என்றும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.




# காணாமற்போன 16வயதுச் சிறுமி 9 நாட்களின் பின் வீடு திரும்பியுள்ளார்

க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிவிட்டு காணாமற் போனதாக கருதப்பட்ட 16 வயது நிரம்பிய மாணவி ஒன்பது தினங்களுக்குப் பின் வீடு வந்துள்ள சம்பவம் மகியங்கனைப் பகுதியின் மாப்பாகடவெல என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த மாணவி பரீட்சைக்கு தோற்றிவிட்டு வீடு சென்று கொண்டிருந்த போதே இருவரினால் வானொன்றில் கடத்தி பதுளை பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

9 தினங்களுக்குப் பின் வேறு வானில் கொண்டு செல்லப்பட்டு மாணவியின் வீட்டருகே இறக்கி விடப்பட்டுள்ளார்.

இது சம்மந்தமாக குறித்த மாணவி கருத்து தெரிவிக்கையில் தன்னை கடத்தியவர்கள் யார என்பது தெரியாதென பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

மாணவி பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டுள்ளாரா என்று அறிவதற்காக மகியங்கனை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு .இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ............................................

முகவரி :- ............................................


பிறந்த ஆண்டு :- ............................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்


# பாடசாலைக்கு முன்பாக நுளம்புகள் பெருக்கம்



(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப்பாடசாலைக்கு முன்பாகவுள்ள வீதியின் மேற்குக் கரையோரமாகக் காணப்படும் நீண்ட வாய்க்காலுக்குள் தேங்கி நிற்கும் கழிவு நீர் வழிந்தோட முடியாமல் நிறைந்து நிற்கும் நிலையில் அதற்குள் அதிகளவு நுளம்புகள் பல்கிப்பெருகிக் காணப்படுகின்றன.

ஆரம்பப்பாடசாலைக்கு முன்பாக ஆரம்பித்துக் கனகசபை வீதியால் திரும்பி காங்கேசன் துறை வீதியை சென்றடையும் இவ்வாய்க்கால் அதற்கப்பால் செல்ல முடியாத நிலையில் அதற்குள் நிற்கும் கழிவு நீர் தேங்கியவாறு காணப்படுகின்றது.

வாய்க்காலுக்குள் நுளம்புகள் அதிகளவில் குவிந்து கிடப்பதால் அப்பகுதியில் டெங்கு நோய் ஏற்படும் அபாயம் பெருமளவில் உள்ளதாக அஞ்சப்படுகிறது.

சிறுபிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலை,அதிக குடியிருப்புக்கள் ,வர்த்தக நிலையங்கள் ,இந்துக் கல்லூரி,தினமும் பல நூற்றுக் கணக்கான மக்கள் உலாவும் இடம், ஆலயங்கள் எனப் பலதரப்பட்டவர்களையும் கொண்டதாகக் காணப்படும் இப்பகுதியில் உள்ள இவ் வாய்க்காலைப்பற்றி சம்பந்தப்பட்ட பலரிடமும் முறையிட்டு எந்தப் பலனும் கிடைக்கவில்லை என அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் இதனைப் பார்வையிட்டுத் தகுந்த நடவடிக்கையை உடன்மேற் கொள்ள வேண்டும்என அவர்களினால் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. (137)

# "ஆணி" தொண்டையில் சிக்கி சிறுவன் பரிதாப மரணம்

தொண்டையில் இரும்பு ஆணி சிக்கி சிறுவன் ஒருவர் உயிரிழந்த பரிதாபச் சம்பவமொன்று அம்பாறையில் இடம் பெற்றுள்ளது.

அம்பாறை மிஹதுபுர பிரதேச வீடொன்றில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் இரும்பு ஆணி ஒன்றை விழுங்கியுள்ளார்.

அது தொண்டையில் சிக்கியதை அடுத்து அவர் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நான்கரை வயதுடைய சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் மீதான பிரேத பரிசோதனை நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தெற்கு சூடானில் அமைதியை பேண பேச்சு நடத்துமாறு ஐ.நா. வலியுறுத்து

தெற்கு சூடானில் அமைதியை நிலை நாட்டுவதற்காக பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெற்கு சூடான் தலைவர்களை ஐ.நா. வலியுறுத்தி உள்ளது.

இந்தப் பிரச்சினை விசயமாக, வளர்ச்சி தொடர்பான கிழக்கு ஆபிரிக்க நாடுகளின் அரசுகளுக் கிடையிலான ஆணையத்தின் சார்பில் அதன் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் கூடி ஆலோசனை நடத்தினர். தெற்கு சூடான் அதிபர் சல்வ கிர் மற்றும் அவரது அரசியல் போட்டியாளருக்கு இடையே அமைதி பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான வழிகள் குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, கிழக்கு ஆபிரிக்க நாடான தெற்கு சூடா னில் தொடர்ந்து கலவரம் நீடிப்பதால் ஒருஇலட்சத்து 20ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தங்கள் வசிப்பிடங்களிலிருந்து புலம் பெயர்ந்துள்ளதாக ஐ.நா. சபை தெரிவித்துள்ளது. இவர்களில் பாதிப் பேர் ஐ.நா. முகாம்களில் தங்கி உள்ளனர்.

தலைநகர் ஜுபாவில் கடந்த 15ஆம் திகதி கலவரம் வெடித்தது. இது நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவி வருகிறது. கலவரம் வெடித்த நாள் முதல் அச்சம் காரணமாக பொது மக்கள் புலம் பெயர்வது அதிகரித்து வருகிறது.

முகாம்களில் தங்கி இருப்பவர்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தருவதற்காக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு சுமார் ரூ.1,000 கோடி தேவைப்படுவதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

உலகச் செய்திகள்

## ஜப்பானை கண்டிக்கிறது சீனா


ஜப்பான் பிரதமரின் சர்ச்சைக்குரிய 'யாசுகுனி' ஆலய வழிபாட்டுக்கு சீனா கண்டனம் தெரிவித்துள்ளது. ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் சியோடா என்ற இடத்தில் யாசுகுனி ஆலயம் உள்ளது. 1867 இல் நடந்த போஷின் போர் முதல் இரண்டாம் உலகப் போர் வரை, போர்களில் இறந்த சுமார் 25 இலட்சம் ஜப்பானியர்களின் நினைவாக இந்த ஆலயம் கட்டப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தில் போர்க் குற்றவாளிகள் பலரின் சிலைகள் வைக்கப்பட்டிருப்பதை, ஜப்பான் ஏகாதிபத்தியத்தால் பாதிக்கப்பட்ட சீனா, தென் கொரியா உள்ளிட்ட நாடுகள் எதிர்த்து வருகின்றன. இந்தக் கோயிலுக்கு ஜப்பான் தலைவர்கள் செல்வதையும், சிலைகளை வணங்குவதையும் இந்நாடுகள் கண்டித்து வருகின்றன. சீனா - ஜப்பான் இடையே நெருங்கிய பொருளாதர உறவுகள் இருந்தாலும், அரசியல் ரீதியில் இந்நாடுகள் இடையிலான உறவில் அவ்வப்போது சிக்கல் ஏற்பட்டு வருகிறது. கிழக்கு சீனக்கடல் பகுதியில் ஜப்பான் கட்டுப்பாட்டில் உள்ள சென்காகு தீவுகளை உள்ளடக்கி, சீனா கடந்த மாதம் புதிய வான் பாதுகாப்பு மண்டலம் அறிவித்தது. இது இவ்விரு நாடுகள் இடையிலான உறவில் மீண்டும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் ஜப்பான் பிரதமர் ஷின்ஜோ அபே, சர்ச்சைக்குரிய யாசுகுனி ஆலயத்துக்கு சென்று வந்தார். 'வரலாற்றில் ஜப்பான் இராணுவம் அடைந்த வெற்றிகளின் நினைவுச் சின்னம் இது' என்றும் அவர் குறிப்பிட்டார்.ஷின்ஜோ அபே இந்தக் கோயிலுக்கு சென்றுவந்த சிறிது நேரத்தில் சீனா தனது கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் கூறுகையில், அபேவின் இந்த செயல் சீன மக்களால் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று கூறியுள்ளார்.

# ரயிலில் தீ விபத்து; ஆந்திராவில் 23 பேர் பலி



இந்தியாவின் ஆந்திராவில் ரயிலில் ஏற்பட்ட தீவிபத்தில் 23 பேர் பரிதாபமாக பலியாகியுள்ளனர்.

பெங்களூர் எகஸ்பிரஸ் பெங்களூருவிலிருந்து மகாராஷ்டிர மாநிலத்திற்கு அருகில் நேற்று அதிகாலை 3.25 மணி அளவில் அனந்தப்பூர் அருகே ரயில் சென்று கொண்டிருந்த போது, ரயிலின் குளிர்சாதனப் பெட்டியில் திடீரென்று தீ விபத்து ஏற்பட்டது.

தொடர்ந்து தீ பரவியதால் தூங்கிக் கொண்டிருந்த பயணிகள் செய்வதறியாது கூச்சலிட்டனர். இந்தத் தீ விபத்தில் சிக்கி 23 பயணிகள் பரிதாபமாக உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

5 வண்டிகளில் சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் கடுமையாக போராடி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.தீ விபத்தில் சிக்கிய சில பயணிகள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை உயரக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

தீப்பிடித்தவுடன் ரயில் நிறுத்தப்பட்டதால் எஞ்சிய பெட்டிகளுக்கும் தீ பரவாமல் தடுக்கப்பட்டதால் பெரும் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது. இந்த விபத்து காரணமாக அனந்தப்பூர் மார்கத்தில் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

ரயில்வே உயர் அதிகாரிகள் விபத்து நடைபெற்ற இடத்தில் முகாமிட்டு தீவிர மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்தத் தீ விபத்து குறித்து விசாரணைக்கு ரயில்வே அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

# மாமிசம் உண்ணும் மீன்கடித்து 60இற்கும் மேற்பட்டோர் காயம்



ஆர்ஜென்டினாவில் உள்ள பரானா என்ற ஆற்றில் மாமிசம் உண்ணும் மீனினமான பிரானா மீன் கடித்து 60இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவத்தில் 20இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் காயமடைந்துள்ளனர். 7 வயதுடைய சிறுமி தனது கை விரலின் ஒரு பகுதியை இழந்ததோடு ஏனையோர் தமது கணுக்கால், விரல்கள் மற்றும் கைகளில் ஆழமான வெட்டு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இதுகுறித்து அந்நாட்டு கடல் சார் பாதுகாப்புப் பிரிவின் பணிபாளர் பெட்ரிகோ கார்னியர் கருத்து தெரிவிக்கையில்,

இங்கு நிலவிய 100 பாகை வெப்பத்திலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள ஆயிரக்கணக்கான மக்கள் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென கூர்மையான பற்களை உடைய பிரானா வகை மீன் கடித்ததில் அவர்களின் கை மற்றும் கால்களில் காயங்கள் ஏற்பட்டன என்று கூறினார்.

பிரானா மீன்கள் தென்அமெரிக்கா, ஆஜன்டீனா மற்றும் கொலம்பியா ஆறுகளிலும், அமேசன் நதிகளிலும்வாழ்கின்றன.

பிரானா மீன்கள் தனது கூர்மையான பற்களால் தம்மை விடப் பலமடங்கு பெரிய விலங்குகளைக் கூட ஒரு சில நிமிடங்களில் கடித்துக் குதறக் கூடியவை.

பெரும்பாலும் ஆறுகளில் குளிக்க செல்பவர்களே பிரானா மீன்களின் தாக்கத்திற்குள்ளாகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பிரமச்சரியம் தரித்தார் நித்தியானந்தாவின் சீடர் ரஞ்சிதா



நடிகை ரஞ்சிதா முறைப்படி தீட்சை பெற்று நித்யானந்தாவின் சீடராக சேர்ந்துள்ளார்.

கடந்த் சில ஆண்டுகளுக்கு முன்னர் நித்யானந்தாவுடன், நடிகை ரஞ்சிதா படுக்கையறையில் இருந்ததாக காணொளி ஒளிபரப்பானது.


இது கட்டுக்கதை என்று நித்தியானந்தா தரப்பில் கூறப்பட்டது. இது தொடர்பாக பல சர்ச்சையான விமர்சனங்கள் எழுந்தது. மேலும் தொடர்ந்து நித்யானந்தா ஆச்சிரமம் தாக்கப்பட்டது. பல இடங்களில் இவருக்கு எதிரான போராட்டம நடாத்தப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நித்யானந்தாவுக்கு 37ஆவது பிறந்தநாள் ஆகும். பிடாதி ஆசிரமத்தில் உள்ள புனித குளத்தில் குளித்து, காவி உடை அணிந்த ரஞ்சிதா, நித்யானந்தாவிடம் சென்று தீட்சை பெற்றார். தொடர்ந்து ரஞ்சிதாவுக்கு மா ஆனந்தமாயி என்று பெயர் சூட்டப்பட்டது.

தீட்சை பெற்ற ரஞ்சிதா நிருபர்களிடம் பேசுகையில், சத்யா, அஹிம்சா, ஆசையா, அபரிகிரஹா பிரம்மச்சரியத்தை புரிந்து கொண்டுள்ளேன். சம்பூர்த்தி, ஸ்ரதா, உபஞானம், அபஞானம் ஆகிய தத்துவங்களுடன் வாழ்வேன் என்றும் எப்போதும் நித்யானந்த ஆசிரமத்தில் இருப்பேன் எனவும் தெரிவித்துள்ளார்.

ரஞ்சிதா சன்னியாசம் பெற்றது குறித்து தகவல் அறிந்து நித்யானந்தா ஆசிரமத்திற்கு சென்ற பத்திரிகையாளர்களை அங்குள்ள சீடர்கள் தடுத்து நிறுத்தியதோடு, புகைப்படக்காரர்களின் கமெராக்களையும் பறித்துக்கொண்டு அடாவடித்தனம் செய்துள்ளனர்.

## விண்வெளியில் காலநிலை மையம்



விண்வெளியில் நிலவும் காலநிலை தொடர்பிலான எதிர்வு கூறல்களை வழங்குவதற்கான மையம் ஒன்றை அமெரிக்கா, நிர்மாணிக்கவுள்ளது.

அடுத்த வருடம் முதல் இந்த மையம் தமது பணிகளை ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

விண்வெளியில் ஏற்படுகின்ற காலநிலை மாற்றங்கள், சூரிய புயல்கள் போன்றவை தொடர்பிலும், இதனால் செய்மதிகள் மற்றும் வானொலி தொடர்புகளில் ஏற்படுத்தப்படுகின்ற விளைவுகள் தொடர்பிலும் எதிர்வு கூறப்படும் என்று கூறப்படுகிறது.

இந்தத் தகவல்கள் செய்மதி மற்றும் தொலை தொடர்பு சார்ந்த வர்த்தகர்களுக்கு துணைபுரியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காக வருடாந்தம் 4.6 மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்படவிருப்பதாக, அமெரிக்காவின் தேசிய கடல் மற்றும் விண்வெளி நிர்வாக சபை தெரிவித்துள்ளது.

# மீண்டும் தி.மு.க. கூட்டணியில் நடிகர் ராஜேந்தர் இணைவு



மீண்டும் தி.மு.க. கூட்டணியில் நடிகர் டி.ஆர்.ராஜேந்தர் இணைந்துள்ளார். தி.மு.க கலைஞர் கருணாநிதியின் அழைப்பினை ஏற்று அக்கட்சியில் மீண்டும் இணைந்துள்ளார்.

தி.மு.க. தலைவர் கலைஞரை அவரது கோபாலபுரம் இல்லத்தில் நடிகர் விஜய டி.ராஜேந்தர், தனது மனைவி உஷா ராஜேந்தருடன் சந்தித்துப் பேசியுள்ளார். இச்சந்திப்பின் போது முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமி உடனிருந்தார்.

இச்சந்திப்புக்குப் பின்னர் கலைஞர் வெளியிட்டுள்ள அறிக்கையில், டி.ராஜேந்தர் தி.மு.கழகத்தின் கொள்கை பரப்பு செயலாளராக இருந்து கழகத்தின் வளர்ச்சிக்காக பிரசாரப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு பின்னர் ஒரு சில தவிர்க்க முடியாத காரணங்களால் கழகத்தில் இருந்து விலகவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அதுகுறித்து நானும் அப்போது அறிக்கை வெளியிட்டிருந்தேன். தம்பி ராஜேந்திரனும் விளக்கம் அளித்திருந்தார். இப்போது தி.மு.கழகத்தின் பிரசார பகுதியை மேலும் வலுமைப்படுத்தும் எண்ணத்தோடு என் அன்பு அழைப்பினை ஏற்று என் விருப்பப்படி மீண்டும் தி.மு.கழகத்தில் அவர் இணைந்துள்ளதை வரவேற்கிறேன். என்றார்.

## அமெரிக்க அதிகாரிகளுடன் புதிய தூதுவர் சந்திப்பு

அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவராக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள எஸ்.ஜெய்சங்கர் நேற்று முன்தினம் அமெரிக்க உயர் அதிகாரிகளை சந்தித்தார். சந்திப்பின் போது, இந்தியப் பெண் தூதுவர் தேவ்யானி கோப்ரகடே கைதுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

புதிய தூதராகப் பொறுப்பேற்பதற்கான ஆணையை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரியிடம் ஒப்படைத்த பின்னர் முதல் பணியாக, அமெரிக்க அரசியல் விவகாரத் துறை துணைச் செயலர் வெண்டி ஷெர்மேனை சந்தித்தார் ஜெய்சங்கர். சந்திப்பின் போது, தேவ்வானி கைதுக்கு கண்டனம் தெரிவித்ததோடு மட்டுமல்லாமல் அவர் மீதான வசா மோசடி வழக்கை திரும்பப்பெற வேண்டும் எனவும் வலி யுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கையின்...

வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபேண்ட் தலைமையில் ஜெனிவாவில் யோசனை ஒன்றை கொண்டு வர முயற்சித்த போது இலங்கை அதனை தோற்கடித்தது.

எனினும் இந்த செயற்பாட்டில் பெற்ற பாடத்தை இலங்கை அரசாங்கத்தை விட பிரித்தானியா கற்றுள்ளது காணக் கூடிய விடயமாக உள்ளது.

பிரித்தானியா என்பது அமெரிக்காவுடன் மிக நெருக்கத்தை கொண்டுள்ள நாடு. நெல்சன் மண்டேலாவின் மரண சடங்கில் டேவிட் கமரூன், பராக் ஒபாமா ஆகியோர் டென்மார்க் பிரதமர் இணைந்து எடுத்து கொண்ட புகைப்படம் அவர்களின் தனிப்பட்ட நட்பை தெளிவாகக் காட்டியது.

டேவிட் கமருன் இலங்கைக்கு விடுத்துள்ள இந்தச் சவாலுக்கு அமெரிக்கா முழுமையான ஆதரவை வழங்கும் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை.

2009 ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிரான இராஜதந்திரத் தாக்குதல்களைப் பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் முன்னிலையில் இருந்து ஆரம்பித்தன. அன்று அமெரிக்க பின்னால் இருந்தது. 2011 ஆம் ஆண்டு இந்த விடயத்தில் கனடா முன்னலையில் இருந்தது. 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா முன்னிலையை கொண்டு செயற்பட்டது.

2009 ஆம் ஆண்டுக்கு பின் 5 வருடங்கள் கழிந்து இலங்கைக்கு எதிரான இராஜதந்திரத் தாக்குதலை தொடுக்க 2014 ஆம் ஆண்டில் மீண்டும் முன்னணிக்கு வந்துள்ளது. பிரித்தானியாவை முன்னால் வைத்து விட்டு பின்னணியில் அமெரிக்கா இருக்கின்றது.

பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ஆக்கிரமிப்பு ரீதியான சவால்களை தொடுத்துள்ளன. இதனை எதிர்நோக்க இலங்கை போதிய ஆயத்தங்களை செய் துள்ளதாக தெரியவில்லை.

ஜப்பான் இலங்கையின் நட்பு நாடாக இருந்த போதும், தனக்கு நெருக்கமான மூலோபாய நண்பனான அமெரிக்காவுக்கு எதிராக சென்று இலங்கைக்கு முழுமையான ஆதரவை வழங்கும் என்று எண்ண முடியாது.

ஜப்பான், இலங்கைக்கு சார்பாக தலையீடுகளை மேற்கொண்டு அமெரிக்காவின் கடுமையான தாக்குதலில் இருந்து இலங்கைக்கு ஓரளவு நிவாரணத்தைப் பெற்றுத்தரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தாகத் தோன்றுகிறது.

இதற்காகச் செய்ய வேண்டிய விடயங்கள் தொடர்பான யோசனைகளை ஏற்கனவே ஜப்பான், இலங்கைக்கு முன் வைத்துள்ளது.

ஜப்பானிய விசேட பிரதிநிதி யசுசி அகாஷி இதனை நேரடியாகவும், மறைமுகமாகவும் இலங்கைக்கு கூறியுள்ளார்.

2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வல்லரசு நாடுகள் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ள போகும் நடவடிக்கைகளை எந்தவிதத்திலும் குறைத்து மதிப்பிட வேண்டாம் என அவர் கூறியிருந்தார்.

2012, 2013 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட யோசனை களையும் தாண்டிய யோசனை இலங்கைக்கு எதிராக எதிர்வரும் மார்ச் மாதம் நிறைவேற்றப்பட அதிக வாய்ப்புகள் இருப்பதாகவும் இந்த யோசனைகளின் முடிவுகள் கடுமையானதாகவும் பாரதுமானதாகவும் இருக்கும் எனவும் அகாசி எச்சரிக்கை விடுத்திருந்தார்.

பிரச்சினையை ஆரம்பத்திலேயே தீர்த்துக் கொள்வதற்கு இலங்கைக்கு இருக்கும் இறுதி சந்தர்ப்பம் இதுதான் என்பதை ஆட்சியாளர்களுக்கு தெரியப்படுத்துவதற்காகவே அகாசியின் இலங்கைக்கான இம்முறை விஜயம் அமைந்திருந்தது.

மார்ச் மாதம் இலங்கைக்கு எதிரான தீர்மானகரமான மற்றும் கடுமையான நடவடிக்கை ஜெனிவாவில் எடுக்கப்படுவதை தவிர்க்க வேண்டுமாயின் 'சர்வதேச சமூகத்திற்குள் இலங்கைக்கு இருக்கும் நண்பர்களை அதிகரித்து அவர்களின் நம்பிக்கை உறுதிப்படுத்த இலங்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகாசி அறிவித்திருந்தார்.

அதேவேளை சீனா மற்றும் ரஷ்யாவின் நிலைமைகளை இலங்கை மிகவும் யதார்த்தமான வகையில் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே என்னுடைய நிலைப்பாடு.

ரஷ்யாவும் சீனாவும் இலங்கைக்கு ஆதரவு வழங்கும் என்பது உண்மை. எனினும் அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய இரண்டு நாடுகளுக்கு எதிராக சென்று. இந்நாடுகள் இலங்கைக்கு முழுமையான ஆதரவை வழங்கும் என தயான் ஜயதிலக்க கூறியுள்ளார்.

## அரசுக்கு...

றும் நவநீதம்பிள்ளை சமர்ப்பிக்கவுள்ள அறிக்கை தொடர்பில் கருத்து வெளியி டுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதேவேளை, இந்தியாவின் ஆளும் காங்கிரஸ் அரசுடன் சுமுக உறவைப் பேண முடியாமல் இருக்கும் இலங்கை அரசுக்கு பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் அழுத்தங்கள் அதிகரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். சர்வதேச தரத்திலான சுயாதீன விசாரணைப் பொறி முறையொன்று வகுக்கப்படும் என்று உறுதியளித்து ஐ.நா.செயலருடன் இணைந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2009 இல் கூட்டறிக்கையொன்றை விடுத்திருந்தார். ஆனால் அந்த உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

தேசிய இனப்பிரச்சினைக்கு 13ஆவது அரசமைப்புக்கு அப்பால் செல்வதாகவும் அவர் கூறியிருந்தார். அதுவும் இன்னமும் நிறைவேறவில்லை. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை சமர்ப்பிக்கவுள்ள அறிக்கை அரசுக்கு எதிரானதாகவே இருக்கும். இது அனைவருக்கும் தெரியும். ஏனெனில், உலகுக்கும் மனித உரிமைகள் சபைக்கும் வழங்கிய உறுதிமொழிகளை அரசு இன்னமும் நிறைவேற்றவில்லை என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

## மன்னார்...

ஏ.விஜயரத்தின, பேராதனை பகுப்பாய்வு திணைக்கள அதிகாரி கே.நந்தசேன, மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் டி.லக்சிறி விஜயசேன, உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஐ.வி.ரி. சுகதபால, மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துஸார தலுவத்த ஆகியோரும் பிரசன்னமாகியிருந்னர்.

மனித எலும்புக்கூடுகள் மீட்கும் பணிகள் இன்றும் தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கச்சேரியடியில் விபத்து; ஒருவர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதியில் கச்சேரியடியில் நேற்று இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கச்சேரிக்கு அப்பால் உள்ள மதுபான விற்பனை நிலையத்திற்கு முன்னால் நேற்று இரவு 8.30 மணியளவில் இரு கார்களும், ஒரு ஆட்டோவும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

ஒரு காரும், ஆட்டோவும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் தூக்கி வீசப்பட்ட ஆட்டோ வேறொரு காருடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் கோவில் வீதியைச் சேர்ந்த ராம் (வயது-25) என்பவரே காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன், இவ்விபத்துக் குறித்து யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். (இ)

## சர்வதேச...

மற்ற சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்வார் என்று அவர்கள் நம்பியிருக்கவில்லை. ஆனால் தேர்தல் நடந்து, இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே மாகாணசபையின் ஆட்சியதிகாரம் கிடைத்துள்ளது.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வகட்சி பிரதிநிதிகள் குழு அரசாங்கத்திடம் யோசனை களை முன் வைத்து பல ஆண்டுகள் கடந்து விட்டன.

ஆனால், கடந்த காலங்களில் அமைந்த இவ்வாறான நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்களும் ஆணைக் குழுக்களும் முன்வைத்த பரிந்துரைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

1947-இல் நிலைமை இப்படித்தான், 52-இல் இப்படித்தான் என்று வரலாற்றை முழுவதுமாக புரட்டி புரட்டிப் பேசமுடியும். ஆனால் ஜனாதிபதி, நாட்டிலுள்ள எல்லா தரப்பினரையும் இணைந்து பணியாற்றுவதற்காக வருமாறு திறந்த அழைப்பை விடுத்திருக்கிறார்.

அன்று விடுதலைப்புலிகளின் கொடூரங்களுக்கு மத்தியில் அமைதியாக இருந்த கூட்டமைப்பினர், இன்று பல்வேறு சமூக, பொருளாதார அபிவிருத்திகளுக்கு மத்தியிலும் மௌனம் காக்கின்றனர்.

இலங்கை அரசாங்கத்தின் மீது சர்வதேச ரீதியிலான அழுத்தத்தங்களைச் சுமத்த இதனை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தியே, சர்வதேச ஒக்ஷிஜனில் உயிர்வாழ்கின்ற தரப்பினர் இந்தத் தெரிவுக் குழுவை எதிர்க்கின்றனர்.

இந்த் நாடாளுமன்றத் தெரிவுக்குழு 13ஆம் திருத்தத்துக்கும் அப்பால்சென்று தீர்வுத் திட்டம் பற்றி ஆராயுமானால் அதில் கலந்துகொள்வதுபற்றி ஆராயமுடியும் என்று கூட்டமைப்பு கூறுகிறது.

இந்தத் தெரிவுக்குழு 13 ஆம் திருத்தம் பற்றி மட்டும் பேசுகிறது என்று கூட்டமைப்பு சொன்னால் அது சிறுபிள்ளைத் தனமானது. அரசியலமைப்பின் ஏதாவது பிரிவுபற்றி மட்டும் பேசுவதற்காக இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கீரிமலையில் அரங்கேறும் அடாவடி வியாபாரம்

## மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை புனித தீர்த்தக் கரையோரம் அடாவடியாக கச்சான் வியாபாரத்தில் ஈடுபடும் பெண் குறித்து பலரும் தமது விசனத்தை வெளியிட்டுள்ளனர்.

இறந்தவர்களின் பிதிர்க் கடன், வெளிநாட்டு, உள் நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் என நிறைந்து வழியும் கீரிமலை புனித தீர்த்தக் கரையோரம் பொண்ணொருவர் அடாவடியாகத் தனது வியாபாரத்தை மேற் கொள்கின்றார்.

அண்மைக்காலமாக சுற்றுலாப் பயணிகள் அதிகம் இங்கு வருகின்றனர். அவர்களிடம் தனது பொருளை வாங்கும்படி அடாவடி புரிவதுடன், மறுப்போருக்கு இயன்றவரை அருவருப்பான வார்த்தைப் பிரயோகத்தை வீசுகின்றார் அந்தப் பெண். இதனால் அங்கு வருவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதுடன், பிள்ளைகளுடன் குடும்பமாக வருவோர் பெரும் அவமானத்தையும் சந்திக்க வேண்டிய அவல நிலை காணப்படுவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

ஆலயத்தினதும், தீர்த்தக் கரையினதும் புனிதத்தன்மையைப் பேணுமாறு கோருபவர்கள் இந்தப் புனிதத்தை ஏனோ காணாது விட்டு விட்டுள்ளனர் எனப் பலரும் கேள்வி எழுப்புகின்றனர்.

இது விடயம் குறித்து வலி. வடக்குப் பிரதேச சபையினரோ, கீரிமலைப் பொலிஸாரோ எந்த நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை. இந்த வியாபா ரத்திற்கு வரி கூட அறவிடுவதில்லை. வரி அறவிடாதுவிட்டாலும், வருவோருக்கு இடையூறு இல்லாது இருந்தால் போதும் என இங்கு வருவோர் கவலை தெரிவிக்கின்றனர்.

நிம்மதியாக பிதிர்க்கடனைக் கூட செய்ய முடியவில்லையே என வெளிநாட்டிலிருந்து வந்து தாய், தந்தையருக்குப் பிதிர்க் கடன் செய்ய வந்த பலரும் கவலை தெரிவித்தனர்.

இதற்கு உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனச் சம்பந்தப்பட்டோரை மக்கள் கோருகின்றனர்.

## காரைதீவு...

ராசா ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மாவை சேனாதிராசாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் செல்லையா இராசையா அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

காரைதீவு பிரதேச சபையின் தவிசாளராகிய நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு அதிகப்படியான வாக்குகளைப் பெற்று தவிசாளராக நியமிக்கப்பட்டேன்.

இந்த நிலையில் எமது பிரதேசசபையின் செயற்பாட்டுக்கு பிரதேச சபையில் உள்ள ஏனைய மூன்று உறுப்பினர்களும் எனக்கு எதுவித ஒத்துழைப்புகளையும் வழங்குவதில்லை. பிரதேச சபை யின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்புத் தரமால் தொடர்ந்து குழப்ப நிலைகளை ஏற்படுத்திவருகின்றனர்.

இது தொடர்பில் கடந்த காலத்தில் பல தடவைகள் எமது கட்சி. தலைமையின் கவனத்துக்கு கொண்டுசென்ற போதிலும் இது தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே தொடர்ந்து செயற்பட முடியாத நிலையில் எனது பதவியை இராஜினாமா செய்கிறேன். எனினும் கட்சியோ, மக்களோ நான் மீண்டும் தவிசாளராக கடமையாற்றுமாறு தீர்மானித்தால் கடமையாற்றவும் தயாராகவுள்ளேன் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற சபையின் வரவு-செலவுத்திட்டம், உறுப்பினர்களின் எதிர்ப்பினால் இரண்டு முறை தோற்கடிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

## புதிய அரசியல்...

இவ்வாறு கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அடுத்த வருடத்தில் அரசியல் அமைப்பு சீர்திருந்தங்களுக்கான அழுத்தங்களை ஜனநாயக இடதுசாரி முன்னணி கொடுக்கும்.

அரசியல் அமைப்பு சீர்த் திருந்தங்களுக்கு அழுத்தம் கொடுக்கும் அதேவேளையில், ஜனநாயக இடதுசாரி முன்னணி தற்போதைய தேர்தல் முறையையும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையையும் எதிர்க்கின்றது.

எமது கட்சி இதற்கான உறுதியான முனைப்புகளை மேற்கொள்ளும். மக்களின் தீர்மானத்திற்கு அமைய நாடு நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவித்தார்.

## இலங்கை...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'சனல்4 தொலைக்காட்சியின் காணொலிகள் போலியாக தயாரிக்கப்பட்டவை. அதனை தொழில்நுட்ப ரீதியாக ஆய்வு செய்யும் போது அது உறுதியாகியது. இந்த உண்மை நிலைமையை மக்கள் தற்போது அறிந்து கொண்டுள்ளனர்.

தொழில்நுட்பத்தை மனித சமூகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பயன்படுத்த முடியும். இலங்க்க போன்ற நாட்டின் ஸ்திரமான நிலைமைக்கு அது சேதத்தை ஏற்படுத்தக் கூடும்.

சில அமைப்புகள் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி வருகின்றனஎன்றார்.

## பொது வேட்பாளராக...

மங்கள சமரவீர இந்த முயற்சியை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. பொல்கொடவில் அமைந்துள்ள மங்களவின் வீட்டில் நடைபெற்ற சந்திப்பின் போது இது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, சந்திரிகா, கரு ஜயசூரிய, திஸ்ஸ அத்தநாயக்க உள்ளிட்ட பலரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்திரிகாவை பொது வேட்பாளராக நியமிக்கும் திட்டத்தை இரகசியமாகப் பேணத் தீர்மானிக்கப்பட்ட போதிலும் ஊடகங்களுக்கு கசிந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### உறுதிமொழி வழங்கப்பட்டதை அடுத்து

# கல்விசார ஊழியர்களின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

யாழ். பல்கலைக்கழக ஊழியர்களின் உண்ணாவிரத போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழகத்தில் அமைய அடிப்படையில் கடமையாற்றி வந்த ஊழியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் கோரி பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலுக்கு அருகில் நேற்றுமுன்தினம் முதல் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.



நேற்றைய தினம் பல் கலைக் கழக பேரவை உறுப்பினர்கள் வழங்கிய உறுதி மொழியை அடுத்து, மாலை 5.30 அளவில் இவர்கள் தமது போராட்டத்தை கைவிட்டனர்.

அது தொடர்பாக பேரவை உறுப்பினர் சட்டத்தரணி ரங்கன் தெரிவிக்கையில்..

இந்த ஊழியர்களின் பிரச்சினை தொடர்பாக நேற்றைய பேரவை கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. அதில் இவர்களின் கோரிக்கை நியாயமானது எனவும் இவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. அதன் அடுத்த கட்டமாக பேரவை உறுப்பினர் களான நான் (சட்டத்தரணி ரங்கன்) முன்னாள் ஹாட்லி கல்லூரி அதிபர் சிறீபதி மற்றும் வாழ் நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை ஆகிய மூவரும் இவர்களுக்கு உதவியாக செயற்படுவோம்.

முதல் கட்டமாக இவர்களின் பெயர் விபரங்களை உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவுக்கு அனுப்பி வைப்பது எனவும், வரும் காலத்தில் பல்கலைக்கழகத்தில் காணப்படும் கல்வி சாரா ஊழியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பும் போது இவர்களே முன்னுரிமை அடிப்படையில் உள்வாங்கப்படுவார்கள் எனவும், இவர்களுக்கு நாம் இன்று உறுதி மொழி வழங்கியதை அடுத்து போராட்டத்தை கைவிட்டுள்ளார்கள் என தெரிவித்தார்.

அதேவேளை இன்று மதியம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர் ஒருவர் மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். யாழ். குருநகரை சேர்ந்த அன்ரன் ஜான்ஸ்போ (வயது 20) என்னும் ஊழியரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# சரியான தலைமைத்துவம் வெற்றியை கொண்டுவரும்

### என்கிறார் ஐ.தே.க.சுஜீவ எம்.பி

ஐக்கிய தேசியக் கட்சி விரைவில் ஆட்சிக்கு வரும் நிலைமையை உணர்வதாக அந்தக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் ஏற்கனவே வீழ்ச்சியடைந்துள்ளது. மக்கள் எதிர்பார்க்கும் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தினால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆட்சியை பிடிக்க முடியும்.

இதற்கு கூட்டணிகள் அவசியமில்லை. சரியான தலைவர் கட்சியில் உருவானால் எம்மால் வெற்றி பெற முடியும். பலமான தலைவர் ஒருவரினால் மட்டுமே இந்த சுமையை சுமக்க முடியும். அவர் தளராது ஐக்கிய தேசியக் கட்சியில் இருப்பவராக இருக்க வேண்டும்.

ரணில் விக்ரமசிங்கவுக்கு இந்த தகுதி இருக்கின்றது. ஆனால் அவர் வெற்றி பெற இருபது வருடங்கள் இருந்தது. ஆனால் அவரால் வெற்றிபெற முடியவில்லை.

ஒரு முறை அல்லது இரண்டு முறை முயற்சித்து பார்த்து விட்டு இன்னுமொருவருக்கு சந்தர்ப்பத்தை கொடுக்க வேண்டும். அதற்கு தகுதியானவராக சஜித் பிரேமதாச இருக்கின்றார் என்றார்.

# சமநிலையாகுமா? டேர்பன் டெஸ்ட்

டேர்பனில் நடைபெற்றுவரும் இந்திய-தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் தென்னாபிரிக்க அணி 5 விக்கெட் இழப்பிற்கு 299 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

முன்னதாக நேற்று முன் தினம் இரண்டாம் நாள் ஆட்டத்தின் இரண்டாம் பகுதியின் போது நான்கு விக்கெட்டுக்களையும் இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிற்பாதி ஆட்டத்தில் இந்திய விக்கெட்டுக்கள் மளமளவென சரிக்கப்பட்டன. இறுதியில் இந்திய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 334 ஓட்டங்களை பெற்றது. இதில் ரகானே ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களை எடுத்தார் ஸ்ரேயின் ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

அதன்பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய தென் ஆபிரிக்க அணி, ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 82 ஓட்டங்களை எடுத்திருந்தது. கப்டன் ஸ்மித் 35 ஓட்டத்துடனும் பீட்டர்சன் 46 ஓட்டத்துடனும் களத்தில் இருந்தனர்.

நேற்றைய 3ஆம் நாள் ஆட்டம் நடைபெற்றது. தொடர்ந்து விளையாடிய ஸ்மித்தை சிறிது நேரத்தில் வெளியேற்றினார் ஜடேஜா. சேர்த்தார். அவரையடுத்து வந்த அம்லாவை (3) முகமது ஷமி விரைவில் அவுட் ஆக்கினார். ஜடேஜா வீசிய அடுத்த ஓவரின் முதல் பந்திலேயே பீட்டர்சன் (62) ஆட்டமிழந்தார்.

ஆனால், 4ஆவது விக்கெட்டுக்கு இணைந்த கலிஸ் டிவில்லியர்சும் நிலைத்து நின்றதால் அணியின் ஸ்கோர் மளமளவென உயர்ந்தது. இருவரும் அரை சதம் கடந்தனர். நீண்ட போராட்டத்திற்குப் பிறகு டிவில்லியர்சை(74) அவுட் ஆக்கி இந்த ஜோடியை பிரித்தார் ஜடேஜா. அணியின் ஸ்கோர் 298ஐ தொட்டபோது 28 ரன்களில் எல்.பி.டபுள்யூ. ஆகி பெவிலியன் திரும்பினார் டுமினி.

இதனால் 3ம் நாள் ஆட்ட நேர முடிவில் தென் ஆபிரிக்க அணி 5 விக்கெட் இழப்பிற்கு 299 ரன்கள் எடுத்துள்ளது. கலிஸ் 78 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். இன்றைய ஆட்டத்தின்போது ஜடேஜா 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இன்று 4ஆம் நாள் ஆட்டம் நடை பெறும்.

# வவுனியா தனியார் பேருந்துச் சேவை முடிவுக்கு வந்தது பணிப் பகிஷ்கரிப்பு

வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினரால் தூர இடங்களுக்கான போக்குவரத்தை நிறுத்தும் பகிஸ்கரிப்பு போராட்டம் நேற்று மாலை முடிவுக்கு வந்துள்ளதாக, வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.ரி.கே. இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

பரந்தன் ஊடாக முல்லைத்தீவுக்கு சென்ற வவுனியா சங்கத்தை சேர்ந்த பஸ்களை பரந்தன் சந்தியில் கிளிநொச்சி பஸ் உரிமையாளர்கள் நேற்றைய தினம் மறித்து வைத்துள்ளனர் எனவும் அவற்றை விடுவிக்க வேண்டும் எனவும் தெரிவித்து வவுனியா பஸ் உரிமையாளர் சங்கத்தினால் தூர இடங்களுக்கான பஸ் பகிஸ்கரிப்பு இடம் பெற்றது.

இதன் காரணமாக மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகியிருந்தனர். இதேவேளை அரச பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

எனினும் இந்த பஸ்களில் மக்கள் முண்டியடித்து ஏறமுற்பட்டதால், வயோதிபர்கள், குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகியிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று மாலை வட மாகாண பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைவர்களுக்கிடையில் ஏற்பட்ட கலந்துரையாடலின் அடிப்படையில் பகிஸ்கரிப்பு முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று முன் தினம் வவுனியா தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தால் முறைகேடான விதத்தில் சில இடங்களுக்கு சேவை இடம் பெறுவதாகவும், இதனை தடுத்து நிறுத்த வேண்டும் எனக் கோரி வவுனியா மாவட்டம் தவிர்ந்த வட மாகாணத்தை சேர்ந்த ஏனைய மாவட்ட தனியார் பஸ்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது

# தமிழக மீனவர் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு ஏற்படும்

### பிரதமர் மன்மோகன் உறுதியளிப்பு

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு மத்திய அரசு தீர்வு காணும் என தன்னை சந்தித்த மீனவப் பிரதிநிதிகளிடம் பிரதமர் மன்மோகன் சிங் உறுதி அளித்துள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி நாகப்பட்டினத்தைச் சேர்ந்த 110 மீனவர்களும், ஜெகதாப்பட்டினம் மீனவர்கள் 30 பேரும் 140 பேரை இலங்கை கடற்படையினர் கைதுசெய்தனர்.

இலங்கை சிறையில் இருக்கும் தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரி நாகை மீனவர்கள் கடந்த 21 முதல் 24 வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டனர்.

இந்நிலையில், நாகை, புதுக்கோட்டை, காரைக்கால் மீனவர்களை விடுவிக்கக் கோரி அப்பகுதி மீனவப் பிரதிநிதிகள் பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று சந்தித்தனர். இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்கக்கோரி மனு கொடுத்தனர்.

இதைத்தொடர்ந்து, மீனவப் பிரதிநிதிகளிடம் பேசிய பிரதமர் மன்மோகன்சிங், தமிழக மீனவப் பிரச்சினைக்கு சுமுக தீர்வு ஏற்படும் எனக் கூறியதாக தெரிகிறது.

# பாவனைக்கு உதவாத மருந்துகள் வைத்தியசாலைகளுக்கு விநியோகம்

### கண்டறிந்தது சுகாதார அமைச்சு

(கொழும்பு)

கடந்த 22 மாதங்களில் அரச வைத்தியசாலைகளுக்கு விநியோகம் செய்யப்பட்ட 202 வகை மருந்துகள் மற்றும் ஊசி மருந்துகள் தரம் குறைந்தவை என சுகாதார அமைச்சு கண்டறிந்துள்ளது.

தேசிய மருந்துகள் அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள 71 நிறுவனங்கள் இந்த மருந்துகளை வைத்தியசாலைகளுக்கு விநியோகித்துள்ளதுடன் அவை தரம் குறைந்தவை என உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் பாவனையில், இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு அப்புறப்படுத்தப்பட்ட 32 ஊசி மருந்துகளும் ஏற்கனவே பல முறை தரம் குறைந்த மருந்து என பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தவை என தெரிய வந்துள்ளது.

இந்த மருந்து வகையில் சிலவற்றில் கண்ணாடி துகள்கள், தூசிகள் போன்ற கழிவுப் பொருட்கள் அடங்கியிருந்தமை கண்டறியப்பட்டுள்ளன.

இவ்வாறு பாவனையில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட மருந்து வகைகளில் நீரிழிவு, கொழுப்பு, உயர் இரத்த அழுத்தம், வாந்தி போன்ற நோய்களுக்கு பரவலாக பயன்படுத்தப்படும் மருந்துகள் எனவும் தெரியவருகிறது.

# வறியவர்களை கண்டறிய அடுத்தவருடம் கணக்கெடுப்பு

(கொழும்பு)

நாட்டில் வறியவர்களை கண்டறியும் நோக்கில் அரசாங்கம் மற்றுமொரு கணக்கெடுப்பை நடாத்த உள்ளது. இலங்கை புள்ளி விபரவியல் திணைக்களம் இந்த கணக்கெடுப்பை நடாத்த உள்ளது, எதிர்வரும் ஆண்டின் முதல் காலாண்டு பகுதியில் இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.

நாட்டின் தற்போதைய காலத்தில் மக்களின் வறுமை நிலைமை குறித்து கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது, குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு வட்டியில்லா கடன் வழங்கும் நோக்கிலும் இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வறிய மக்களுக்கு நலன் திட்டங்களை வழங்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

# நாடு திரும்பினார் மகா தமிழ்பிரபாகரன்

விசா நடைமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டுக் கமைய கைதுசெய்யப்பட்ட தென்னிந்திய ஊடகவியலாளர் மகா தமிழ் பிரபாகரன், நேற்று மாலை சென்னைக்கு திரும்பியதை உறுதிப்படுத்தியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

நேற்று மாலை 6.45 மணிக்கு சென்னைக்கு புறப்பட்ட விமானத்திலேயே மகா தமிழ்பிரபாகரன் திருப்பியனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 டிசம்பர் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.